தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:138 | 03-12-2025 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# எஸ்.ஐ.ஆர்.விவகாரம்: மக்களவையில் டிச.9,10-ம் தேதி விவாதம்

**புதுடெல்லி, டிச.3:**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த விவகாரத்தை எதிர்க்கட்சிகள் எழுப்பியது. அமளியுடன் தொடங்கிய நாடாளுமன்றம் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. அமளிக்கு இடையே மணிப்பூர் ஜிஎஸ்டி மசோதா, புகையிலை பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கும் மசோதா ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக இன்றும் நாடாளுமன்றம் முடங்கியது. மக்களவை இன்று காலை 11 மணிக்கு கூடியது. அவைக்கு வந்த ஜார்ஜியா நாட்டு எம்.பி.க்கள் குழுவை சபாநாயகர் ஓம்.பிர்லா வரவேற்றார். அதை தொடர்ந்து கேள்வி நேரத்தை தொடங்கினார். அப்போது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதனை சபாநாயகர் ஏற்க மறுத்தார். இதைதொடர்ந்து அவர்கள் சபையின் மைய பகுதிக்கு வந்து எஸ்.ஐ.ஆர். தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று தொடர்ந்து கோஷங்களை எழுப்பினார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களை அமைதி காக்குமாறு சபாநாயகர் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அவர்கள் தங்களது கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தினர். இதனால் ஏற்பட்ட அமளியால் அவையை 12 மணி வரை சபாநாயகர் ஓம்.பிர்லா ஒத்திவைத்தார். 12 மணிக்கு பிறகு அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சிகள் இதே பிரச்சினையை தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

அப்போது நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜ்ஜு கூறும்போது,

எதிர்க்கட்சி தலைவர்களை எஸ்.ஐ.ஆர் தொடர்பான விவாதத்திற்கு அழைத்துள்ளோம். பல முக்கியமான பிரச்சினைகள் உள்ளனர். ஒரு பிரச்சினை மற்றவற்றை விட அதிகமாக இருக்க முடியாது. இதனால் அவை செயல்படட்டும் என்றார். ஆனாலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் சபாநாயகர் 2 மணி வரை அவையை மீண்டும் ஒத்திவைத்தார். தொடர்ந்து 2 மணிக்கு கூடிய அவை எதிர்க்கட்சிகள் அதே பிரச்சினையை முன்வைத்தனர். எஸ்ஐஆர் குறித்து உடனடியாக விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் எம்.பி.,க்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக கிரண் ரிஜ்ஜு கூறுகையில், தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்க அரசு தயாராகவே உள்ளது. ஆனால், எதிர்க்கட்சிகள் காலக்கெடு விதிக்கக்கூடாது எனக்கூறியிருந்தார். தொடர்ந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன.

இந்நிலையில் மக்களவை சபாநாயகர் ஓம்.பிர்லா தலைமையில் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டம் நடந்தது.

இதன் பின்னர், வந்தே மாதரம் இயற்றி 150 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு மக்களவையில் வரும் 8 ம் தேதி விவாதம் நடக்க உள்ளது. 10 மணி நேரம் நடக்கும் இந்த விவாதத்தை பிரதமர் மோடி துவக்கி வைக்க உள்ளார்.

மறுநாள் 9 ம் தேதி (செவ்வாய்க்கிழமை) எஸ்.ஐ.ஆர். உள்ளிட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து விவாதம் நடக்கும்.

இதற்கும் 10 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மறுநாள் ( டிச.,10) மத்திய மந்திரி அர்ஜுன் ராம் மேவால் விவாதத்துக்கு பதில் அளிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## இன்றைய பஞ்சாங்கம்

03.12.2025 கார்த்திகை 17
புதன் கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று பிற்பகல் 10.13 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று மாலை 4.47 வரை பரணி பின்பு கார்த்திகை.

யோகம் :
இன்று மாலை 4.13 வரை பரிகம் பின்பு சிவம்.

கரணம் :
இன்று காலை 10.13 வரை தைதுலம் பின்பு இரவு 9.04 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று மாலை 4.47 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 4.47 வரை அஸ்தம் பின்பு சித்திரை

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45.

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

இன்று திருக்கார்த்திகை தீபம்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பிரதமர் அலுவலகத்திற்கு 'சேவை இல்லம்' என பெயர் மாற்றப்பட உள்ளதாக தகவல்



**புதுடெல்லி, டிச.3:**

டெல்லியில் உள்ள பிரதமர் அலுவலகம், 'சேவா தீர்த்' என பெயர் மாற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சென்ட்ரல் விஸ்டா மறுவடிவமைப்பு திட்டத்தின் கீழ், டெல்லியில் மத்திய அரசின் துறைகளுக்காக புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பிரதமர் அலுவலகம், பல்வேறு அமைச்சகங்கள் ஆகியவை புதிய கட்டிடங்களுக்குச் செல்ல உள்ளன. இந்நிலையில், அங்குள்ள புதிய பிரதமர் அலுவலகத்துக்கு சேவா தீர்த் என பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சேவைகளை வழங்கும் புனித இடம் என்ற பொருள்படும்படி இந்த பெயர் வைக்கப்பட உள்ளது.

சேவைகளை வழங்கும் புனித இடம் என்ற பொருள்படும்படி இந்த பெயர் வைக்கப்பட உள்ளது. குடிமக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நிர்வாகம் என்பதை உணர்த்தும் வகையிலும், பிரதமர் அலுவலகம் என்பது அதிகார மையம் அல்ல, அது புனித சேவைக்கான மையம், அதாவது சேவை இல்லம் என்பதை உணர்த்தும் வகையிலும் இந்த பெயர் மாற்றத்துக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. முன்னதாக, டெல்லியின் ராஜ் பத் என்பதை கர்த்தவ்ய பத் (கடமைப் பாதை) என பெயர் மாற்றப்பட்டது. அதேபோல், சமீபத்தில் ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்களின் இல்லங்களுக்கான பெயர்கள் லோக் பவன் மற்றும் லோக் நிவாஸ் ( மக்கள் பவன் மற்றும் மக்கள் நிவாஸ்) என பெயர் மாற்றப்பட்டது.

# மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 20,000

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் அறிவிப்பு

**சென்னை, டிச.3:**

தமிழகத்தில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

இது குறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கனமழையால் தமிழகம் முழுவதும் 85,521.76 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும். பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணக்கெடுப்புக்கு பின்னர் உரிய நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணத்தை உடனடியாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 582 கால்நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன.



மயிலாடுதுறை மற்றும் விழுப்புரத்தில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் சுவர் இடிந்து விழுந்து இருவர் இறந்துள்ளனர்.

அரசு மற்றும் தனியார் வானிலை ஆய்வு மைய கணிப்புக்குள் இந்த மழை வரவில்லை. சென்னையில் தோராயமாக 15 செ.மீ மழை பெய்துள்ளது. சென்னையில் சாலைகளில் விழுந்த 27 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கார்த்திகை தீபத்திருவிழா: திருவண்ணாமலை மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை

**திருவண்ணாமலை, டிச.3:**

திருவண்ணாமலையில் உலகப்புகழ் பெற்ற அண்ணாமலையார் கோவில் உள்ளது. இங்கு கார்த்திகை தீபத்திருவிழா மிகவும் பிரசிதி பெற்றதாகும்.

இதனிடையே, அண்ணாமலையார் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழாவின் சிகர நிகழ்வான மகா தீபதிருவிழா இன்று நடைபெற உள்ளது.

இந்நிலையில், கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி திருவண்ணாமலை மாவட்டத்திற்குள் இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பக்தர்கள் இன்று மலையேறவும் தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

# டிஜிட்டல் கைது முறைகேடு வழக்குகளை சிபிஐ விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி**, டிச.3:

நாடு முழுவதுமான டிஜிட்டல் கைது முறைகேடு வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டிஜிட்டல் கைது முறைகேடுகள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து பதிவுசெய்த வழக்கை, தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் நேற்றைய விசாரணைக்கு பிறகு தலைமை நீதிபதி அமர்வு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

டிஜிட்டல் கைது முறைகேடு வழக்குகளை முதலில் சிபிஐ விசாரிக்க வேண்டும். சைபர் குற்றங்கள் தொடர்புடைய வழக்குகளை படிப்படியாக சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். டிஜிட்டல் கைது முறைகேடுக்கு துணைபோகும் வகையில் வங்கிக் கணக்கு தொடங்க உதவிய வங்கி அதிகாரிகளையும் சிபிஐ விசாரிக்க வேண்டும். போலியான வங்கிக் கணக்குகளை கண்டறிய ஏஐ உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். இது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் வகையில் இந்த விவகாரத்தில் ரிசர்வ் வங்கியை இணைக்கிறோம்.இந்த விசாரணைக்கு தொலைத் தொடர்பு நிறுவனங்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். பஞ்சாப், தமிழ்நாடு, உத்தராகண்ட், ஹரியாணா போன்ற மாநிலங்கள் சிபிஐ விசாரணைக்கு இசைவளிக்க வேண்டும்.



அந்தந்த மாநிலங்களில் சைபர் குற்றப் பிரிவு முழுமையாக இயங்குவதில் உள்ள சிக்கல்களை அறிக்கையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அடுத்த விசாரணைக்குள் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

மேலும், தொலைத் தொடர்பு அமைச்சகத்தின் சார்பில் ஆஜராக வேண்டும்.

டிஜிட்டல் கைது முறைகேடுகளில் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து ரூ.3 ஆயிரம் கோடி மோசடி செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இந்த விவகாரத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்காவிட்டால் டிஜிட்டல் கைது முறைகேடுகள் பூதாகரமாகும். இவ்வாறு அந்த உத்தரவில் கூறியுள்ளனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES


## திருக்குறள் குறள்-458

மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து



மனதின் நன்மையை
உறுதியாக
உடையவராயினும்
சான்றோர்க்கு இனத்தின்
நன்மை மேலும் நல்ல
காவலாக அமையும்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்ந்தவனுக்கு அவனுடைய
அனுபவம் பதில்
சொல்லும்....
வாழ்பவனுக்கு
அவன் காலம் பதில்
சொல்லும்.....
வாழப் போகிறவனுக்கு
அவன் மனம் பதில்
சொல்லும்....

**உஷா முத்துராமன்**

## கார்த்திகை மாத சோமவாரம் 108 சங்குகள் சிறப்பு பூஜை



கடலூர் மாவட்டம் புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீ பாண்டுரங்கர் பஜனை மடத்தில் கார்த்திகை மாதம் சோமவாரத்தை முன்னிட்டு 108 சங்குகள் பூஜை வேத மந்திரங்கள் ஒலிக்க, ஹோமங்கள் வளர்த்து, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாரதனையும் நடைபெற்றது.ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் சங்கு பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கார்த்திகை தீபத் திருவிழா 8-ஆம் நாள் இரவு உற்சவம்



திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு பஞ்சமூர்த்திகள் சுவாமி எட்டாம் நாள் இரவு குதிரை வாகனத்தில் வேத மந்திரங்கள் ஒலிக்க, மேள தாளங்களுடன், காந்தி சிலை அருகில் வான வேடிக்கையுடன் மாட வீதி உலா நடைபெற்றது. மற்றும் பிச்சாண்டவர் அலங்காரத்துடன் உற்சவமும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாட வீதி உலாவில் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## இல்லங்கள் தோறும் தீபம்



திருக்கார்த்திகை தீபத்தை முன்னிட்டு தி நகர் தொகுதியில் இல்லங்கள் தோறும் தீபங்களை பாஜக செயலாளர் வினோஜ்செல்வம் வழங்கினார் .




நாகர்கோவிலில் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தில் நேற்று நடந்த தேர் பவனியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள்



**வந்தவாசி, டிச 03:**
திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், வந்தவாசி அடுத்த கண்டவராட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கற்றல் திறன் செயல்பாட்டு பல்திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் ப.சக்ரவர்த்தி (பொ) தலைமை தாங்கினார்.

ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், கலாம் பவுண்டேசன் நிர்வாகி சீ.கேசவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆசிரியர் துரைராஜன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி பங்கேற்று, மாணவர்களுக்கான ஒழுக்க நெறிகளை பற்றியும், கற்றல் திறன் விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார்.

மேலும் வட்டார அளவில் நடைபெற்ற கலைத் திருவிழா போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் ரேவதி, தினேஷ், சமூக ஆர்வலர் முகமது ஜியா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் ஆசிரியர் செல்வக்குமார் நன்றி கூறினார்.

## 18 ஆழ்வார்களுக்கு 108 போர்வை சாற்றும் வைபவம்



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் கைசிக ஏகாதசியை முன்னிட்டு ஆண்டாள், ரெங்கமன்னார், பெரிய பெருமாள் மற்றும் 18 ஆழ்வார்களுக்கு 108 போர்வை சாற்றும் வைபவம் நடந்தது.

## தஞ்சாவூர் ரயில் நிலையம் 165-ம் ஆண்டு கொண்டாட்டம்



தஞ்சாவூர் ரயில் நிலையம் 164 ஆண்டுகளைக் கடந்து 165-ம் ஆண்டில் நேற்று நுழைந்தது. இதையொட்டி, ரயில் நிலையத்துக்கு நேற்று வந்த பயணிகளுக்கு, ரயில் பயணிகள் சங்கத்தினர் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

## ஆட்டோ ஓட்டுநர்கள் நலம் காக்க கையெழுத்து இயக்கம்




திருச்செந்தூரில் இந்து ஆட்டோ தொழிலாளர் முன்னணி சார்பில் ஆட்டோ ஓட்டுநர்கள் நலம் காக்க கையெழுத்து இயக்கம் நடந்தது.

## பனை விதைகள் சேகரிப்பு




திருச்செந்தூர் பகுதியில் லீடு டிரஸ்ட் தொண்டு நிறுவன இயக்குநர் எஸ்.பானுமதி தலைமையில மதர் மகளிர் சுய உதவி குழு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பனை விதைகள் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## சபரிமலையில் 15 நாளில் 14 லட்சம் பக்தர்கள் தரிசனம்



**திருவனந்தபுரம் ,டிச.3**
சபரிமலையில் 15 நாட்களில் ரூ.92 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
* இது கடந்தாண்டை விட மூன்றில் ஒரு பங்கு அதிகம்.
*இந்த வருவாயில் பெரும்பகுதி அரவணை (பாயாசம்) பிரசாதம் விற்பனை மூலம் கிடைத்துள்ளது . ஐக்
* உண்டியல் மூலம் கிடைத்த காணிக்கை 26 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டை விட 18 சதவீதம் அதிகம்.
*நடை திறந்த நாள் முதல் இதுவரை 14 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

## மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கடன்



காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மாணவ, மாணவிகளுக்கு ரூ.1.81 கோடி கல்விக்கடன்களை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்.

## அருள்மிகு அண்ணாமலையார் ராஜகோபுரம் முன்பு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் திறப்பு விழா





**திருவண்ணாமலை, டிச.03:**
அருள்மிகு அண்ணாமலையார் ராஜகோபுரம் முன்பாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

உடன் மாண்புமிகு சட்டமன்றத் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் அவர்கள், அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை துவக்கி வைத்தார்கள். நவீன சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் பௌர்ணமி, திருவிழா நாட்களில் மூன்று வேளையும் குடிநீர் நிலையம் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செஞ்சி தொகுதி கள ஆய்விற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை




**விழுப்புரம்,டிச.03:**
விழுப்புரம் மாவட்டம் வடக்கு திமுக செயற்குழு அவசர ஆலோசனைக் கூட்டம் செஞ்சி அருகில் சஞ்சனா பேலஸ் திருமணமண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ கழக ஆக்கப்பணிகள் குறித்தும் செஞ்சி சட்மன்றத் தொகுதியிக்கு 05.12.2025 மாலை வெள்ளிக்கிழமை அன்று வருகைத் தர உள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,யிக்கு பிரமாண்ட வரவேற்பு அளிப்பதைக் குறித்தும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி மாவட்ட ஒன்றிய கழக அனைத்து அணிகள்முக்கிய நிர்வாகிகளுக்கும் எழுச்சி சிறப்பு உரையை ஆற்றினார்.

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம்



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருவெறும்பூர் மலைக்கோவில் அருகே நேற்று தீப்பந்தம் ஏற்றி போராட்டம் நடந்தது.

## மாதம் இரு சனிக்கிழமை விடுமுறை

**சென்னை, டிச.3:**

மின் வாரியத்தின் வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் 5,120 மெகாவாட் திறனில் 5 அனல் மின் நிலையங்கள் உள்ளன. இதுவரை அனைத்து சனிக்கிழமை களும் வேலை நாளாக இருந்த நிலையில், தொழிற் சங்கங்களின் தொடர் கோரிக்கையை ஏற்று இந்த மாற்றம் செய்யப் பட்டுள்ளது. வாரிய அலு வலகங்கள், மின் கட்டண மையங்களுக்கு 2018 மார்ச் முதல் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகள் விடு முறையாக இருந்தன. இனி அனல் மின் நிலைய ஊழியர்களுக்கும் இதே விடுமுறை வழங்கப்படும். பணி நேரம் காலை 8:30 முதல் மாலை 5:45 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 8,119 கோடியிலான கோவில் நிலங்கள் மீட்பு

**சென்னை, டிச.3:**

தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு, 8 ஆயிரத்து 119 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 8 ஆயி ரம் ஏக்கர் கோவில் நிலங்கள் மீட்கப் பட்டுள்ளதாக என தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை அமைச் சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தர்ஹா அருகில் கார்த்திகை தீபம்

**சென்னை, டிச.3:**

மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில், தர்ஹா அருகே கார்த்திகை தீபம் ஏற்றலாம் என்று நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் தீர்ப்பளித்துள்ளார். திருப்பரங்குன்றம் மலையிலுள்ள பிள்ளையார் கோவில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தான் வழக்கம் என்று திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகம் தரப்பில் வாதங்களை எடுத்து வைத்த போதும், இந்து தமிழர் கட்சியைச் சேர்ந்த ராம ரவிக்குமார் என்பவரின் கோரிக்கை மனுவை ஏற்று, மலை உச்சியில் தர்ஹா அருகே கார்த்திகை தீபத்தை ஏற்றலாம் என்று தீர்ப்பளித்துள்ள ஜி.ஆர். சுவாமிநாதன், காவல்துறை இதற்கு முழு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

## மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு சார்பில் ஆர்ப்பாட்டம்

**கரூர், டிச.3:**

மின்சார சட்ட மசோதாவை திரும்ப பெற வேண்டும். நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய தொழிற்சங்கங்களின் கரூர் மாவட்ட கூட்டுக் குழு சார்பில், கரூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலச் செயலாளர் க.தனபால் தலைமை வகித்தார். சிஐடியு மாவட்டச் செயலாளர் எம்.சுப்பிரமணியன், எம்பாளய்ஸ் பெடரேசன் திட்ட தலைவர் விஜயகுமார், ஒர்க்ஸ் பெட்ரேசன் திட்டச் செயலாளர் பிரேமா, பொறியாளர் சங்கம் கரூர் திட்ட தலைவர் ம. சரவணகுமார், திட்டச் செயலாளர். கோபி, பொறியாளர் கழகம், திட்டச் செயலாளர் ரவிச்சந்திரன், ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் எம்.பால்ராஜ் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

## போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த வேண்டுகோள்

**மன்னார்குடி, டிச.3:**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி பெரியகடை தெருவில் முற்பகல் 10 மணியிலிருந்து இரண்டு மணி வரை நெருக்கடியான நிலை ஏற்படுவதால், பாதசாரிகள், வாகன ஓட்டிகள் சிரமமடைந்து வருகின்றனர். மன்னார்குடி போக்குவரத்து காவலர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள நிலையில், அன்றாடம் முழுநேரம் நிரந்தரமாக காவலர்களின் நியமனம் சாத்தியமில்லை என்றாலும், தினசரி முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை, மீண்டும் மாலை 4 மணியிலிருந்து, இரவு 7 மணி வரை போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினாலே, போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும். அப்போதுதான் மக்களின் நேரம், எரிபொருள் விரயம், சுற்றுச்சூழல் புகை மாசுபாட்டை தவிர்க்க முடியும். எனவே, போக்குவரத்து காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கருவில் இருக்கும் சிசுவின் பாலினம் கண்டறிந்து தெரிவிப்பு: போலி மருத்துவர் கைது



**வாழப்பாடி, டிச.3:**

தமிழகம் முழுவதும் நடமாடும் ஸ்கேன் பரிசோதனை மையம் நடத்திய போலி மருத்துவர் பிடிபட்டுள்ளார்.

இடைத்தரகர் உள்பட இரு பெண்களையும் மருத்துவக் குழுவினர் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

தமிழகம் முழுவதும் காரில் நடமாடும் ஸ்கேன் பரிசோதனை மையம் நடத்தி, கருவுற்ற பெண்களின் கருவில் இருப்பது ஆணா? பெண்ணா? எனத் தெரிவித்த போலி மருத்துவர் மற்றும் இடைத்தரகர் உள்பட மூவரை, மருத்துவக் குழுவினர் இன்று(டிச. 2) செவ்வாய்க்கிழமை பிடித்து வாழப்பாடி காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

தமிழகத்தில் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில், நவீன ஸ்கேன் இயந்திரத்தை காரில் வைத்துக் கொண்டு நடமாடும் ஸ்கேன் பரிசோதனை மையம் நடத்தி, ஒருவருக்கு ரூ.30,000 வரை கட்டணம் வசூலித்துக் கொண்டு, கருவுற்ற பெண்களின் கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? எனத் தெரிவித்து, ஒரு குழு தொடர்ந்து குற்றச் செயலில் ஈடுபட்டு வருவதாக மருத்துவக் குழுவுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இந்தக் குழு சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே பேளூரில் முகாமிட்டு கருவுற்ற பெண்களின் கருவில் இருக்கும் குழந்தையின் பாலினம் குறித்து தெரிவித்து வருவதாக மருத்துவத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சேலம் ஊரக மருத்துவ இணை இயக்குநர் நந்தினி தலைமையில், கிருஷ்ணகிரி மாவட்ட மருத்துவ அலுவலர் ரமேஷ்குமார், சேலம் சுகாதார மாவட்ட மருத்துவ அலுவலர் யோகானந்த், வாழப்பாடி வட்டார மருத்துவ அலுவலர் பொன்னம்பலம் ஆகியோர் கொண்ட மருத்துவக் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பேளூரில் முகாமிட்டனர்.

அப்போது, பேளூர் தனியார் திருமண மண்டபம் பின்புறம் உள்ள மாரியம்மாள் என்பவரது வீட்டிற்கு காரில் ஸ்கேன் கருவியை கொண்டு வந்த, விருதாச்சலம் பகுதியைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவர், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கருவுற்றிருந்த பெண் ஒருவருக்கு ஸ்கேன் செய்து கருவில் இருக்கும் குழந்தை பாலினம் குறித்து தெரிவித்துள்ளார்.


அப்போது அந்த வீட்டிற்குள் புகுந்து ஸ்கேன் பரிசோதனை செய்த வெங்கடேஷை கையும் களவுமாகப் பிடித்த மருத்துவக் குழுவினர், அவருக்கு இடைத்தரகராக செயல்பட்ட விலாரிபாளையத்தைச் சேர்ந்த பாலமுருகன் மனைவி லதா மற்றும் வீடு வாடகைக்கு கொடுத்த பேளூர் சக்திவேல் மனைவி மாரியம்மாள் ஆகிய மூவரையும் பிடித்து, செவ்வாய்க்கிழமை காலை வாழப்பாடி காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

தமிழகம் முழுவதும் நடமாடும் ஸ்கேன் பரிசோதனை மையம் நடத்தி குற்றச்செயலில் ஈடுபட்டு வந்த வெங்கடேஷ் 12ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்துவிட்டு போலி மருத்துவராக வலம் வந்தது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து வாழப்பாடி காவல் ஆய்வாளர் வேல்முருகன் தலைமையிலான போலீஸார், இந்தக் குழுவிடம் இருந்த ஸ்கேன் பரிசோதனை கருவிகள் மற்றும் கார் ஆகியவற்றை பறிமுதல் செய்து, மூவரிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் வாழப்பாடி பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

# பாரிமுனையில் அதிகபட்சமாக 254 மி.மீ. மழை பதிவு!





**சென்னை, டிச.3:**

வட தமிழகத்தை அச்சுறுத்தி வந்த டித்வா புயல் வலுவிழந்து, சென்னை அருகே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மையம் கொண்டது. இதன் விளைவாக ஞாயிற்றுக்கிழமை இரவு சாரலுடன் மழை பெய்யத் தொடங்கியது.

நள்ளிரவுக்குப் பின்னர் நகர் முழுவதும் பரவலாக மிதமான மழைத் தொடங்கியது. திங்கள்கிழமை காலை சென்னை நகர் முழுவதும், புறநகர் பகுதியிலும் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளிலும், சாலைகளிலும் தண்ணீர் தேங்கியது.

இந்த நிலையில், இன்று(டிச. 2) காலை நிலவரப்படி, கடந்த 24 மணி நேர முடிவில் பதிவான மழை அளவு:

அதிகபட்சமாக பாரிமுனையில் 254 மி.மீ., ஐஸ் ஹௌவுஸில் 231 மி.மீ, பேசின் பிரிட்ஜில் 207 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூரில் அதிகப்பட்சமாக 260.4 மி.மீ மழை பதிவாகியுள்ளது. பொன்னேரியில் 206 மி.மீ, செங்குன்றத்தில் 185 மி.மீ மழைப் பொழிந்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### கொழுப்பு கரைந்து, அடைப்பு நீங்கி, ரத்தம் எளிதாக ஓடணுமா?

ஒருவருக்கு இதயநோய் ஏற்பட்டால் அவர்களின் குருதிக் குழாய்கள் அடைபட்டிருக்கலாம். நம் குருதிக் குழாய்கள் ரத்தத்தை இதயத்திலிருந்து உடலின் ஒவ்வொரு செல்லுக்கும் கொண்டு செல்லும் நெடுஞ்சாலைகளைப் போன்றவை. இவை சுத்தமாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்தால் தான் ரத்தம் எளிதாக ஓடும். ஆனால், காலப்போக்கில் கொழுப்பு, கால்ஷியம், கழிவுப் பொருட்கள் சேர்ந்து ப்ளாக் ஆகும் போது பாதை நெருக்கடியாகி விடுகிறது. இதற்கு சிறந்த தீர்வாக பத்து உணவுகள் உள்ளன. இது குருதிக் குழாயின் அடைப்பை இயற்கையாக நீக்குகிறது. அவை என்னென்ன என்பதைப் பார்ப்போம்.



1. மஞ்சள்: இது உடலின் அழற்சியைக் குறைக்கும். சிறிது பசுமஞ்சளை பாலுடன் சேர்த்து கோல்டன் மில்க்காக உட்கொள்ளலாம். இத்துடன் சிறிது மிளகும் சேர்ப்பது நல்லது. மஞ்சளின் குர்குமின் அழற்சியை போக்கும்.

2. அவகேடோ: அவகேடோவில் மோனோ அன்சாசுரேடட் கொழுப்பு உள்ளது. இது எல்டிஎல்(LDL) என்ற கெட்ட கொழுப்பை(FAT LOSS) குறைத்து, நல்ல கொழுப்பை அதிகரிக்கிறது. மேலும் இதில் உள்ள பீடா சைடோஸ்டெரால் குடலில் கொழுப்பை உடல் உறிஞ்சுவதை தடுக்கும். இதன் பி வைட்டமின்கள் குருதிக் குழாய்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடிய ஹோமோசிஸ்டின் என்ற சேர்மத்தைக் குறைக்கும்.

3. ஆஸ்பராகஸ்: இதில் க்ளூடோதியோன் என்ற சக்திவாய்ந்த ஆன்டி ஆக்சிடண்ட் உடல் முழுவதும் உள்ள 100,000 மைல் நீளமான ரத்தநாளங்களை சுத்தப்படுத்த உதவுகிறது. கால்ஷியம் படிவங்களைக் தடுக்கிறது. உடல் அழற்சியைக் குறைக்கிறது.

4. மாதுளை: மாதுளையில் உள்ள பாலிஃபினால்கள் என்ற ஆன்டி ஆக்சிடண்ட்ஸ் கொழுப்பைக் குறைக்கும். மேலும் கெட்ட கொழுப்பைக் குறைக்கும்.

5. ப்ரோக்கோலி: இது இதயத்திற்கும் தேவையான பச்சை கவசம் என்று கருதப்படுகிறது. இதில் உள்ள சல்போராஃபேன் உடல் நச்சுக்கள், அழற்சி, ஆக்சிடேடிவ் அழுத்தம் ஆகியவற்றிலிருந்து காக்கும். குருதிக் குழாயை வலுவாக்கும். இதன் நார்சத்து கொழுப்பைக் குறைக்கும். இதன் சி,கே மற்றும் பி வைட்டமின்கள் இதயத்தைப் பாதுகாக்கும்.

6. சியா விதைகள்: சிறியதாக இருந்தாலும் பெரிய பலன் தரும். அளவு தினமும் 2 டீஸ்பூன். இதில் இயற்கையான ஒமேகா 3 கொழுப்பு அமிலம் உள்ளது. ரத்த அழுத்தத்தைக் குறைக்கும், கொழுப்பை உடலிலிருந்து வெளியேற்றும். ஸ்மூத்தி ஓட்ஸ் மற்றும் ஜூஸ்களில் சேர்த்து உட்கொள்ளலாம்.

7. இலவங்கப் பட்டை: இது ரத்தக் குழாய்களுக்கான இனிய மருந்து. இது கெட்ட கொழுப்பைக் குறைக்கும். ரத்தச் சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கும். காபி, டீ, ஓட்ஸ்களில் சேர்த்து உட்கொள்ளலாம்.

8. தர்ப்பூசணி: சுவையும் ஆரோக்கியமும் கொடுக்கும் இனிய நண்பன் அளவு 5 லிருந்து 6 கப் துண்டுகள். தர்ப்பூசணி மில் உள்ள சிட்ருலின் ரத்தக் குழாய்களை தளர்த்தும். ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். இதய அழுத்தத்தைக் குறைக்கும் மேலும் இதன் லைகோபீன் குருதிக் குழாய்களின் கடினத் தன்மையைக் குறைக்கும்.

9. கிரான் பெர்ரி: ரத்தக் குழாய்களை சுத்தம் செய்யும். புளிப்புச் சக்தி கொண்டது. ஒரு கப் உட்கொள்ளலாம். இது நல்ல மற்றும் கெட்ட கொலஸ்டிரால் இடையிலான சமநிலையை மேம்படுத்தும். ரத்தக் குழாயின் உட்சுவரை பாதுகாக்கும். அழற்சியை குறைக்கும்.

10. ஸ்பைருலினா: உடலுக்கு இயற்கை சக்தி ஊட்டி. ஒரு டேபிள் ஸ்பூன் தினமும் எடுத்துக் கொள்ளலாம். ஸ்பைருலினாவில் உள்ள காமா லினோலிக் அமிலம் குருதிக் குழாயின் அடைப்பைக் குறைக்கும். ரத்த அழுத்தத்தை சரி செய்யும் அதீத ஆன்டி ஆக்சிடண்ட்ஸ் நிறைந்தது. ஸ்மூத்தியில் சேர்த்து குடிக்கலாம்.

# கரூர் சம்பவம்: சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு எதிர்ப்பு!







**சென்னை, டிச.3:**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான சிபிஐ விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு செவ்வாய்க்கிழமை மனு அளித்துள்ளது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். 110 பேர் காயமடைந்தனர். இதுதொடர்பான வழக்கை விசாரிக்க சிபிஐ-க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து, கரூர் பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகையில் தங்கி சிபிஐ அதிகாரிகள் குழு கடந்த சில நாள்களாக பல்வேறு தரப்பினரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோக்கி தலைமையிலான ஐபிஎஸ் அதிகாரிகள் சோனல் மிஸ்ரா மற்றும் சுமித் சரண் உள்ளிட்டோர் அடங்கிய சிபிஐ விசாரணை குழுவினர் நேற்று கரூர் வருகை தந்துள்ளனர்.

இதனிடையே, உச்ச நீதிமன்றத்தில் தவெக தொடர்ந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் இன்று பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், "கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக அரசு மூத்த அதிகாரிகள் பேட்டி அளித்ததை காரணம்காட்டி, சிபிஐக்கு விசாரணை மாற்றப்பட்டுள்ளது.

விசாரணையை சிபிஐக்கு மாற்றுவதற்கு சட்டபூர்வ அடிப்படையாக அத்தகைய காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு பெரிய பேரிடரின் போது மீட்பு, நிவாரணம் மற்றும் விபத்து குறித்த தகவல்களைப் பற்றி பொதுமக்களிடம் விளக்கம் அளிக்க அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர்.

சட்டம் - ஒழுங்கு என்பது மாநிலப் பிரச்னை. மனுதாரரின் குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதரமற்றவை. கரூர் வழக்கில் புலனாய்வு விசாரணையில் எவ்வித குறைபாடும் நிரூபிக்கவில்லை.

இதனால், சிபிஐ விசாரணைக்கு மாற்றிய உத்தரவை ரத்து செய்து, சென்னை உயர்நீதிமன்றம் அமைத்த ஐ.ஜி. அஸ்ராகர்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு மற்றும் நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் விசாரணையைத் தொடர அனுமதிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது.

# தொழிலக உற்பத்தியில் 13 மாதங்கள் காணாத சரிவு!

பொள்ளாச்சி, டிச.3

வர்த்தக மற்றும் தொழி ல்துறை அமைச்சகம் வெளியி ட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்ப ட்டுள்ளதாவது: தொழிலக உற்பத்தி குறியீட்டு (ஐஐபி) அக்டோபரில் 0.4 சதவீதமாகப்பதிவாகியுள்ளது. முந்தைய 2024 அக்டோபரில் இது 3.7 சதவீதமாக இருந்தது.

மதிப்பீட்டு மாத ஐஐபி முந்தைய 13 மாதங்கள் காணாத குறைந்தபட்ச விகிதமாகும். இதற்கு முன்னர் 2024 செப்டம்பரில் அதுபூஜ்ஜியமாக இருந்தது. தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) செப்டம்பர் வளர்ச்சியை 4 சதவீதத்திலிருந்து 4.6 சதவீதமாக திருத்தியுள்ளது. 2024 அக்டோபரில் 4.4 சதவீதமாக இருந்த உற்பத்தித் துறை வளர்ச்சி இந்த அக்டோபரில் 1.8 சதவீதமாகக் குறைந்தது. சுரங்க உற்பத்தி 0.9 சதவீத வளர்ச்சியிலிருந்து 1.8 சதவீத சரிவைக் கண்டுள்ளது. மின்சார உற்பத்தி 2 சதவீத வளர்ச்சியிலிருந்து 6.9 சதவீத சரிவைப் பதிவு செய்துள்ளது.

2025-26-ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-அக்டோபர் காலகட்டத்தில் தொழிலக உற்பத்தி வளர்ச்சி 2.7 சதவீதமாகக் குறைந்தது. முந்தைய 2024-25-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இது 4 சதவீதமாக இருந்தது.

கடந்த அக்டோபரில் உற்பத்தித் துறையின் 23 தொழில் பிரிவுகளில் 9 பிரிவுகள் வருடாந்திர அடிப்படையில் நேர்மறை வளர்ச்சியைக் கண்டுள்ளன. மூலதனப் பொருள்கள் 2.9 சதவீதத்திலிருந்து 2.4 சதவீதமாக உயர்ந்தது. நீடித்துழைக்கும் நுகர்பொருள்கள் 5.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 0.5 சதவீத சரிவைப் பதிவு செய்துள்ளது. துரித நுகர்பொருள் பிரிவு 2.8 சதவீத வளர்ச்சியிலிருந்து 4.4 சதவீத சரிவைக் கண்டுள்ளது. உள்கட்டமைப்பு/கட்டுமானப் பொருள்கள் 4.7 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதமாக உயர்ந்தது. முதன்மைப் பொருள்கள் 2.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 0.6 சதவீத சரிவையும், இடைநிலை பொருள்கள் 4.8 சதவீத வளர்ச்சியிலிருந்து 0.9 சதவீதமாக உயர்வையும் கண்டன.

அக்டோபரில் அதிக மழை காரணமாக சுரங்கச் செயல்பாடு மற்றும் மின்தேவை பாதிக்கப்பட்டது. நிலக்கரி 8.5 சதவீதமும், மின்சாரம் 7.6 சதவீதமும் சரிந்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிதம்பரம் அருகே மழைநீரில் மூழ்கி 5,000 ஏக்கர் நெற்பயிர்கள் சேதம்!



கடலூர், டிச.3:

தொடர் கன மழையால், சிதம்பரம் அருகே 5 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. பிச்சாவரம் உப்பனாற்றில் ஆகாயத் தாமரைகள் அடர்ந்துள்ளதால் வெள்ள நீர் வடியவில்லை என விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

சிதம்பரம் கிழக்கு பகுதியில் உள்ள கணக்கரப்பட்டு, நற்கவந்தன்குடி, குமாரமங்கலம், வசபுத்தூர், நடராஜபுரம், உத்தம சோழமங்கலம், பிச்சாவரம், கீழப்பெரும்பை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ள நெற்பயிர் கள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 15,16 ஆகிய தேதிகளில் கனமழை பெய்தது. இதில் சற்று பாதிப்பு ஏற்பட்டு விளை நிலங்களில் மழை நீர் தேங்கத் தொடங்கியது. இதற்கிடையே கடந்த 3 நாட்களாக 'டிட்வா' புயலால் பெய்த கனமழையால் பாதிப்பு மேலும் அதிகரித்தது. சிதம்பரம் சுற்று வட்டார விளை நிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்கள் மூழ்கியுள்ளன. இதனால் இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறுகையில்,"20 நாட்களுக்குள் அடுத்தடுத்து பெய்த இரு கனமழைகள் பாதிப்பை அதிகமாக்கி இருக்கிறது. சிதம்பரம் மேற்கு பகுதியில் உள்ள வீராணம் ஏரியின் வடிகாலாக இருக்கும் வெள்ளியங் கால் ஓடை வழியாக வடியக்கூடிய தண்ணீர் பிச்சாவரம் உப்பனாற் றில் வடிந்து வருகின்றன.

இங்கு ஆகாயத்தாமரைகள் அடர்ந்து இருப்பதால் மழை நீர் சரியானபடி வெளியேற முடியாமல் விளைநிலங்களில் புகுந்துள்ளது. பிச்சாவரம் உப்பனாற்றில் உள்ள ஆகாயத்தாமரைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய்த் துறை, வேளாண் துறை அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும். கடன் வாங்கி, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். இந்தத் தொகையை முழுமையாக வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தனர். சிதம்பரம் அருகே கணகரப்பட்டு கிராமத்தில் மழைநீரால் மூழ்கியிருக்கும் நெற்பயிர்கள். மேலும், கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடிவதற்கான அனைத்துப் பணிகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

# ரயில்வே மேம்பாலம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

பாபநாசம், டிச.3:

தென்னக ரயில்வே திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் ரயில் நிலையங்களில், தஞ்சாவூர் - கும்பகோணம் இடையே உள்ள பாபநாசம் ரயில் நிலையம் அதிக போக்குவரத்து முக்கியத்துவம் உடையது. இந்த ரயில் நிலையத்தின் அருகில் பாபநாசம் - சாலிய மங்கலம் சாலையில் ரயில்வே கேட் உள்ளது. இந்தச் சாலையில் ஏராளமான கிராமங்கள் உள்ளன.

தஞ்சாவூர், திருக்கருகாவூர், மெலட்டூர், திட்டை உள்ளிட்ட ஊர், கிராமங்களுக்குச் செல்பவர்களும் இந்தச் சாலை வழியே செல்கின்றனர். புதிய பேருந்து நிலையம், தாலுகா, நீதிமன்றம், பி.டி.ஓ ஆபிஸ், காவல்நிலையம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு இந்தச் சாலை வழியே தான் செல்ல வேண்டும்.

இந்தச் சாலையில் தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரி, தனியார் வங்கி கிளை, மெடிக்கல், மளிகை, ஜுவல்லரி உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்கள் உள்ளன.

இந்நிலையில், ரயில்வே கேட் மூடப்படும் போதெல்லாம், ஏராளமான வாகனங்கள் இருபுறமும் நீண்ட வரிசையில் நிற்கின்றன.

ரயில் சென்ற பிறகு போக்குவரத்து சீரடைய பத்து நிமிடமாகிறது. ஆம்புலன்ஸும் சிக்கிக் கொள்கிறது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் நாளும் சிரமத்தை சந்திக்கின்றனர்.


எனவே, வாகன ஓட்டிகள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் சிரமத்தை உணர்ந்து, இங்கு மேம்பாலம், அல்லது கீழ் பாலம் அமைத்துத் தருமாறு, பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# செங்கோட்டையனுக்கு வழங்கப்பட்ட போலீஸ் பாதுகாப்பு வாபஸ்

சென்னை, டிச.3:

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு வழங்கப்ப ட்டிருந்த துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டது.

ஓபிஎஸ் - இபிஎஸ் பிரிந்துள்ள நிலையில், கட்சி ஒருங்கிணைப்பு குறித்து பேசியதுடன், கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களை சந்தித்ததால் அதிமுகவில் இருந்து செங்கோட்டையனை எடப்பாடி பழனிசாமி நீக்கினார்.



இதனைத் தொடர்ந்து, கடந்த வாரம் கோபிசெட்டிபாளையம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

இந்த நிலையில், செங்கோட்டையன் வீட்டுக்கு தமிழக காவல்துறை தரப்பில் அளிக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஏந்திய ஆயுதப் படை போலீஸ் பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இதையடுத்து வட இந்தியாவைச் சேர்ந்த இரண்டு பவுன்சர்கள் அவரின் வீட்டுக்கு பாதுகாப்புப் பணிக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# கார்த்திகை தீபத் திருவிழா.. மகாதீப கொப்பரை மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது - இன்று மகாதீபம்!

திருவண்ணாமலை, டிச.3:

திருவண்ணாமலை மகாதீப தரிசன விழா நாளை நடைபெற உள்ளது.


அங்கு லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். இன்று அதிகாலை 4 மணிக்கு அருணாசலேஸ்வரர் கோவிலில் பரணி தீபம் ஏற்றப்பட்டது.

மாலை 6 மணிக்கு ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் அருணாசலேஸ்வரர் சன்னதி முன்பு ஆனந்த நடனத்துடன் எழுந்தருள 2 ஆயிரத்து 668 அடி உயரமுள்ள அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும்.

நாளை முதல் 11 நாட்களுக்கு அண்ணாமலை உச்சியில் சிவபெருமான் தீப்பிழம்பாய் காட்சி தருவார். திருவண்ணாமலை நகரில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் வரை மகாதீபம் தெரியும்.







## மகாதீப கொப்பரை

அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும் மகா தீப கொப்பரைக்கு நேற்று அதிகாலை அண்ணா மலையார் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து 2 ஆயிரத்து 668 அடி உயரம் உள்ள அண்ணாமலை உச்சிக்கு மகாதீப கொப்பரை கொண்டு செல்லப்பட்டது. மகா தீபம் ஏற்ற 4 ஆயிரத்து 500 கிலோ நெய் பயன்படுத்தப்படும்.

மலையே சிவனாக வணங்கப்படும் அண்ணா மலையை வலம் வருவதற்காகவும், மகா தீபத்தை தரிசிக்கவும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்து வருகின்றனர்.

மாவட்ட நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள், சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளன. பக்தர்களின் பாதுகாப்பிற்காக 15 ஆயிரம் போலீசார் திருவண்ணாமலையில் முகாமிட்டுள்ளனர்.

## கண்காணிப்பு கேமரா

கிரிவலப்பாதையில் போலீசார் சார்பில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருவண்ணாமலை நகரம் மற்றும் கிரிவலப் பாதை முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கட்டுப்பாட்டு அறை அமைத்து கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

அருணாசலேஸ்வரர் கோவில் மற்றும் கிரிவலப்பாதையில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவசர கால உதவிக்கு 108 ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு மீட்பு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. மின்சார வாரியம் சார்பில் தடையில்லா மின்சாரம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சி நிர்வாகம் சார்பில் திருவண்ணாமலை நகரம் மற்றும் கிரிவல பாதையை தூய்மையாக பராமரிக்க ஆயிரத்து 200 தூய்மை காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## மாட்டுச்சந்தை

தீபத்திருவிழாவை முன்னிட்டு கிரிவலப்பாதை அரசு கலைக்கல்லூரி அருகில் மாட்டு சந்தை அமைக்கப்பட்டுள்ளது. மாட்டு சந்தையில் மாடுகள், குதிரைகள், ஒட்டகம் ஆகியவை விற்பனைக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

தீப தரிசனம் காண திருவண்ணாமலை நகருக்கு வரும் 9 பிரதான சாலைகள் வழியாகவும் பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

## 'க்யூஆர் தகவல் முறை'

பக்தர்களுக்காக இந்தாண்டு அறிமுகமான சிறப்பு அம்சம் 'க்யூஆர் தகவல் முறை'. விழா பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள குறியீடுகளை ஸ்கேன் செய்தால் அருகிலுள்ள மருத்துவ முகாம், ஆம்புலன்ஸ் இருப்பிடம், போக்குவரத்து மாற்றப் பாதைகள் மற்றும் அதிகாரப்பூர்வ எச்சரிக்கை தகவல்களை உடனடியாக கைப்பேசியில் காணலாம். ஒவ்வொரு சேவை முகாமும் தனித்தனி நிறங்களில் காட்டப்படுவதால், பயணிகள் விரைவாக தங்களுக்கு தேவையான இடத்தைக் கண்டறிய முடியும்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபம்! டிச. 5 வரை போக்குவரத்து மாற்றம்

தமிழகம் முழுவதும் கார்த்திகைத் தீப பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட விருக்கிறது. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் பண்டிகையை முன்னிட்டு சுமார் 35 லட்சம் பேர் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 3ஆம் தேதி திருவண்ணாமலை மலை மீது மகா தீபம் ஏற்றப்படவிருக்கும் நிலையில் திருவண்ணாமலை நகருக்குள் வாகனங்கள் நுழைய டிசம்பர் 5 வரை தடை விதித்து போக்கு வரத்துக் காவலர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழா டிசம்பர் 3-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்த விழாவிற்கு வெளிநாடு, வெளி மாநிலம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அதிகளவில் பக்தர்கள் வருவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

## 750 சிறப்பு பேருந்துகள்

மக்களின் வசதிக்காக கார்த்திகை தீபம் பண்டிகையை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சுமார் 750 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபத்திருவிழாவுக்காக திருவண்ணாமலை மாநகராட்சியை சுற்றி மார்கெட்டிங் கமிட்டி (திண்டிவனம் சாலையில் 2 இடங்கள்), சர்வேயர் நகர் (வேட்டவலம் சாலை ஒரு இடம்), நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் (திருக்கோவிலூர் சாலை 3 இடங்கள்), (மணலூர்பேட்டை சாலை ஒரு இடம்), விட்டோ டிஜிட்டல் இடம், அத்தியந்தல் (செங்கம் சாலை 7 இடங்கள்), டான்பாஸ்கோ பள்ளி (காஞ்சி சாலை ஒரு இடம்), அண்ணா நுழைவுவாயில் (வேலூர் சாலை ஒரு இடம்), கிலியாப்பட்டு சந்திப்பு (அவலூர்பேட்டை சாலை ஒரு இடம்), வெளிவட்டச் சாலையில் (7 இடம்) ஆகிய 9 இடங்களில் 24 தற்காலிக பேருந்து நிலையங்களில் 2,325 பேருந்துகள் நிறுத்தும் வகையிலும், 130 கார் நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கட்டணமில்லா அரசு பேருந்து

திருவண்ணாமலை புறநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 24 தற்காலிக பேருந்து நிலையங்களுக்கும் வரும் பக்தர்களுக்கு, இன்று (02-12-2025) மற்றும் நாளை (03-12-2025) ஆகிய இரண்டு நாட்களுக்கு திருவண்ணாமலை நகருக்குள் கோவில் மற்றும் கிரிவலப் பாதைக்கு அருகில் வரை வருவதற்கு 20 கட்டணம் இல்லா தனியார் பேருந்துகளும், 200 கட்டணமில்லா கல்வி நிறுவனம் பேருந்துகளும், ₹.10 ரூபாய் பயண கட்டணத்துடன் 20 சிற்றுந்துகளும் இயக்கப்பட உள்ளன. பக்தர்கள் இந்த இலவச பயண சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை கோயிலைச் சுற்றிலும் 50 ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் உள்ளது. மேலும், திருவண்ணா மலை நகருக்குள் டிச. 5ஆம தேதி காலை வரை கனரக வாகனங்கள் எதுவும் நுழையக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மாற்றமே மருந்து



" ரகுராஜன் விமலா தம்பதியர்க்கு இரண்டு மகன் ஒரு மகள் நடுத்தர குடும்பம் தான் . தன் பெரிய மகன் விஷாலுக்கு மணம் முடித்தார் . மருமகள் கமலி நல்ல பெண்

எதிர்பாராத விதமாக விபத்தில் விஷால் உயிர் இழக்க ரகுராஜன் குடும்பம் நிலை குலைந்து போனது .

ஒரு வழியாக இரண்டாவது மகன் ரவிக்கு திருமணம் முடித்தார் ரகுராஜன் . மருமகள் ராணியும் நல்ல பெண் .

ஒராண்டிற்கு பிறகு தன் மகள் வர்ஷாவிற்கு திருமணம் முடித்தார் ரகுராஜன் . மூத்த மருமகள் கமலி தாய் வீட்டுக்கு செல்லாமல் புகுந்த வீட்டிலேயே இருந்து விட்டாள்

வர்ஷாவிற்கு வளையல் காப்பு சீமந்தம் நடக்க ரகுராஜன் விமலா தம்பதியர் ராணியை சடங்கு செய்ய அழைத்தார் . கமலி அங்கு வராமல் ஒதுங்கி இருந்தாள். விதவை என்கிற ஏக்கம் வேறு

சடங்கு முடிந்த பிறகு வர்ஷா கமலி காலில் விழுந்து ஆசி பெற்றாள் . வர்ஷாவை தன் தங்கையாக பார்த்து ஆனந்தம் கொண்டாள் கமலி .

பிறகு தன் தந்தை தாயான ரகுராஜன் விமலாவிடம் சென்று உங்கள் மகள் வர்ஷாவிற்கு இப்படி நடந்து இருந்தால் அமைதி காப்பீர்களா...?".

அண்ணியும் உணர்ச்சியுள்ள சிறு பெண் தானே ...? அண்ணன் விஷால் இறந்து போய் இரண்டு ஆண்டுகள் ஆகிறது இன்னும் அண்ணி தன் வீட்டிற்கு போக வில்லை உங்களுக்கு இது புரியாதா...?" புரிந்தும் செயல் பட மனம் இல்லையா....?" என்று வெடித்து சிதறினாள் .

ரகுராஜன் விமலா தம்பதியருக்கு கமலி தன் மூத்த மருமகள் அல்ல மூத்த மகள் என்பது தெளிவாக புரிந்தது ....."

குழம்பிய மனம் தெளிவு பெற்றது உடன் ஒரு மாதத்தில் வீட்டோடு மாப்பிள்ளையாக ராகுலை கொண்டு வந்தார்கள் ரகுராஜன் விமலா தம்பதியர் .

வர்ஷாவை பார்த்த கமலி அவள் காலில் விழ முடியாமல் ஆனந்த கண்ணீரில் நனைத்தாள் அவளை அனைத்த படியே .

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு அதுவும் சரிதானே..."

**- சீர்காழி.**
**ஆர். சீதாராமன்.**

# நம்பிக்கை



"விஜி! எத்தனை நாளா சொல்லிக்கிட்டு இருக்கேன். இன்னைக்காவது நகையை வாங்கிட்டு வந்துடிடி" என்றாள் அம்மா பர்வதம்.

"போறேன்மா. தனியா போகணுமேன்னு பார்க்கிறேன். நீயும் வாயேன்.ரெண்டு பேருமா சேர்ந்து போலாம் " என்று விஜி சொல்ல "ஏகப்பட்ட வேலை இருக்கு .நீ போயிட்டு வந்துடுடி செல்லம்" என்றாள் பர்வதம்.

"சரி போறேன்.பஸ் ஸ்டாண்டு எதிர்ல அந்தப் பெரிய நகைக் கடை தானே "என்று விஜி கேட்க " அதேதான் கொஞ்சம் ஜாக்கிரதையா பார்த்துப் போயிட்டு வா. காலம் கெட்டுக் கிடக்குது" என்று எச்சரித்தாள் பர்வதம் .

பக்கத்து வீட்டில் படுத்துக் கிடந்த சுரேஷின் காதுகளில் பர்வதமும் விஜியும் பேசியதெல்லாம் தேனாய்ப் பாய்ந்தது.'இந்த சந்தர்ப்பத்திற்காகத் தானே இவ்வளவு நாள் காத்திருந்தேன். முறைப் பையனான என்னை விட்டுட்டு கூடப் படிக்கிற பையனை காதலிக்கிறதா என்னைக்கு நீ சொன்னியோ அன்னைக்கே நான் உனக்கு எதிரியாயிட்டேன்.'

' நகை இருந்தால் தானே உனக்கு கல்யாணம் நடக்கும்? நகை திருடு போயிட்டா உன்னை எவன் கட்டிக்குவான்? உன் அம்மா என் காலில் விழுந்து 'என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ ' ன்னு கெஞ்சணும் .நகையை உங்க வீட்டுலேயே திருடலாம்னு பார்த்தா பக்கத்துலயே இருக்கிற என் மேல கண்டிப்பா சந்தேகம் வரும். உனக்காக நகைக்கடை வாசலிலேயே அடையாளத்தை மறைத்தபடி நகையைப் பறிக்க நான் ரெடியா இருக்கேன் 'என்று மனதிலேயே திட்டமிட்டான் சுரேஷ்.

சிறிது நேரம் கழித்து வீட்டின் கதவு தட்டப்பட்டது. யாரது என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தான் சுரேஷ். விஜிதான் நின்றிருந்தாள்.

"என்ன விஜி என்னைத் தேடி வந்திருக்கே? என்ன விஷயம்? " என்று கடுப்பாகக் கேட்டான் சுரேஷ்.

"மாமா ! அம்மாவும் நானும் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து நகைச்சீட்டு கட்டினோம். நகைக் கடையில் ரெண்டு நாளுக்கு முன்னாலேயே வரச் சொன்னாங்க. துணைக்கு அம்மா வர முடியாததால போக முடியல. நீ கூட வந்தா போய் வாங்கிட்டு வந்துடலாம். வேற யாரையும் நம்ப முடியல மாமா "என்று அவள் கூறியதும் சவுக்கடி பட்டது போல உணர்ந்தான் சுரேஷ்

நகையைக் கொள்ளையடித்து அவளைப் பழி வாங்க எண்ணிய தான் எங்கே தன்னை முழுமையாக நம்பும் விஜி எங்கே என்று வெட்கித் தலை குனிந்து மனம் திருந்தியவனாக விஜியின் பின்னால் சென்றான் சுரேஷ்.



**-மு.மதிவாணன்**
குடிபேந்திரன் நகர்
அரூர்-636903



# ஊர்மிளையின் ஊமைமனம்

**இரண்டாம் பாகம் 6**



**▪கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## பரத்துவாசமுனிவரைக் காணுதல்..

இதோ! எதிரில் பரத்துவாசர் முனிவர் வருகிறார். இவர்களைக் கண்டதும் ஆச்சரியம்! பரத்வாஜ் முனிவர் பற்றிய செய்திகள் மனதில். தந்தை ஜனகர் அவரைப் பற்றிச் சொல்லிய நினைவுகள் நிழலாடின ஊர்மிளைக்கு. 300 வருஷ காலம் பிரம்மச்சரிய விரதத்தைப் பூண்டவர் என்று வேதம் கூறுவதாய்ச் சொன்னாரே. அந்தணற்குரிய (தொல்காப்பியத்தின் படி) வர்ணித்து இருப்பார் கம்பர். நன்னெறியைப் பாதுகாக்கும் ஒழுக்கத்தை உடையவர். நான்கு வேதங்களும் எப்பொழுதும் நடனமாடுகின்ற நாவை உடையவர். நான்மறை வேதத்தில் நிறைந்த ஞானம் பெற்றிருப்பதால், எப்போது, எங்கே, எதைக் கேட்டாலும் அதனை விளக்கிச் சொல்லும் ஆற்றல் உடையவர்.

“தந்தன உயிரெல்லாம் தன் உயிர் என நல்கும் அந்தணன்!” என்பார் கம்பர்.

“உலகம் ஏழும் அமை என்றாலும் அமரேசன் (திருமாலின்) தனது திருநாபிக் கமலத்தின் மூலமாக(பிரம்மனை) படைக்கப்பட வேண்டாத படி உதவிடு! எனின் தொழில் வல்லவர் பரத்துவாசர். இப்படிப்பட்ட முனிவர் பரத்துவாசரின் ஞாபகம் வரவே, தன் கைகளைக் கூப்பி வணங்கினாள் ஊர்மிளை.

தன் முன் நின்று ராமனைத் தழுவிய முனிவர் கண்ணீர் விழி வழி உக நின்றார்.

“அரசகுமாரனுக்குத் தகுதி இல்லாத தவவேடம் பொருந்தாததாய் இளையானோடும் வருவதற்குக் காரணம் என்ன?” என்று கேட்டார்.

ராமனும் “உற்று உள பொருள்கள் எல்லாம் உணர்ந்து உற உரை செய்தான்”.

நடந்த விஷயங்களை அப்படியே முனிவரிடம் ஒப்பித்தான் ராமன்.

கேட்ட அவரும் “அந்தோ! விதி தந்த துன்பம்!” என்றார்.

இலக்குவனின் சினத்தை அடக்கும் பொழுது “விதி செய்த பிழை இல்லாமல் இது யார் செய்த பிழை?” என்று ராமன் கூறிய கூற்று ஊர்மிளைக்கு நினைவு வந்தது.

“இக்காலத்திலும் இப்படிப்பட்ட செயல் நிகழுமா? இவ்வாறு உன்னை வனம் அனுப்பிய பிறகும் தயரதன் எவ்வாறு உயிர் வாழ முடிந்தது?” என்று கேட்டார்.

“ஐயோ!” என நினைத்துக் கொண்டாள் ஊர்மிளா. இதனை ராமன் அறிவதற்கும், பரதன் என்ன செய்யப் போகிறான் என்பதை அன்பருக்கும் தெரியப்படுத்த முடியவில்லை என்பதுதானே தன் தவிப்பு என்று நினைத்து வருந்தினாள்.

அயோத்தியில் இருந்து ஏதேனும் செய்தி உண்டா என்று கூடக் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லையே எதனால் என்ற கேள்வி ஊர்மிளையின் மனதில் வர, ராமனைத் தழுவியவராய் முனிவர் “இனிது உறை!” என்று தன் தவச்சாலைக்கு அழைத்துச் சென்றார்.

“ராமா! அவரவர் செய்யும் நல்வினை, தீவினைக்கு ஏற்பத் தான் விதி வழி இன்ப துன்பங்கள் ஏற்படும். இதற்கு நாம் கவலைப்படுவதில் பயன் ஏதும் இல்லை!” என்றார்.



மூவரும் அவரது உபசரிப்பில் மகிழ்ச்சி அடைந்தனர்.

இன்றைய உறக்கத்திலும் ஊர்மிளைக்கு நிம்மதி என்பது இல்லை. அன்பர் இமை மூடாது நின்று கொண்டு காவல் காப்பது பற்றிக் குகனுடன் தவச்சாலையில் தெரிந்து கொண்டபோது வருத்தமே உற்ற ஊர்மிளையும், உறங்கும் போதெல்லாம் இந்தக் காட்சியே வர நெகிழ்ந்தாள்.

இன்னும் இரண்டு தினங்களில் பரதன் வந்து விடுவான். நாம் நம் அன்பரைக் காண்போம் என்று நினைத்தாள். பரதன் அரசை ஏற்காவிட்டால் திரும்பவும் தமையன் தானே அரசாள்வார்; இலக்குவனுடன் திரும்பி வருவாரே!

“சீதையிடமும் நாமும் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். அன்பரோடு நமது உறவு நெருக்கம் இருக்கும்படிச் செய்து கொள்ள வேண்டும்!” என்று நினைத்தாள்.

விடியும் பொழுதில் உறக்கம் கண்களைச் சுழற்ற, முனிவர் ராமனைப் பார்த்து “கொய் குல மலர் மார்பா! கூறுவது உளது!” என்றவுடன் விழித்து, வியப்புற்று எழுந்து உட்கார்ந்தாள்.

ஊர்மிளைக்கு மகிழ்ச்சியாக இருந்தது. “இவ்விடம் அயோத்தி நாட்டில் இருந்து பக்கத்தில் தானே உள்ளது. இவர்கள் இங்கேயே தங்கட்டும் மறுப்பு ஏதும் சொல்லாது!” என்று நினைத்தாள்.

நினைத்தது யாவும் இவ்வுலகில் நடந்து விட்டால், நாமும் தெய்வமாகி விடுவோமே, தனக்குத் தோன்றிய எண்ணத்தையே காரணமாகக் காட்டி ராமன் மறுத்துக் கூறினான்.

“முனிவரே! நீங்கள் சொல்லிய வார்த்தைகளை அன்போடு ஏற்கிறேன். ஆனாலும் இந்த இடம் நிறைபுனல் அயோத்தி நகருக்கு நீண்டது அன்று! (தொலைவு). இவ்விடத்தில் தங்கி இருப்பேன் என்றால் கோசலை நாட்டு மக்கள் யாவரும் விரைவாக என்னை வந்து அடைந்து விடுவார்கள். இது இடையூறாகி விடாதோ?” என்றான்.

இதனை ஒப்புக்கொண்ட பரத்துவாசமுனி “ ராமனே! கேள்! நீ சொன்னது உண்மையே! ஐ இரண்டு (பத்து காத தூரம்) அமைந்த சோலைக்கு அப்பால் சென்றால், சித்திரக்கூடம் என்ற பெயர் பெற்ற மலையுள்ளது. தேவர் உலகத்திலும் இனிது! அங்கே தங்குவாயாக!” என்றார்.

உடனே மூவரும் சித்திரக்கூடம் செல்லத் தயாரானார்கள்.

விழித்தவளின் காதில் சித்திரக்கூடம் என்ற மலைப்பெயர் விழுந்ததும் உறங்கிப் போனாள்.

பரதன் வரும் வரை அங்கே தங்கியிருந்தாலே போதும்! என்று இஷ்ட தெய்வத்திற்கு வேண்டுதல் வைத்தாள்.

ஆம்! இதனைத் தாண்டி சென்று விட்டால், அவரைப் பற்றி நாம் அறிவதும், அயோத்தி அரசுக்கோ, மக்களுக்கோ எந்தப் பயனும் இல்லை.

மேலும், தசரத சக்கரவர்த்தி பரமபதம் அடைந்ததைக் கூட, 14 ஆண்டுகள் கழிந்த பின்னரே அறிவார்கள். இது நியாயம் இல்லையே.

“இறைவா! எப்படியாயினும் பரதன் வரும்வரை அவர்களை அவ்விடத்திலேயே தங்க வைப்பாயாக!” எனப் பிரார்த்தித்தாள்.

– தொடரும்

# திருவண்ணாமலை கிரிவல ரகசியம்

திருவண்ணாமலை கிரிவல பாதையில் உள்ள சூட்சுமங்களும் அதனால் கிடைக்கும் அளப்பெரிய பலன்களும், வாழ்வில் அவசியம் ஒரு தடவையேனும் சென்று கிரிவலம் செய்து வாருங்கள். சிவத்தை உணருங்கள். எங்காவது துவங்கி, எப்படியாவது முடிக்ககூடாது. மலையை சுற்றி 14 கி.மீ.பக்தர்கள் நடந்தே செல்ல வேண்டும். வாகனங்களில் செல்லுதல் கூடாது.. இடமிருந்து வலமாக மட்டுமே சுற்ற வேண்டும். மலைசுற்றும் போது கைகளை வீசிக்கொண்டும், பேசிக்கொண்டும் நடக்க கூடாது. சாதாரணமாக நமச்சிவாய நாமத்தை உச்சரித்துக்கொண்டு நடந்து செல்லவேண்டும். இந்த மலையை அங்கப்பிரதட்சணம் செய்த காலங்களும் உண்டு. இப்போதும் பலரும் அங்கப்பிரதட்சணம் செய்வதுண்டு.

அது சாத்தியமில்லாது போது நடந்து
சென்றாலே போதும். எல்லா மாதங்களும் கிரி வலத்திற்கு ஏற்ற மாதங்களான போதும் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, பௌர்ணமி காலங்கள் மலை வலத்திற்கு ஏற்ற காலங்களும், மாதங்களுக்கும் மலை வலம் வரும்போது அருணாசலேஸ்வரின் கிழக்கு கோபுரத்தில் துவக்கி முடிக்கும் போது அருணாசலேஸ்வரரை வணங்கினால்
தான் மலைவலம் முடித்தாக அர்த்தம்.

அருணாசலேஸ்வரரின் கிழக்கு வாயிலில் இருந்து மலை வலம் வர ஆரம்பிக்க வேண்டும். மலையின் எட்டு திசைகளிலும் தன் பாவங்களை போக்குவதற்காக அஷ்டதிக்கு பாலகர்களில் கிழக்கு அதிபதியான இந்திரன் வழிபட்ட இந்திரலிங்கத்தை வழிபடவேண்டும். பிறகு மலை சுற்றும் சாலையில் நந்திகேசுவரர் சன்னதி உண்டு. இங்கு வணங்கி வழிபட்டு தான் மலைவலம் வரவேண்டும். ஏனெனில் மலை சுற்றுகையில் நமக்கு சிவன் அளித்த அதிகார மூர்த்தி அவர்.


அடுத்து தென்கிழக்கு திசைக்கு அதிபதி அக்னி பூஜை செய்த அக்னி லிங்கம் உள்ளது. இதன் அருகில் சிம்ம தீர்த்தம் உள்ளது. இந்த தீர்த்தத்தின் கரையில் அரிச்சந்திர மகாராஜாவின் சிலை ஒன்றும் உள்ளது. அதன் வழியே சென்றால் பிருங்கி மகரிஷி முனிவரின் வழிபாட்டு தலம் உள்ளது.

அடுத்து தெற்கு திசைக்கு அதிபதி எமன் பூஜை செய்து வழிப்பட்ட எமலிங்கம் உள்ளது. எமன் கட்டளை நிறைவேற்றும் கின்னர் முதலானோர் இங்கிருந்து தான் புறப்பட்டு செல்லுகின்றனர் என்ற ஐதீகம் உள்ளது. இங்கு தியானம் செய்தால் நம்மிடையே உள்ள தீய எண்ணங்கள் மறையும் நினைக்கின்ற செயல்கள் நிறைவேறும்.

அடுத்து மகாசக்தி மாரியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் மஞ்சள் கயிற்றில் தொட்டில் செய்து அங்குள்ள மரத்தில் தொங்குவதை காணலாம். இந்த மரத்தில் அங்ஙனம் கட்டினால் குழந்தை வரம் அளிப்பதாக கூறப்படுகிறது.

தென்மேற்கு திசைக்கு அதிபதியான நிருதி சிவனை வழிப்பட்ட நிருதி லிங்கம் உள்ளது. இங்கு வணங்கிய பின்பு தெற்கிலிருந்து மேற்கில் திரும்பும் வளைவில் நின்று மலையை பார்க்க வேண்டும்.இந்த இடம் பார்வதி தேவிக்கு ரிஷப வாகனத்தில் சிவபெருமான காட்சி அளித்த இடம். ஆதலால் இங்கு மலையின் முகப்பில் நந்தியின் தலை திரும்பி நம்மை பார்ப்பது போல் இருக்கும். அதை வணங்கி செல்ல வேண்டும்.

அடுத்து அருணாசலேஸ்வரின் கோயிலுக்கு நேர் எதிரில் திருநேர் அண்ணாமலை கோயில் உண்டு. இங்கு உண்ணாமுலை அம்மன் தீர்த்தம் அருகிலேயே உள்ளது. ஆஞ்சனேயர் சன்னதி, ராகவேந்திராலயம், முருகன் ஆலயம் உள்ளது. இங்குள்ள முருகன் சிலை பழநி மலை சித்தர்



போகரால் நிர்மாணிக்கப்பட்டது. பழநியில் நவபாஷாண சிலை அமைத்த போகர் இங்கு மூலிகைகளால் சிலை அமைத்தார். (இந்த சிலை நவாப்புகள் காலத்தில் திருட்டு போய்விட்டது)

அடுத்து இராஜராஜேஸ்வரி ஆலயம் புதுப்பித்து புத்தொளியுடன் இருக்கிறது. இராஜராஜேஸ்வரி ஆலயத்திற்கு நேர் எதிரில் மலை அடிவாரத்தில் கண்ணப்பர் கோயில் அமைதியான சூழ்நிலையில் குளிர் மரங்களுக்கு இடையில் இருக்கிறது. தியானத்திற்கு ஏற்ற இடம். சாதுக்களும், ஆங்கிலேயரும் இங்கு தியானத்தில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

இராஜராஜேஸ்வரி ஆலயம் அடுத்து, கௌதம மகரிஷி கோயில் இருக்கிறது. கௌதம மகரிஷி இங்கு வந்து வழிபாடும், நிஷ்டையிலும் இருந்ததாக சொல்லப்படுகிறது.

அடுத்து சூரியன் வழிபட்ட லிங்கம். மேற்கு திசைக்கு அதிபரான வருணன் வழிபட்ட லிங்கம் உள்ளது. அதன் பிறகு பிரம்மன் வழிபாடு செய்து பாவங்களை போக்கி கொண்ட திரு அருணாசலேஸ்வரர் கோயில் உள்ளது. இந்த கோயிலை அடி அண்ணாமலையார் என்று அழைப்பர். அருகில் மாணிக்கவாசகர் கோயில் உள்ளது. அகஸ்தியர் குளம் உள்ளது.

அதற்கடுத்து வடமேற்கு திசைக்கு அதிபதியான வாயு லிங்கம் உள்ளது. சிறிது தூரம் சென்றால் வட திசைக்கு அதிபதியான குபேரன் வழிபட்ட குபேரன் லிங்கம் உண்டு. அடுத்து இடுக்கி பிள்ளையார் கோயில்
உள்ளது. இதனை கோயில் என்று சொல்லுவதை விட சுளுக்கும், உடல் வலி தீர்க்கும் இடம் எனலாம்.
முன்காலத்தில் கடவுளின் பெயரை கூறி பக்தியும், ஒழுக்கத்தினை வளர்த்தார்கள். அதே போல் இதுவும் ஒன்று. இந்த கோயிலில் நுழைத்து ஒருக்களித்து வெளியே வரவேண்டும். ஒரு அடி அகலத்தில் உடம்பை ஒருகளித்த படி வரவேண்டும். அப்படி இல்லை என்றால் உடம்பு சிக்கி கொள்ளும். அதிலிருந்து விடுபடுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். அப்போது உடம்பில் ஏதாவது சுளுக்கு, வலி இருந்தால் விலகிவிடும்.

ஆனால், உடம்பு மாட்டிக் கொள்ளாமல்
வெளியே வரவேண்டும் என்ற் எண்ணத்தில் அங்குள்ள பிள்ளையாரை தரிசிக்க எண்ணம் வருவதில்லை. அதனால் தான் பஞ்சபூதங்களையும் அடக்கினால் தான் வாழ்வில் உயர்வடைய முடியும் என்ற ஒப்பற்ற தத்துவத்தை இடுக்கு பிள்ளையார் காட்டுகிறார்.

இங்கிருந்து மலையை பார்த்தால் ஐந்து முகங்கள் தெரியும். இது சிவனின் ஐந்து திருமுகங்களை குறிக்கக்கூடியது. அடுத்து மலை வல பாதையில் இருந்து சுடுகாட்டுக்கு பிரியும் தனிப் பாதையில் சென்றால் வட கிழக்கு அதிபாரான ஈசானன் வழிபட்ட ஈசான லிங்கம் உள்ளது. இதனையும் வழிபட்டு அதன் பிறகு அருணாசலேஸ்வரர் கோயில் சென்று தரிசித்த பிறகுதான் மலைவலம் பூர்ணத்துவம் அடைகிறது.

எல்லா தீர்த்தங்களிலும் ஒவ்வொரு சிறப்பு உண்டு என்றாலும், துர்கையம்மன் கோயிலுக்குள் கட்க தீர்த்தம் மிகச்சிறந்த தீர்த்தமாக போற்றப்படுகிறது. மகிடாசுரனை வதம் செய்த பார்வதிதேவியின் பாபம் போக்குவதற்கு துர்க்கையம்மன் வாள் (கட்கம் என்றால் வாள்) வீசி தோற்றுவித்தது.

மலை வலம்:

மலை வலம் வர சிறந்த, சிறப்பான நாள்
புராண காலத்தில் பார்வதி தேவியார் சிவனின் இடப்பாகம் பெற வேண்டும் என்பதற்காக கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் விழா எடுத்து மலையை வலம் வந்தார். அப்போதுதான் சிவன் காட்சி தந்து உமையாளுக்கு இடப்பாகம் அளித்தார் என்பது வரலாறு. சித்தர்கள், ஞானிகள் ஆகியோர் ஒவ்வொரு மாதப்பிறப்பு மற்றும் பிரதோஷ காலத்தில் மலை வலம் வந்தனர். அதன் பின்னர் பௌர்ணமி அன்று மலைவலம் வர ஆரம்பித்தார்கள்.

சந்திரன் நம் மனத்துக்கு (எண்ணத்திற்கும்) காரகன். அன்று பூமியில் சூரியனிடமிருந்து சக்திகளை அதிகளவில் பெற்று பூர்ண நிலவாக சந்திரன் நிறைந்த உயிர்களை தருகிறார். இதனால் பௌர்ணமி மலை வலம் வருவது சாலச்சிறந்தது என பெரியோர்களால் போற்றப்பட்டது.

மனோன்மணியான சக்தி சிவனுடன் இரண்டற கலக்கும் இந்த நாளில் வழிபடும் பக்தர்களுக்கு விசேஷ சக்திகளை வழங்குகிறது என முனிவர்கள் கூறுகின்றனர்.
இதை விஞ்ஞானமும் உறுதிபடுத்துகிறது. இதை விட அதிசூட்சம் நாளாக வியாதீபாத யோக நாள் அன்று மலை வலம் வந்தால்
நினைத்த காரியம் சித்தி அடையும் என்று என் நண்பர் கோயில் பிரதம குருக்கள் ரமேஷ் சிவாச்சாரியார் அடிக்கடி



**சிவசக்தி நாப்பிராம்பட்டி**
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

தினம் ஒரு தலைவர்கள்

# எஸ்.ஸ்ரீனிவாச ஐயங்கார் வரலாறு



எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் சென்னை ஆளுநரின் நிறைவேற்றுக் குழுவின் சட்ட உறுப்பினர் பதவியில் 19.16.1920 ஆளுநர் ஜான் சின்கிலேர், 1வது பரோன் பென்ட்லேண்ட், வெல்லிங்டன் பிரபு, சென்னை மாகாணத்தின் வழக்கறிஞர்-ஜெனரல் பதவியில் 19.12.1920 முன்னையவர்

பி. எஸ்.சிவசுவாமி ஐயர்
பின்னவர்சே.ப. இராமசுவாமி
தனிப்பட்ட விவரங்கள்
பிறப்பு 11 செப்டம்பர் 1874 இராமநாதபுரம் மாவட்டம், பிரித்தானிய இந்தியாவின் மாகாணங்களும், ஆட்சிப் பகுதிகளும்
இறப்பு 19 மே 1941 (அகவை 66) சென்னை
முன்னாள் மாணவர் மாநிலக் கல்லூரி, சென்னை
பணி வழக்கறிஞர்
தொழில் வழக்கறிஞர் - ஜெனரல், அரசியல்வாதி
சமயம் இந்து

சேஷாத்திரி ஸ்ரீனிவாச ஐயங்கார் (S. SRINIVA-SA IYENGAR) சி.ஐ.இ. (செப்டம்பர் 11, 1874 - மே 19, 1941) என அழைக்கப்படும் ஸ்ரீனிவாச ஐயங்கார், ஒரு இந்திய வழக்கறிஞராகவும், சுதந்திர போராட்ட வீரராகவும் இந்திய தேசிய காங்கிரஸின் அரசியல்வாதியாகவும் இருந்தார். ஐயங்கார் 1916 முதல் 1920 வரை சென்னை மாகாணத்தின் வழக்கறிஞர்-ஜெனரலாக இருந்தார். 1912 முதல் 1920 வரை சென்னை மாகாணத்தின் சட்ட உறுப்பினரும் 1923 முதல் 1930 வரை இந்திய தேசிய காங்கிரஸின் ஸ்வராஜியக் கட்சியின் தலைவராகவும் இருந்தார். ஸ்ரீனிவாச ஐயங்கார் புகழ்பெற்ற முதல் இந்திய வழக்கறிஞரான சர். வேம்பகும் பாஷ்யம் ஐயங்காரின் மருமகன் ஆவார். வழக்கறிஞர் ஜெனரல் சர் வேம்பகும் பாஷ்யம் ஐயங்காரைப் பின்பற்றுபவர்கள் அவரைத் தென்னிந்திய சிங்கம் என்று அழைத்தனர். இவரது மகள் அம்புஜத்தம்மாள் ஒரு இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை ஆவார்.

சென்னை மாகாணத்தின் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீனிவாச ஐயங்கார் பிறந்தார். அவர் சட்டத்தில் பட்டம் பெற்றார் மற்றும் ஒரு வழக்கறிஞராகப் பயிற்சி பெற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் 1916 இல் வழக்கறிஞர்-ஜெனரல் ஆக பதவி உயர்வு பெற்றார். அவர் பார் கவுன்சில் உறுப்பினராக பணியாற்றினார் மற்றும் ஆளுநரின் நிறைவேற்றுக் குழுவின் சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் தனது வழக்கறிஞர் ஜெனரல் பதவியை, ஆளுநர் நிறைவேற்றுக்குழுவின் அவரது இருக்கையை ராஜினாமா செய்து சி.ஐ.இ. க்குத் திரும்பினார்.

1920 ஆம் ஆண்டு ஜலியன்வாலா பாக் படுகொலைக்கு எதிராக, இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு பெற்றார். 1923 ஆம் ஆண்டில், மோதிலால் நேரு மற்றும் சித்தரஞ்சன் தாஸ் போன்ற தலைவர்களோடு சேர்ந்து மகாத்மா காந்தியுடன் தேர்தல்களில் பங்கேற்றார். பிரிவினை பிரிவுக்குப் பின்னர் ஸ்வராஜியக் கட்சி உருவாக்கப்பட்டது. 1926 தேர்தல்களில் பெரும்பான்மை பெற்றிருந்த போதிலும், ஐயங்கார் மாகாணத்தில் அரசாங்கத்தை அமைக்க மறுத்தபோது, அவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் பின்னர் சென்னை மாகாண ஸ்வராஜ்ய கட்சியின் தலைவராகவும் இருந்தார்.

சேஷாத்திரி ஸ்ரீனிவாச ஐயங்கார் பின்னர் அவர், இந்திய



லீக்கின் சுதந்திரத்தை நிறுவி, சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டங்களை ஒழுங்கமைத்தார்.
மற்ற காங்கிரஸ் அரசியல்வாதிகளுடனான கருத்து வேறுபாடு காரணமாக, அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். 1941 ஆம் ஆண்டு மே 19 இல், ஐயங்கார் சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

ஸ்ரீனிவாச ஐயங்கார் சென்னை சட்டப்பேரவையில் இருந்து வழக்கறிஞர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட இளைய வக்கீல் ஆவார். ஸ்ரீனிவாச ஐயங்கார் சுதந்திர போராட்ட வீரர்களான யு. முத்துராமலிங்கம் தேவர் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோரின் வழிகாட்டியாகவும் இருந்தார். பின்னர் 1954 முதல் 1962 வரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஆனார். மற்றும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பணியாற்றிய கே. காமராஜ் அவரது மிகப்பெரிய வழித்தோன்றலாகக் கருதப்படுகிறார். ஸ்ரீனிவாச ஐயங்கார் 1939 இல் எழுதிய "மேனேஸ் ஹிண்டு லாஸ்" புத்தகம் மிகவும் பாராட்டப்பட்ட மற்றும் நன்கு படிக்கப்பட்ட புத்தகம் ஆகும்.

# 'வா வாத்தியார்' படத்தின் 3-வது சிங்கிள் லிரிக்கல் வீடியோ வெளியானது



'மெய்யழகன்' படத்தைத் தொடர்ந்து, நலன் குமாரசாமி இயக்கத்தில் 'வா வாத்தியார்' என்ற படத்தில் கார்த்தி நடித்து முடித்துள்ளார். கீர்த்தி ஷெட்டி கதாநாயகியாக நடித்துள்ளார். சத்யராஜ், ராஜ்கிரண் உள்பட பலரும் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் டீசரும், பாடல்களும் ஏற்கனவே வெளியாகி கவனம் ஈர்த்தன. 'வா வாத்தியார்' திரைப்படம் வரும் 12-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் படத்தின் 3-வது சிங்கிள் லிரிக்கல் வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. முதலாளி என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்த பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



நடிகை அதுல்யா ரவி ட்ரெண்டியான உடையில் எடுத்த போட்டோஷூட். இணையத்தில் வைரல் ஆகும் அழகிய புகைப்படங்கள்.

# 30 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் இணையும் அடூர் மம்மூட்டி கூட்டணி!



வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்துவரும் நடிகர் மம்மூட்டி, தற்போது பேட்ரியாட் எனும் அரசியல் கதைக்களம் கொண்ட படத்தில் நடித்து வருகிறார். இதில் மோகன்லால், ஃபஹத் பாசில், குஞ்சாக்கோ போபன், நயன்தாரா, ரேவதி, தர்ஷனா ராஜேந்திரன் மற்றும் ஸாரின் ஷிஹப் என பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்துவருகிறது. இந்நிலையில் தன்னுடைய அடுத்த படத்தில் மம்மூட்டி நடிக்க உள்ளதாக இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மம்மூட்டியுடன் மீண்டும் இணைவது குறித்து பேசிய இயக்குநர் அடூர் கோபாலாகிருஷ்ணன் " என்னுடைய அடுத்த படத்தில் மம்மூட்டியே முக்கிய வேடத்தில் நடிப்பார். மீதமுள்ள கதாபாத்திரங்களுக்கான தேர்வு தற்போது நடந்து வருகிறது. திரைக்கதை எழுதும் பணி நடந்து கொண்டிருந்தபோது, மையக் கதாபாத்திரத்திற்கு மம்மூட்டியின் முகம் மட்டுமே என் நினைவுக்கு வந்தது.

அவர்தான் அந்தக் கதாபாத்திரத்திற்கு சரியான நபராக இருப்பார் என்று நான் உணர்ந்தேன். எனது படங்களில் ஆண் கதாநாயகனாக நடிப்பது இது நான்காவது முறையாகும். நான் வேறு எந்த முன்னணி நடிகருடனும் இவ்வளவு முறை பணியாற்றியதில்லை". என தெரிவித்தார்.

இப்படம் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு மம்மூட்டியை அடூர் உலகிற்குள் கொண்டுவருகிறது. கடைசியாக இவர்களின் கூட்டணியில் வெளியான படம் விதேயன் (1994). அடூர் - மம்மூட்டி கூட்டணியில் வெளியான அனந்தரம் (1987), மதிலுகள் (1989) மற்றும் விதேயன் ஆகியவை மலையாள சினிமாவின் மிகவும் விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட படைப்புகளாகும்.

# மலேசியாவில் உள்ள முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார் அஜித்குமார்



மலேசியாவில் நடைபெறவுள்ள 24H சீரிஸ் கார் பந்தயத்தில் அஜித்குமார் கலந்துகொள்கிறார்.

இதே கோவிலில் அவர் நடித்த "பில்லா" படத்தின் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டது.தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார் தற்போது வெளிநாடுகளில் நடக்கும் கார் பந்தயங்களில் கலந்துகொண்டு வருகிறார்.

அவ்வகையில் மலேசியாவில் நடைபெறவுள்ள 24H சீரிஸ் கார் பந்தயத்தில் கலந்துகொள்ள அஜித்குமார் மலேசியா சென்றுள்ளார்.இந்நிலையில், 24H சீரிஸ் கார் பந்தயத்திற்கு முன்பாக, பத்து மலை முருகன் கோயிலில் அஜித்குமார் சாமி தரிசனம் செய்தார். இதே கோவிலில் அவர் நடித்த "பில்லா" படத்தின் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது



பிக் பாஸ் புகழ் நடிகை ஐஸ்வர்யா தத்தா அழகிய உடையில் எடுத்த போட்டோஷூட். ரசிகர்களை கவர்ந்து வரும் ஹாட் புகைப்படங்களை பாருங்க.

# ரன்வீர் சிங்கிற்கு ரொமான்டிக் ஹீரோயினான சாரா அர்ஜூன்



தமிழ் சினிமாவில் மிகவும் பிரபலமான குழந்தை நட்சத்திரமாக வலம் வந்தவர் சாரா அர்ஜூன். மும்பையில் பிறந்த இவர் கடந்த 2011-ம் ஏ.எல். விஜய் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் வெளியான 'தெய்வத் திருமகள்' படத்தில் நடித்திருந்தார். இப்படத்தின் மூலம் தந்தைக்கும் மகளுக்கும் இடையே உள்ள பாசப்பிணைப்பு நடிப்பின் மூலம் வெளிப்படுத்தி தனக்கென ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கினார் சாரா அர்ஜூன்.

'தெய்வத் திருமகள்' திரைப்படத்தை தொடர்ந்து தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் என பான் இந்தியா குழந்தை நட்சத்திரமாக ஜொலித்தார். அதனை தொடர்ந்து 2022-ம் ஆண்டு மணிரத்னம் இயக்கத்தில் விக்ரம், கார்த்தி, ரவி மோகன் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான 'பொன்னியின் செல்வன்' படத்தில் இளம்வயது நந்தினியாக ரசிகர்களை கவர்ந்தார்.

இந்நிலையில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், சஞ்சய் தத், அக்ஷய் கண்ணா என பெரிய நட்சத்திர நடிகர்கள் பட்டாளமே நடித்துள்ள 'துரந்தர்' படத்தில் சாரா அர்ஜூன் கதாநாயகியாக நடித்துள்ளார். வருகிற 5-ந்தேதி இப்படம் வெளியாக உள்ள நிலையில் மும்பையில் இப்படத்தின் ஆடியோ வெளியிட்டு விழா நடந்தது. இந்த விழாவில் படத்தில் நடித்த பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டனர். மேலும் சாரா அர்ஜூனும் இவ்விழாவில் கலந்து கொண்டார். சாரா அர்ஜூன் விழாவில் கலந்து கொண்ட வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

'துரந்தர்' படத்தின் டிரெய்லர் வீடியோ வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இதில் 40 வயதான ரன்வீர் சிங்குக்கு ஜோடியாக சாரா அர்ஜூன் நடித்துள்ளார். அவருடன் ரொமான்ஸ் செய்யும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

சாரா அர்ஜூனுக்கு 20 வயது தான். தன்னை விட 20 வயது மூத்த பாலிவுட் நடிகருடன் அவர் நடித்துள்ளார். இந்தப் படம் அவரது திரை வாழ்வில் முக்கிய படமாக இருக்கும் என கூறப்படுகிறது.



# எஜமான் காலடி மண்ணெடுத்து... மீண்டும் வெளியாகும் சூப்பர் ஹிட் படம்

கடந்த 1993-ம் ஆண்டு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் - மீனா நடிப்பில் வெளியான படம் 'எஜமான்'. கிட்டத்தட்ட 32ஆண்டுகளுக்கு பிறகு 'எஜமான்' படம் மீண்டும் வெளியாக உள்ளது. ரஜினியின் 75-வது பிறந்தநாளான வருகிற 12-ந்தேதி இப்படம் வெளியாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆர்.வி. உதயகுமார் இயக்கத்தில் உருவான இப்படம் டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்டு பிரமாண்டமான முறையில் வெளியாவதாக கூறப்படுகிறது.

ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் வெளியான இப்படத்தில் எம்.என். நம்பியார், மனோரமா, விஜயகுமார், நெப்போலியன், ஐஸ்வர்யா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தனர்.

இப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்று திரையரங்குகளில் பல நாட்கள் ஓடியது. மேலும் இளையராஜா இசையமைத்த இப்படத்தின் பாடல்கள் இன்றளவும் ரசிகர்கள் மத்தியில் மறக்க முடியாதவை.

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
• PREDICTION & SOLUTIONS
• MONEY • LOVE
• HEALTH • FAMILY
• BUSINESS • CAREER
• MARRIAGE

LOCATION - CHENNAI
WE ARE
HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL.
Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile
Call : 9337501889
Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile

வாடகைக்கு இடம் தேவை
Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.
தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

இடம் விற்பனைக்கு
காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
Contact: 08220426606

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர்
100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய
அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889

COMMERCIAL SPACE FOR RENT
5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45
Brokers Contact :
98422 65900
SAA

DTCP Sites For Sale
@ KALAPATTY
East Facing Site
6 Cents
Direct Sale !!!
90471 87197
SAA

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

Space available on OMR for RENT!
Fully Furnished Amenities
Ideal for:
Coaching / Tuition Classes, Govt. / Competitive Examinations, Workshops, Conferences, Seminars, etc.
Film shooting & Advt. shoots
Video/ Audio Editing or Recording
Facilities include Ample Parking, Cafeteria, and Power Backup.
Available on Weekends and Holidays
Contact +91 99406 94545
to know more!






### சிவமே முழுசா ?

விதைக்குள் மரம்வைத்து,
மரத்தில் விதைவைத்து,
விளையா டுதலென்ன புதுசா?

சதைக்குள் நீர்வைத்து,
நீரினில் சதைவளர்த்து
சதிரா ட்டமாடுவான் சிறுசா?

உனக்குள் தனைவைத்து
தனக்குள் உனைவைத்துக்
உறவாடுதலென்ன பழசா?

முன்னம் முதலாக பின்னும்
நிலையாக, என்னுள்
இருந்திடுவான் முழுசா !

அவனை நான் நினைக்க
என்னுள் அவனிருக்க
அவனியும் அவனாகும்
பெருசா !

சிவனே என்றிருக்க
தவமாய் தானிருக்க
சிவமே தாங்கிவிடும் முழுசா!

**ராஜாமணி**, ஈரோடு

### பெண்டிரும் உண்டியும் இன்பமில்லை!

எண்சீர் மண்டிலம்.

பெண்டிரே இன்பமென்று
பேதையர் சொல்லிடுவார்
பீடில்லை என்பதைத்தான்
பேதையரே கண்டிடுவர்!
கண்டின்பம் காணுதலே
இன்பமென்றே உரைத்திடுவார்
காணுகின்ற துன்பத்தைக்
காண்கிலரே அன்னாரே!
உண்டிமட்டும்இன்பமென்று
உன்மத்தர் சொல்லிவார்
உறுகின்ற துன்பத்தைக்
காண்கிலரே அன்னாரே!

அளவோடு பெறுமின்பம்
அதிதுன்பம் தாராது
அறிவோடு பெறுமின்பம்
அவ்வாறே ஆகிடுமே!
எளிமையாகப் பெறுமின்பம்
இங்கு துன்பம் தாராது
ஏற்றவகை உறுமின்பம்
அவ்வாறே ஆகிடுமே!
பெண்ணெனினும்
உணவெனினும் அளவோடு
காணவேண்டும்
பெருமையுடன் மிகுந்தாலே
பாழாகும் எல்லாமே!
மண்ணிதிலே இக்கொள்கை
ஏற்றிட்டால் துன்பில்லை
மாந்தர்கள் உணர்வீர்
இன்பதுன்பம்
அளவினையே!



**முனைவர் இராமவேதநாயகம்**
திருவண்ணாமலை.

### கணினியைப் பாதுகாப்போம்!

நேரிசை வெண்பா!
கணினிப்பயன்பாடு
கண்ணியமாக
மணக்கும் வகையிலே
மாண்பாய்... இனிக்கவே
காணவேண்டும்
கற்கண்டாய்க்காலமும்
வைக்கவேண்டும்!
பேணவேண்டும்
என்றுமே பீடு!

தரவுகளைக்காத்தேதான்
தக்க முறையில் உரிமையை
வாழ்த்திப்..பரிமாற்றம்
எல்லாமே மந்தனமாய்
என்றுமே வைக்கவேண்டும்
வெல்வோம் கணினியை
வீறு!

**முனைவர் இராம.வேதநாயகம்.**




### துரியோதனனின் மன்னிப்பு

நீரில் விழுந்த பின்
சிரித்தால் என் மனம்
மன்னித்திருக்கும்
திருதன் மகனே
பார்த்து வா எனும் போது
சிரித்த பின் மனம்
எங்கே போய் மன்னிக்கும்?
யாரை மன்னிக்கும்!?
நால் திசையும் வென்ற பின்
ஆணவத்தின் நெருப்பை
எதன் பொருட்டு மன்னிக்க
வேண்டும்? பீமனின்
வாக்குக்கு அவன்
கைகள் எங்களை
கொன்றது இப்போது
என் உயிரும் கண்களை
மூடினால் பிரிந்துவிடும்!
சூத்திரதாரிகள் தர்மத்தின்
பக்கமாய் நிற்பதாகவே
சொல்லிக்கொள்ளட்டும்
எங்கள் செயல்களுக்கு
மன்னிப்பு
வேண்டுமெனில்
அவர்கள்
வார்த்தைக்கும்
மன்னிப்பு
கோரட்டும்.



**நா.சதீஷ்குமார்**
தேவகோட்டை



### திருக்கார்த்திகை தீபமேற்றும் வேளை

வீடுதோறும் வேண்டும்..
பெண்ணொருத்தி
விளக்கேற்றிட..

காலங்காலமாய்
தொடரும் பாரம்பர்யம்..

வீட்டு பூஜையறையில்..
நிறையும் விளக்கொளி..

இல்லறமதில் அருளாகி
நல்லறம் செழிக்க
செய்திடுமே..

கார்த்திகை மாதத்தில்
இன்னுமோர் சிறப்பு..

வீதியிலும் வீட்டு வாசலிலும்..
ஏற்றப்படும் தீபங்களே..

வீட்டினை சுத்தம்செய்து..
அத்தனை விளக்கையும் ..

சுத்தம்செய்து திரியிட்டு..
நல்ல எண்ணை ஊற்றி..

பாங்குடனே அகல்களை
பொட்டிட்டு..
அணைந்துவிடாது எரிய..

பஞ்சுத்திரியதனை திரித்தே..
மங்கள் குங்குமம் இட்டு..

வீதியினில் தண்ணீர்
தெளித்து...பாங்காய்
கோலமிட்டு..

நடுவில்
குத்துவிளக்கேற்றி ..
அழகாய் பூவைத்து..

சுற்றிலும் அகல்களை
அடுக்கடுக்காய் ஏற்றி..

வாசல்களிலும்
திண்ணையிலும்
வீதியே விளக்கேற்றும்..

பேரழகை விளிக்க
இயலுமோ..குளிர்
ஆரம்பிக்கும் கார்த்திகையில்..

மங்களத்துடன் ஆரம்பிக்கும்..
இத்தனை ஏற்பாடுகள்..

சூழ்நிலையை குதூகலமாக்கி..
அவல்பொரி ருசித்து..

ஆறுமுகன் அவதரித்த..
அவதார திருநாளினையே..

போற்றிடும் நாளாக ..
நம் தமிழகமே கொண்டாடும்..

பரணி தீபமே ஆரம்பித்து
அண்ணாமலையானுக்கும்
சேர்த்து..

அரோகராவென
மகனின் கோஷத்துக்கு
உற்சாகத்துடனே..

அம்மையும் அப்பனும்..
தேரோடி களித்து..

திருநடனம் புரியும்..
கண்கொள்ளாக்காட்சியளித்து..

மலை மேலே தீபமேற்றும்..
பொன்னான வேளையிலே..

தமிழகமே ஜொலிக்கும்
தீபங்களின்
வெளிச்சத்திலே..



**உமாதேவி சேகர்**
பியூட்டிஷியன்
தஞ்சை

சரியாகப் பெய்த மழை
முழுமையான
போர்வையாகிறது பூமிக்கு.

குடையைத் தட்டிக்
கொண்டேயிருக்கிறது
நம் முகம் பார்க்க ஆசையாய்
மழை.

வேறென்ன வரம் வேண்டும்..
ஒரு மழையில்
முழுமையாய்
நனைந்தாலும்
சிதறாத
உடம்பைத்
தவிர.



**ரிஷபன்**



### அரிய பசிக்காம் சோறமுது!

அறுசீர் மண்டிலம்.

வாடிய பயிரைக் கண்டார்
வள்ளலார் நயன்மை யாக!
தேடியே சென்றார் ஏழை
தேர்ந்திட வாழத் தானே!
நாடியே அன்ன மிட்டார்
நலமதைச் செய்தார் தேனாய்!
பாடியே அருட்பா வைத்தான்
பரிவுடன் தந்தார் வள்ளல்!

அரியபொல் பசிக்குத் தானே
யாரவர் உணவ ளித்தால்
ஒருங்குடை வள்ள லாவார்
ஒண்மையாய்ச் சொல்லலாமே!
அருமையாய் இல்லா தார்க்கு
ஆங்கவர் அன்ன மளித்தார்
அவரன்றோ வள்ள லாவார்!
ஈங்குநாம் வாழ்த்தி யவரை
இனிமையாய் வாழ லாமே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### பிரளயம்

நம் எதிர்பார்ப்பு
நிகழ்வதில்லை
விரும்பியது போல
நடப்பதில்லை வாழ்ந்தாக
வேண்டிய நிர்ப்பந்தம்
அரசியலில் கேளிக்கை
கூத்துக்கள்

கோலிவுட்டில்
கதைக்கருவுக்குப் பஞ்சம்
சூறாவளி வரைந்த பேரழிவுத்
தடங்கள் நீர்
நில ஆகாய
மார்க்க
விபத்துக்கள்
உக்கிரமான
போரால்
உயிரிழப்புக்கள்



இனி நல்லெண்ணங்கள்
உதயமாகட்டும்
அவனி அமைதிப் பூங்காவாய்
மலரட்டும்

**பி. பழனி**, சென்னை.

### துளிப்பாக்கள்

அருகில் சென்று தொட்டு
பார்த்தாலும் சுடுவதில்லை
குளத்து நீரில் சூரியன்!

காற்று வீசும்போது
இலைகள் அசையும்போது
நிலவொளி அசைகிறது!

இலையில் வழிந்தோடும்
மழைநீரை வேர்கள்
குடித்து மகிழ்கிறது!

மழை கொண்டு வந்தது
வானத்தில் வர்ணஜாலம்
அழகிய வானவில்!

மிருகக்
காட்சிசாலை
ஒரு மான்
மிரண்டு
நின்று
வேடிக்கை
பார்த்தது
மனிதர்களை!



**பூ.சுப்ரமணியன்**
சென்னை



என் கொல்லையில் வாழை
வைத்திருக்கிறேன்.

வாழை நன்றாக
வளர்ந்திருக்கிறது.
பூத்துக் காய்த்துப் பூரித்து
நிற்கிறது. நீ
ஒரு வார்த்தை சொல்.

கொல்லையில்
நிற்கும்
வாழையை
வாசலில்
கொண்டுவந்து
வைக்கிறேன்.



**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சி கோட்டை

### இறுதி வேண்டுதல்..!


சூது கவ்வும் தர்மம்
இறுதியில் வெல்லும்
அதுவரை அதர்மம்
கொல்கிறது.
தீமைகளை சகித்தபடி
எல்லாம் நன்மைக்கே
பொறுமையைக்
கடைபிடித்தும்
வாழ்கிறோம்.
எல்லோர்க்கும்
கிடைக்கும்
கடவுளின் தரிசனம்
கொஞ்சம்
நல்லோர்க்கும்
கரிசன
மளவாவது
கிடைக்க
வேண்டும்
என்பதே என்
இறுதி வேண்டுதல்..!




**ஈ.கார்த்திகேயன்,**
அறமத்தாபாளையம்.

# நூல் விமர்சனம்

பெயர் : முரண்படும் திருமணங்கள்
ஆசிரியர் : திருமதி வசந்தா கோவிந்தராஜன்
வெளியீடு: புஸ்தகா
பக்கங்கள் : 171
விலை : ரூ190
வெளியான ஆண்டு :2025
புத்தகத் தேவைக்கு : 91–7418555884




திருமதி வசந்தா கோவிந்தராஜன் மிகச் சிறந்த எழுத்தாளர்.. குடும்ப கதைகளை உணர்ச்சி பொங்க எழுதுவதில் வல்லவர். இவருடைய புத்தகம் "முரண்படும் திருமணங்கள்" சமீபத்தில் படிக்க நேர்ந்தது. மிகவும் நேர்த்தியாக பின்னப்பட்ட குடும்ப கதை.. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் திருமணங்கள். ஒன்று தானாக தேடிக்கொண்ட திருமணம். மற்றொன்று உறவுக்குள் செய்து கொடுத்த திருமணம். மாறுபட்ட இரண்டு திருமணங்களின் நிகழ்வுகள் கதையை விறுவிறுப்பாக கொண்டு செல்கிறது.

மகனை விட்டுக் கொடுக்காத தாய் .. குடும்ப பாசத்திற்காக ஏங்கும் அமெரிக்க இளம்பெண் ஜெம்மா.. முதலில் சுயநலமாக இருந்து, பின் தன் வாழ்க்கைக்காக போராடும் தங்கை ஜெயந்தி.. தன் கௌரவத்தையே பெரிதாக நினைத்து ராமையும், ஜெம்மாவையும் வெறுக்கும் வெங்கடேசன்.. என வெவ்வேறு மாறுபட்ட குணமுடைய கதாபாத்திரங்கள் நாவலுக்கு மேலும் வலு சேர்க்கிறது. ஜெம்மா- ஸ்டீவ் சகோதர பாசம் மனதை தொடுகிறது.

அதிலும் முதல் பகுதி கதைக்களம் அமெரிக்கா என்பதால் அமெரிக்காவின் கலாச்சாரம்.. அந்நாட்டின் பழக்க வழக்கங்கள்.. ஆகியவற்றை கதையின் ஓட்டத்தோடு ஆசிரியர் சொல்வதால் நமக்கு அமெரிக்கா பற்றிய நிறைய விஷயங்கள் தெரிய வருகிறது. கதையின் சுவாரசியத்திற்கும் தனித்தன்மைக்கும் அந்த அந்நிய மண்ணின் கதைக்களம் பெரிதும் உதவுகிறது. அன்னிய மண்ணிலும், அந்நாட்டுப் பெண் நம் இந்திய கலாச்சாரத்தை பேணி அதற்குப் பெரிதும் மதிப்பு கொடுப்பது மனதை நெகிழ வைக்கிறது ..ஜெம்மா, ராமின் மனதில் மட்டுமல்ல நம் மனதிலும் இடம் பிடித்து விடுகிறாள் ..

கதை ஸ்ரீரங்கத்தில் ஆரம்பிக்கிறது.. கெடுபிடிக்கு பெயர் போன அப்பா வெங்கடேசன் ..தனக்கு பிடிக்காவிட்டாலும், அவருக்கு பயந்து, பணிந்து நடக்கும் மகன் ராம்..அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தமாக வாழும் அவன் பாசமான அம்மா.. சற்றே சுயநலக்காரியான தங்கை ஜெயந்தி என சின்னதான குடும்பம் அது.. தந்தை சொல்லுக்கு பயந்து கட்டுப்பட்டு வாழும் ராம் வாழ்க்கையில் ஒரு திருப்பம்.. மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்கிறான்..அங்கே கல்லூரியில் அமெரிக்க இளம் பெண் ஜெம்மா அவன் மனதை கவர்கிறாள். இந்திய கலாச்சாரத்தின் மேல் பெரிதும் நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருக்கும் ஜெம்மா..ஒரு கட்டத்தில் அவனை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாள் .. ஜெம்மாவின் வாழ்க்கையில் நடக்கும் சோகங்களும், தடுமாற்றங்களும், அவள் பேரில் ஒரு ஈர்ப்பை ராமுக்கு உண்டாக்குகிறது.. தந்தையின் எதிர்ப்பை மீறி அவளை கை பிடிக்கிறான் ராம் ..

ஜெம்மா இரண்டாவது குழந்தையை சுமக்கிறாள் பல வருடங்கள் தொடர்பின்றி இருக்க திடீரென அவன் அம்மாவிற்கு உடம்பு நலம் சரியில்லை என அப்பா போனில் அழைக்கிறார் ..தன் 5 வயது மகன் டைலர் உடன் இந்தியா விரைக்கிறான்.. சென்ற பின்பு தான் பிரச்சனை தாய்க்கல்ல தங்கைக்கு என்று புரிந்து கொள்கிறான்.

சொந்தத்தில் கொடுக்கப்பட்ட தங்கையின் வாழ்க்கையில் உள்ள சிக்கல்கள்.. சமாளிக்க முடியாமல் திணறும் அப்பா அம்மா மற்றும் தங்கை..

அதை எப்படி ராம் சரி செய்கிறான்.. அமெரிக்க பேரனை அவன் அப்பா அம்மா எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள்? இறுதியில் ஜெம்மாவின் அன்பு அவர்கள் மனதை மாற்றியதா? தங்கையின் வாழ்க்கை என்னவாயிற்று அவன் அப்பா அமெரிக்க மருமகளை ஏற்றுக் கொண்டாரா? என்பதற்கெல்லாம் சுவாரஸ்யமாக விடை கூறுகிறது முரண்படும் திருமணங்கள் என்ற இந்நாவல்..

மிக அருமையாக நீரோடையாய் செல்லும் கதையோட்டம்.. அருமையான இந்த நாவலை படிக்க தவறாதீர்கள் நண்பர்களே..

**தி.வள்ளி திருநெல்வேலி.**



பேராசை தான்
உன் முத்தங்களை
மொத்தமாய் வாங்க!

கனவில் கூட
எனை இம்சை செய்யும்
உனை எப்படி தடை
போடுவது?!

**லி.நௌஷாத் கான்-**

### நல்லவைகளை நாடு !

அ ருளாசியைப் பெற
ஆ ண்டவனை வேண்டு
இ ன் முகம் காட்டி
ஈ ன்றவரை நேசி
உ ள்ளம் கலங்காதிரு
ஊ ழ்வினை வந்தாலும் !
எ ந்த நிலையிலும் நடுநிலை
தவறாதே !
ஏ ட்டிக்குப் போட்டி
வேண்டாம்
ஐ யம் இட்டு உண் !
ஒ ட்டிக்கொள்
நல்லவர்களிடம்
ஓ டி விடு தீயவர்களைக்
கண்டால்
ஔ யாரின்
கவிதைகளைப்
படி
அஃ தே
போதும் நல்
வாழ்வுக்கு ! .



**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**

### உள்ளங்கையில் உலகம்

இணையத்தில் உலகத்தை இழுத்து வந்தே
இல்லத்தில் அமர்ந்தபடி காணு கின்றோம்
புனைகதையில் படித்துநாமும் வியந்து நின்ற
பிறக்கோளில் கால்பதித்தே ஆயு கின்றோம் !
முனைப்பாகச் செயற்கைக்கோள் பறக்க விட்டே
மூடியுள்ள புவிவளங்கள் அறியு கின்றோம்
துணையாக அறிவியலைச் சேர்த்துக் கொண்டு
துலங்காதப் புதிர்களினை விடுவிக் கின்றோம் !

கல்விதனைத் தொழிர்நுட்பக் கணினி மூலம்
கற்கின்ற முன்னேற்றம் நாமும் பெற்றோம்
பல்துறையின் அறிவுபெற்றே தொழிலின் கூடம்
பார்க்கின்ற இடமெங்கும் இயங்க வைத்தோம் !
வெல்லுகின்ற மின்னியலின் சாத னங்கள்
வீட்டிற்குள் குடிசைத்தொ ழில்போல் செய்தோம்
பல்விதமாய் உற்பத்தி செய்தே ஊரின்
பாதையோரம் விற்பனைக்குக் குவித்து வைத்தோம் !

நீர்தடுத்தே அணைகட்டிப் பசுமை செய்தோம்
நீரணுவில் மின்சாரம் பிரித்தெ டுத்தோம்
பார்வியக்க மூலிகையில் எரிநெய் காய்ச்சிப்
பதைபதைக்கும் எய்ட்சுக்கும் மருந்தைக்
கண்டோம் ! ஊர்தோறும் புதுமைகளைத்
தொடங்கி வைத்தே உள்கையில் உலகத்தை
வைத்த நாமோ போர்க்களமாய்ச் சாதிமதப்
பகையால் வெட்டிப்பெருக்குகின்ற குருதியிலே
சாயு கின்றோம் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**






## திருப்புமுனை....

தீட்டி முடிக்கும் முன்
உறங்கினானோ?... ஓவியன்...

சித்திரம் முழுமை பெறுவதற்கு
முன்... இருண்டு போனதோ?..
பொழுது...

விதை முளைப்பதற்குள்...
உறங்கி போனதோ?

பெற்றோர்கள் கனவு
கானல் நீரோ...

மரபணு.... உயிரியல் என...
காரணங்கள் எதுவோ?...

பூவுலகம் கண்ட மலரா
மொட்டுகள்....

பூக்காத...
பூச்செடிகள்...

அரவணைக்கிறது
வாழ்வியல்..

ஏற்றம் தரும்...

சிறப்புக் கல்வியல்...
இயலாதோரையும் இமயம்
தொட வைக்கும்... இயன்
முறை மருத்துவம்....

கலைப் பொருட்களாய்
கிடந்தோரை ...
வித்தகர்களாய்...
மாற்றியமைக்கும்... தொழில்
சார் மருத்துவம்...

மாற்றத்திற்கு வித்திடும்...
மறுவாழ்வு மருத்துவங்கள்...

நம்பிக்கை சொற்கள்...
மேலெழுந்து பறக்கும் ..
சிறகுகள்..

சமவாய்ப்பு...சம உரிமை...
வழங்கி...



சமத்துவமாய்
வாழ்வளிப்போம்...

உலக மாற்றுத் திறனாளிகள்
தினம்... டிசம்பர்...3

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## காதல் பலவகை !

எந்த நினைவுகள் உங்களை
அதிகமாக சிந்திக்க
வைக்கிறதோ....
அது தான் முதல் காதல் !

எந்த இடம் பார்த்தாலும்
அவள் பெயரை எழுதத்
தோன்றுகிறதோ...
அது முற்றிய காதல்... !

கவிதை என்ற
பெயரில்
கிறுக்கல்கள் செய்யத்
தோன்றுகிறதா...அது
காதல் கிறுக்கனில்
ஒரு வகை !

அவள் மீது அதீதமாய்
அன்பை வளர்த்து...
இறுதியில் நீ
வாயில் துண்டு பீடியும்,
தாடியும் உன்னை
அடையாளப்படுத்தினால் அது
ஒரு தலைக்காதல் !

சட்டையை கிழித்துக்கொண்டு
ரோட்டில் ஆடிப்பாடி
நடக்கிறாய் என்றால்
அது ஏமாற்( )றிய
காதல்....



என காதல்... பல
வகை... !

**எம்.பி.தினேஷ்**
கோவை



## மாசு கட்டுப்படுத்துவோம்!

நேரிசை வெண்பா!

மனித அலட்சியத்தால்
மாசுகள் காணும்!
புனித இடங்களே பூக்கும்..
இனிமையின்மை!
வாயு திடதிரவ வண்ணத்தால்
மாசுகள் ஓயாதிங்கேகாணும்

ஓர்!
ஞெகிழி ஒழித்திட
நேயம் மலரும்!
வகையாய் ஞெகிழி
வளராத்...தகவாகப்பாரில்
ஒழிப்போம் பசுமையைக்
காண்போம் சீருடன்
மாசொழிப்போம் சீர்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## எத்தனை ரகம்

" காக்கைக்கு பிண்டம்
உணவு மயிலுக்கு
அரிசிஉணவு ..."

எறும்புக்கு கைப்பிடி
அரிசி பசுவிற்கு
அகத்திக்கீரை ..."

பாம்பிற்கு பால்
குரங்கிற்கு பழம்
ஆட்டிற்கு வாழை இலை .... "

அணிலுக்கு சுவைக்க
பழங்கள் மரநாய்க்கு
இளநீர்..."

பன்றிக்கு கிழங்கு
நாய்க்கு பிஸ்கட்
குதிரைக்கு கொள்ளு
மனிதனுக்கு டீ ..."

மிருகங்களுக்கு
அருந்த நீர்
கொக்கிற்கு மீன்
பாம்புக்கு தவளை..."

மீனுக்கு மண்புழு
வண்டுக்கு தேன்
குருவிக்கு கூடு
பல்லிக்கு பூச்சி .... "

வவ்வாலுக்கு பழம்
கிளிக்கு நெல்
குழந்தைக்கு தாய்ப்பால் .... "

கொலுவுக்கு சுண்டல்
இறைவனுக்கு பிரசாதம் ..."



அப்பப்பா எத்தனை
விதம் எத்தனை ரகம்
அத்தனைக்குள்ளும்
உண்டு ஈரம் ...

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## எப்படி?!

உன்னை நினைப்பதற்கு
எனக்கு இருபத்து நான்கு
மணி நேரம் போதவில்லை!
நீ மட்டும்
எப்படி அன்பே என்னை
நினைக்காமலிருக்கிறாய்?!

## என்ன?!

அப்படி என்னதானடி
வைத்திருக்கிறாய்?!
உன் அந்தப் பார்வையில்!
என்னை இப்படிச் சுழற்றிச்
சுழற்றி அடிக்கிறதே!

## தங்கம்

உன் மனசு தங்கம் தான்!
நான் இல்லையென்று
சொல்லவில்லை!
அதில் வைரமாக
என்னைப் பதித்துக் கொள்
அன்பே!

## காதலரசி

நீ என் காதலரசி
என்றான பின் தான் என்
கவிதைகள் கொடி கட்டிப்
பறக்க ஆரம்பித்தது!

## உண்மை

நீயும் நானும் இருவரல்ல
ஒருவர் என்ற உண்மை
நமக்கு மட்டுமல்ல
ஊர் உலகுக்கே
தெரிந்திருக்கிறது!

## அழகு

எனக்கும் உனக்குமான
கா த ல் நம் இதயங்களிலு ம்
எனக்கும் உனக்குமான



க வி தை க ள் நம்
க ண் க ளி லு ம்
இருக்கிறது!

## ஆசை

போதும் என்ற மனமே
பொன் செய்யும் மருந்து
என்பது உண்மை தான்
என்றாலும் (கூட) உன்
முத்தங்களையுமா?!
போதும் என்று
சொல்வேன்
என் இனிய
உயிர்க்காதல்
அன்பே!

## அதிசயம்



இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்?!
என்று அடிக்கடி
உன் கா த ல் கண்கள்
என்னிடம் கேட்கின்றன
அன்பே!

## கேள்வி

என்னை நீ எவ்வளவு
காதலிக்கிறாய்?
என்று அடிக்கடி என்னிடம்
கேட்கிறாய்! காதலுக்கு ஏதடி
அளவு? என்று உன்னை
வியந்து மு த் த மி டு கி
றேன் நான்!

**முத்து ஆனந்த்** வேலூர்



## பட்டினத்தார்ப் பாட்டு.!

கொட்டி வைத்த நெற்குவியல்.. குவிநதிருக்கும் செல்வம்..
கட்டி வைத்த மாடி மனை.. கட்டியவள் பெற்ற பிள்ளை..
உறவினத்தார்.. எட்டி நின்றே சென்றாரே.. என்றுணர்ந்தான்
பட்டினத்தான்!

பட்டினத்தார் பாட்டெல்லாம் பாட்டு அல்ல.. பட்டுணர்ந்த
அனுபவத்தின் சாறு.! பாமரர்கள் மனதுக்குள் படர்ந்திருந்த
வேரு.. விட்டுவிட போகுதுயிர்.. சுட்டுவிடப் போகின்றார்
சுட்டியவன பட்டினத்தான் ஒருவன்.. அவன் சொற்களிலே
இருக்கிறவன் இறைவன்!



ஆடும் வரை.. ஆடு என்று ஆடவிட்டு..
ஓடவிட்டு.. காடுவரை யாருயென்று கதறவிட்டு
கண்ணீர் விட்டு.. செட்டி நாடுவிட்டு
சென்னைவந்து ஒற்றியூரில்.. சிவனடியில்
கலந்துவிட்ட. பட்டினத்தார் பாட்டுதானே..
பாட்டு! பட்ட அனுபவமே பட்டினத்தார்ப் பாட்டு.!

**வே.கல்யாண்குமார்.**



## பனைமரங்கள்

வெயிலுக்கும் மழைக்கும்
அபயம் அளிக்காத
வெற்றுக்குடைகள்!


பூதனையின் மறு
அவதாரங்கள் கண்ணனுக்கு
கொடுத்த பாலின்
எச்சத்தைக்
கொங்கைகளுக்குள்
ஒளித்துக்கொண்டதால் தான்
நுங்குகள் அமிர்த
கலசங்கள் ஆனதோ!

இங்கே நூலகங்களில்
இருக்கும் புத்தகக்
குழந்தைகளுக்கு உங்கள்
ஓலைச்சுவடிகளே
ஆதிக்கருவாய்ச்சூல்
கொண்டு அறிவு
களஞ்சியங்களை
உருவாக்கின!

நெட்டையானவர்களுக்கு
உவமையாகும் நீங்கள்
தன்மானச்சின்னங்களாய்த்
தலைநிமிர்ந்துநிற்கிறீர்கள்!
என்னவரம் வேண்டிக்
காலங்காலமாய்க்
கானகத்தில்
ஒற்றைக்காலில்
தவமிருந்து
காத்திருக்கிறீர்கள்!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்



## காணக்கிடைக்காமையின் ஆற்றாமை.

லட்சக்கணக்கில் செலவு செய்து மிக ஆடம்பரமாக
நடத்தி முடிக்கப்பட்ட திருமணத்தில் மாலை மாற்றிக்
கொண்ட தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் இல்லாமை.
நாள்தோறும் கடின உழைப்பால் எவ்வித நவீன
இயந்திரங்கள் துணையின்றி
மாத, ஆண்டுக்கணக்கில்,
தொழிலாளர்களின் கடின
உழைப்புடன், கடப்பாரையாலும்,
வெடிவைத்தும், தகர்த்து
அதலபாதாளம் வரை கிணறு
தோண்டியும் கிடைக்காத
தண்ணீர். பல நாட்கள்
திட்டமிட்டு ஒருநாள் நடுஇரவில்
வீட்டில் கன்னக்கோல்
துளையிட்டு உள்ளே நுழைந்து
ரகசிய அறையைத் தேடிக்
கண்டுபிடித்து அங்கிருந்த
பணப்பேழையைகடும்
முயற்சியுடன் திறந்தும்
அதனுள் எவ்விதப்
பணமும், தங்க
ஆபரணங்களும்இல்லாமை.



**உ.மு.ந.ராசன்கலாமணி.**
கோவை.



(டிசம்பர் 3 – உலக மாற்றுத்திறனாளிகள் தினம்)

## அன்பு காட்டுங்கள் அதுபோதும்..!

மாற்றுத்திறனாளி நண்பர்களை
கடவுளின் குழந்தை என்று சொல்லி
கடவுளைப் போல தனிமைப் படுத்தி
அறைக்குள்ளேயே அடைக்க வேண்டாம்.

உடலில் எந்தக் குறையிருந்தாலும்
இரக்கம்காட்டி அவர்களை நாம்
தனிமைப் படுத்திட வேண்டாம்
அன்பு காட்டுங்கள் அதுபோதும்.



பேருந்து ரயில் பயணத்தில்
இருக்கை கொடுத்த உதவ வேண்டாம்
அவர்களுக்கான இருக்கைகளில்
இருக்காமல் இருந்தால் அது போதும்.

மாற்றுத்திறனாளி நண்பர்களுக்கு
பேருந்து கட்டணத்தில் சலுகையாம்
அந்தச் சீட்டைப் பெறுவதற்கு
பல நடத்துனர்கள் அனுமதிப்பதில்லை.

பெயரில் கூட ஊனம் வேண்டாமென
மாற்றுத்திறனாளி ஆக்கினார் கலைஞர்
அவர்களுக்கு வழங்கும் சலுகையைக் கூட
தட்டிப் பறிக்கின்றார் நல்லவர் பலர்.

அவர்களும் நம்மில் ஒருவரென்பதை
உள்ளத்தில் நிறுத்தி உதவிடுவோம்
நம்மோடு இணைந்து பயணிக்க
நம்மால் இன்றதைச் செய்திடுவோம்.

**ச.கிறிஸ்து ஞான வள்ளுவன்,** வேம்பார்.

## பணிவே உயர்ந்தது...

மனத்தை குளிரச் செய்யும்
பண்பு பதவியும் பகட்டும்
வந்தாலும் பணிவுடன்
சேர்ந்தால் அதுவே சிறப்பு.
அமைதியான மனதுடன்
எதையும் செய்தால்
அதில் பணிவு வருமே
பணிவுடன் அடக்கமும்
சேரும்போது அது
மிகச் சிறப்பு எப்படி
நிலை உயர்ந்தாலும்
சிறிதும் தலைகனம்
என்று இருப்பதே பணிவு
பணிவு இருக்கும் இடத்தில்
உண்மையும் இருக்கும்
இவை எல்லாம் சேர்ந்தால்
அங்கு மகிழ்ச்சியே நிலவும்
மகிழ்ச்சியான பாதையில்
பணிவுடன் சேர்ந்து
நடக்கும் போது
சிறப்பே பணிவுடன்
நடந்து துணியுடன்
எதையும் நோக்கி
கனிவுடன் வாழ்வோம்



**உஷா முத்துராமன்**

## அரிய பசிக்காம் சோறமுது!

அறுசீர் மண்டிலம்.

வாடிய பயிரைக் கண்டார்
வள்ளலார் நயன்மை யாக!
தேடியே சென்றார் ஏழை
தேர்ந்திட வாழத் தானே!
நாடியே அன்ன மிட்டார்
நலமதைச் செய்தார் தேனாய்!
பாடியே அருட்பா
வைத்தான்
பரிவுடன் தந்தார் வள்ளல்!

அரியபொல்
பசிக்குத் தானே
யாரவர் உணவ ளித்தால்
ஒருங்குடை வள்ள லாவார்
ஒண்மையாய்ச்
சொல்ல லாமே!
அருமையாய் இல்லா தார்க்கு
ஆங்கவர் அன்ன மளித்தார்
அவரன்றோ வள்ள லாவார்!
ஈங்குநாம் வாழ்த்தி யவரை
இனிமையாய் வாழ லாமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## புரிந்து நட மனிதா

" கதிரவனுக்கு ஓய்வு
தலைக்காட்ட
அவசியமில்லை
கனமழை
மேகமூட்டம்..."

மழைச் சிதறலில்
தெரிக்குது மனம்
பசுமையின் வீரம்
மனங்களின் தாகம் ..."

இயற்கையின் ஏக்கம்
அதில் எழும்
சங்கீத நாதம் .... "

மரங்களின் சங்கமம்
பறவைகளின்
சுதந்திரம்...."

பொங்கி எழும்
சில்லென்ற காற்று
விலங்குகளுக்கும்
பறவைகளுக்கும்
விடுதலை .... "

சுயநல மனிதனுக்கு
மட்டும் பெருந்தடை
இயற்கையை
நேசித்து விடு ..."

தூய காற்றை
சுவாசித்திடு
மனிதா வேண்டாம்
சுயநலம்...."


நீயும் சுதந்திரமாய்
விடுதலை பெற்று
வாழ்ந்திடு பிறரை
வாழ விடு .... "

உலகம் உனக்கு
மட்டும் அல்ல
அனைவருக்கும்
சொந்தம் என்பதை
புரிந்து நட ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## சிவத்தீ

காணா முடி அடி
கொண்ட விடை பாகன்!
அனலாய் நின்றான்;
அண்ணாமலையில்.
தணலாய் நின்றாலும்;
புனலாய் அருளைப்
பொழிய;
பண்ணிய புண்ணியம்,
நண்ணிய வண்ணம்,
நலமாய் விளைய;
கண்ணியதுன் காட்சி.
பொன்னார் மேனியன்
செந்தழலாய்வந்தெனை
ஆட்கொண்டான்.
நமசிவாயம் சித்ததில்
புகுந்தது;
சிவத்தீயென.



**சசிகலா**
**விஸ்வநாதன்**

# வாசகர் கடிதம்

சிபி ராதாகிருஷ்ணன் ஒரு விவசாயி மகனாக இருந்து கொண்டு துணை ஜனாதிபதி பதவிக்கு உயர்ந்துளளார் என மோடி புகழாரம். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம் கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. சென்னையில் ரியல் எஸ்டேட் ஊழியரை கடத்தி 40 லட்சம் பறிமுதல். நாளை திருவண்ணாமலை மகாதீபம் கொண்டாடப்படுகிறது. கர்ப்பிணி பெண்கள் வேர்க்கடலை சாப்பிடலாமா என்ற கட்டுரை நல்ல பயனுள்ள தகவல். மைசூர் சுற்றுலா கட்டுரை பல அரிய தகவல்களை அறிய முடிந்தது. தஞ்சையில் 2000 ஏக்கர் பயிர்கள் சேதம். இனி வாட்ஸ் அப் பயன்படுத்த ஆக்டிவ் சிம் அவசியம் என அரசு உத்தரவு. ஆதாரில் உள்ள செல்போனை வீட்டிலிருந்தே மாற்றம் செய்யலாம். சபரிமலையில் 15 நாளில் 92 கோடி வசூல் ஆனது. வாக்காளர் திருத்த பணி பற்றி கேட்பது நாடகமல்ல என பிரியங்கா ஆதங்கம். திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பலனடைந்து உள்ளது என எலன் மாஸ்க் கருத்து தெரிவித்துள்ளார். சிறையில் இம்ரான் கான் உயிரோடு இருக்கிறார் என நம்பகமான தகவல்.

காதல் கவியரசு முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதைகள் தனி முத்திரை பதித்துள்ளன. காதல் வரிகள் ஒவ்வொன்றும் மணி மகுடம் பதித்தது போல் உள்ளது. தேனில் ஊறிய பலாச்சுவை போன்று இனிப்பாக இருந்தது. இன்றைய உலகச் செய்திகள் உள்ளூர் செய்திகள் ஆன்மீக செய்திகள் சிறுவர் மலர் ஆன்மீக மலர் சினிமா செய்திகள் கவிதைகள் கட்டுரைகள் பல சுவை செய்திகள் என அனைத்து அம்சங்களும் சிறப்பாக இருந்தது பாராட்டத்தக்கது. தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்திற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

---

துணை ஜனாதிபதியாக உயர்ந்த விவசாயி மகன்#சிபி ராதாகிருஷ்ணனுக்கு பிரதமர் மோடி ராஜ்ய சபாவில் புகழாரம்
எதிர்க் கட்சிகள் கடும் அமளி#மக்களவை ஒத்திவைப்பு
மகளிர் உரிமைத்தொகை வங்கிக் கணக்கில் ரூ.1 வந்தால் ஆயிரம் ரூபாய் உறுதி
ஒரு சீட்டுக்காக அதிமுக கூட்டணிக்கு செல்ல மாட்டோம்#பிரேமலதா விஜயகாந்த்
சென்னை: ரியல் எஸ்டேட் ஊழியரைக் கடத்தி ரூ. டிட்40 லட்சம் பறிப்பு
டிட்வா புயல் பயிர் சேத விவரங்களை கணக்கிடும்படி முதல்வர் ஸடாலின் அறிவுறுத்தல்
போலீஸ் மீதான மோசமான எண்ணத்தை பொதுமக்கள்/ இளைஞர்களின் பார்வையை மாற்ற வேண்டும்#டிஜிபிக்கள் மாநாட்டில் பிரதமர் மோடி
திருவண்ணாமலையில் நாளை கார்த்திகை மகா தீபம்#நாளை ஐந்தடுக்குப் பாதுகாப்பு
தி ஃபேமிலி மேன் இயக்குநர் ராஜ் நிடிமொருவை 2ம் திருமணம் செய்தார் நடிகை சமந்தா#நாக சைதன்யா மிகுந்த கோபத்தில் போட்ட இன்ஸ்டா பக்கம்
புதுக் கவிதைகள் அபாரம்
நூல் விமர்சனம் தூள்
வாசகர் கடிதங்கள் பிரமிப்பு
விஜடியில் 1100 மாணவர்களுக்கு ரூ.1 கோடி கல்வி உதவித் தொகை
தஞ்சாவூர் மாவட்டத்தில் 2000 ஏக்கர் சம்பா/தாளடி நெற்பயிரைச் சூழ்ந்த மழை நீர் தருமபுரி: குடிநீர் கேட்டு மக்கள் சாலை மறியல்
அரசு பஸ்கள் மோதலில் 11 பேர் உயிரிழந்த சம்பவத்தில் பிரதமர் மோடி நிவாரணம் அறிவிப்பு
வாட்ஸ் அப் பயன்படுத்த ஆக்டிவ் சிம் கட்டாயம்#மத்திய அரசு அதிரடி
மதுரவாயல் காவல் நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்#ஒருவர் கைது
மண்டல சீஸன்#15 நாட்களில் சபரிமலையில் 92 கோடி வருவாய்
புகையிலை /பான் மசாலாவுக்கு புதிய வரி தாக்கல் செய்தார் நிர்மலா சீதாராமன்
கேரள முதல் மந்திரி பினராயி விஜயனுக்கு அமலாக்கத் துறை சம்மன்
அதிக சதங்களடித்து விராட் கோலி புதிய சாதனை
சிறையில் இம்ரான் கான் உயிரோடிருக்கிறார்#பிடிஐ செனட் கட்சி உறுப்பினர் குர்ரம் ஜீஷன் தகவல்
திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பயனடைந்துள்ளது#எலான் மஸ்க் பகிர்வு
300 பேர் பலி; 400 பேரைக் காணவில்லை#டிட்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுத் தடங்கள்



-பி.சுரேகா
சென்னை

---

வணக்கம். 2.12. 25 அன்று தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் துணை ஜனாதிபதியாக உயர்ந்த விவசாய மகன் என்று பெருமையுடன் படித்தேன். நல்ல பஞ்சாங்கத்தை படித்து ரசித்து இன்றைய பொழுதை மிக அருமையாக அமைக்க உதவியது பாராட்டுக்கள்.

திருக்கார்த்திகை தீபத் திருவிழா என்று எல்லா கோவில்களிலும் திருவிழாக்களை பற்றியும் அந்த கோவில்களில் உள்ள சுவாமிகள் வலம் வருவதைப் பற்றி நல்ல அருமையான தகவல்களைப் படித்து ரசித்தேன் பாராட்டுக்கள்.

மழைக்காலத்தில் பாடாயப்படுத்தும் சுவாச பிரச்சனை என்னதான் செய்யலாம் என்று நலம் தரும் மருத்துவ பகுதி நல்ல ஆலோசனை வழங்கியது ஆரோக்கியமாக வாழ்வதும் பாராட்டுக்கள்.

கார்த்திகை தீபத் திருவிழா என்று திருவண்ணாமலையில் ஐந்து அடுக்கு பாதுகாப்பு போட்டு சுவாமி வலம் வந்ததை படித்தவுடன் மகிழ்ச்சியாக இருந்தது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் ஆலன் ஆக்டேலியன் ஹியூம் அவர்களின் வரலாறு மிகவும் அற்புதம். அவரைப் பற்றிய புதிய தகவலை தெரிந்து கொண்டேன்.

பல்சுவை களஞ்சியம் பகுதி மிகவும் அருமை மீம்ஸ் படித்தவுடன் சிரிப்பில் மகிழ்ந்தேன்..

சமையலறை ஸ்பெஷல் மிகவும் அருமை. புரத சக்தி நிறைந்த மல்டி கிரைன்ஸ் சுண்டல் தயாரிக்கும் முறை படித்தவுடன் நாவில் எச்சில் ஊற தயாரித்து ருசித்தேன்.

துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்த செய்தி மிகவும் அருமை. அந்த பக்கத்தில் வந்த அனைத்து ஆன்மீக தகவல்களும் மனதுக்கு இதமாக இருந்தது.

சுற்றுலா என்றால் மிகவும் அற்புதமாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் பல முக்கிய இடங்களை பார்க்க நல்ல அருமையான தகவல்களை கொடுக்கும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

அரசு பஸ்கள் மோதிக் கொண்டதால் 11 பேர் பலியானதற்காக நம் பாரத பிரதமர் மோடிஜி அவர்கள் நிவாரண அறிவிப்பு செய்தது அந்த குடும்பங்களுக்கு நல்ல தகவல்.

300 பேர் பலி 400க்கும் மேற்பட் டோர்களை காணவில்லை என்று இலங்கையில் வீசிய புயல் காற்றைப் பற்றியும் அங்கு நிகழ்ந்த பேரிடர் பற்றியும் படித்ததும் வருத்தமாக இருந்தது.

மிக அருமையான செய்திகளை மிக அற்புதமாக தயாரித்து எங்களுக்கு விடியலில் அறுசுவை உணவு போல வழங்கும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்










FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


WORK FROM
HOME
Extra
Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

FIRESUPPLIES
Safer Together

# YOUR GUIDE TO FIRE SAFETY EQUIPMENT

CHOOSING THE RIGHT TOOL FOR YOUR NEEDS



Call Us Now?
6363497974

---

குடோன் வாடகைக்கு விடப்படும்

கோவை வடவள்ளி
IOB காலனியில்
3614 sq.ft with
EB Service 150HP
CT: 88708 68595

---

Euro Kids™
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA™
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior



23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

---

நாங்குநேரியில் 40 சென்ட் (பைபாஸ் ரோட்டில் இருந்து 150அடி) வீட்டுமனை இடம் விற்பனைக்கு (இளந்தோப்பு)
9884431675
9176691675

---

சென்னையில் உயர்நீதி மன்றம் அருகில்
Double Room Rs.800/- Per day
Single Room Rs.650/- Per day
well furnished Attached Bath.
Wifi Facility
மாத வாடகைக்கு ரூம்கள் கிடைக்கும்
with Bath Attach
Rs. 9000- Rs.10000
Ct: 044- 25261430

---

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

---

கோவை பீளமேட்டில் உள்ள
லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

---

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM



Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

---

WORKSHOP FOR RENT
AT THANEERPANDAL ROAD WITH 5HP POWER SUPPLY 1200 SQFT BEHIND NOYYAL SUPER MARKET
CT: 96559 91887

---

இடம் விற்பனை
வடவள்ளி to கணுவாய் மெயின் ரோடு 15 சென்ட் (கிழக்கு) விற்பனைக்கு.
93601 18066

---

ஆட்கள் தேவை
நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
6385434442

---

ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை
பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

---

இடம் விற்பனைக்கு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.
தொடர்புக்கு :
98434 88428 / 94420 78428

---

Vilambaram



WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

---

COMMERCIAL COMPLEX FOR RENT



3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

---

CREST THE BEST @ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS



1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

---

DTCP APPROVAL
அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற
&
பில்டிங் பிளான் APPROVAL
லே அவுட் APPROVAL
84381 83848



# பல்சுவை களஞ்சியம்




# அந்த கால ஒழுக்க பாடம்



நீரால் கோலம்
போடாதே
நெற்றியைக் காலியாய்
விடாதே
குச்சியைக் கொளுத்தி
வீசாதே
இரவில் ஊசியை
எடுக்காதே

கால் மேல் காலைப்
போடாதே
காலையில் அதிகம்
தூங்காதே
தொடையில் தாளம்
போடாதே
தரையில் வெறுதே
கிடக்காதே

மலஜலம் அடக்கி
வைக்காதே
நகத்தை நீட்டி
வளர்க்காதே
ஆலயம் செல்லத்
தவறாதே

அதிகமாகப் பேசாதே

எண்ணெய் தேய்க்க
மறக்காதே
சந்தியில் நீயும்
உண்ணாதே

விரிப்பைச் சுருட்ட
மறக்காதே
பகலில் படுத்து
உறங்காதே

குளிக்கும் முன்பு

புசிக்காதே
ஈரம் சொட்ட நிற்காதே
நாமம் சொல்ல
மறக்காதே
நல்ல குடியைக்
கெடுக்காதே

தீய வார்த்தை பேசாதே
நின்று தண்ணீர்
குடிக்காதே
எதையும் காலால்
தட்டாதே
எச்சில் பத்தை
மறக்காதே

எல்லாம் சொல்லிக்
கொடுத்தாரே
எந்தன் குடியில்
மூத்தோரே
எல்லாம் கேட்டு
வாழ்ந்தோரே
என்றும் வளமாய்த்
தீர்வோரே

என்ன அழகான வரிகள்
இதை நம்
குழந்தைகளுக்கு
சொல்லி
கொடுக்கலாமே

# எலுமிச்சைப் பழத்தின் தோலில் இவ்வளவு நன்மைகளா!!



எலுமிச்சையில் அதிக கால்சியம், ஃபோலிக் அமிலம் மற்றும் சிட்ரிக் அமிலம் உள்ளது. இது தாகத்தைப் போக்க உதவும் பானமாகவும் மற்றும் பலவித மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ள பழமாகவும் உள்ளது. எலுமிச்சைப் பழத்தைப் போல எலுமிச்சைப் பழத்தின் தோலிலும் ஏராளமான நன்மைகள் உள்ளது.

எலுமிச்சைப் பழத்தின் தோலில் வைட்டமின் ஏ, சி, பீட்டா கரோட்டின், கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம் போன்றவை அதிகம் நிறைந்துள்ளது. மேலும் எலுமிச்சைப் பழத்தோல் ஆன்டிஆக்ஸிடன்டாகச் செயல்படுகிறது.

எலுமிச்சைப் பழத்தோலில் உள்ள நன்மைகள் :

பாத்திரத்தில் தேவையான அளவு வெந்நீர் ஊற்றி, அதில் எலுமிச்சை தோலைப் (எலுமிச்சை தோலின் உட்புறத்தில் உள்ள வெள்ளை தோலை நீக்கி) போட்டு 15 நிமிடங்களுக்கு பின் வடிகட்டி, அதனுடன் தேன் கலந்து குடித்து வந்தால், செரிமான மண்டலம் வலிமையாகி, உடல் எடை குறையும்.

எலுமிச்சைப் பழத்தின் தோலின் மூலமாக செய்யப்படும் டீயை தினமும் குடித்து வந்தால், உடலில் உள்ள ஹைட்ரஜன் அளவைச் சீராக்கி, கல்லீரலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

நமது நகங்களை 15 நிமிடங்கள் வெதுவெதுப்பான நீரில் ஊற வைத்து, பின் எலுமிச்சைத் தோலை நகங்களின் மேல் 30 வினாடிகள் தேய்த்து பின் கழுவினால், நகங்களில் உள்ள மஞ்சள் நிறம் மறைந்து விடும்.

எலுமிச்சைப் பழத்தின் தோலை பற்களில் தேய்த்து வாய் கொப்பளித்து வந்தால், பற்களில் உள்ள மஞ்சள் நிறமும் மறைந்து விடும்.

எலுமிச்சைத் தோலை துருவி, ஸ்பிரேயர் உள்ளே போட்டு அதனுடன் ஒயிட் வினிகரை சேர்த்து 2 வாரம் கழித்து, அதை அனைத்து இடத்திலும் சுத்தம் செய்யும் மருந்தாக பயன்படுத்தலாம்.

எறும்புகள், கரப்பான் தொல்லை போன்ற பூச்சிகளைத் தடுக்க சாக்பீஸ் பயன்படுத்துவதற்குப் பதிலாக, எலுமிச்சைப்பழத் தோலை பயன்படுத்தலாம்.

எலுமிச்சைத் தோலை வெயிலில் உலர்த்தி நன்றாக காய்ந்தவுடன் பொடித்து அதனுடன் தேன், சர்க்கரை, ஆலிவ் ஆயில் கலந்து முகத்தில் ஸ்கரப் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, முகம் பொலிவு பெறும்.

சிலருக்குக் கை, கால் முட்டிகளில் கறுப்பாக இருக்கும். அவர்கள் எலுமிச்சைத் தோலை கருமையான இடங்களில் தேய்த்துவர, கருமை நீங்கி, நல்ல பலன் கிடைக்கும். மேலும், இது சருமத்துக்குப் பளபளப்பையும் தர வல்லது. எலுமிச்சைப்பழத் தோலில் உள்ள எண்ணெய், நறுமணத் தைலங்கள் தயாரிக்க உதவுகிறது.

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

# ஜோக்ஸ்



ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?
ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

கடி ஜோக்ஸ்:
டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?

கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?
ஏன் அப்படி?
1330 குறலையும் 133 "அதிகாரமா" எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?



எல்லா பாடங்களையும் "சுமாராய்" தான் நடத்துவார்!

இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?
எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!

ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?
கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா "முழிச்சு"க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.




# விடுகதைகள்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?

2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?


3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

4. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.

6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

நீங்கள் யோசித்திருந்த விடைகள் சரிதானா என்பதை சோதித்துக் கொள்ளுங்கள்.

1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. செல்பேசி



# சிங்கத்தை வெற்றி கொண்ட கொசு

காட்டில் படுத்திருந்த சிங்கத்திடம் போய் ஒரு கொசு பேசத் தொடங்கியது.

"என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு.

"உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களை நறநற என்று கடித்து, நகங்களால் பிறாண்டுகிறாய், இது எப்படி இருக்கிறது என்றால், ஏழைப் பெண் தன் கணவனுடன் சண்டையிடுவதைப் போலத்தான் இருக்கிறது. சரி, வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்" என்றது உடனே இது 'ங்ஙொய்' என்று ரீங்காரம் செய்து கொண்டு சிங்கத்தின் மீது பறந்து, அதன் நாசியிலும்,



தாடையிலும் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம் கொசுவை விரட்ட, தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில், இரத்தம் வழிந்ததோடு, களைத்தும் போய் விட்டது.

வெற்றி முழக்கத்தோடு கொசு பறந்து சென்றது. சிறிது நேரத்தில் அந்த கொசு ஒரு சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டது. சிலந்தி கொசுவின் இரத்தத்தை உறிஞ்சியது.

"வலிமை மிகுந்த சிங்கத்தையே வெற்றி கொண்டு, இப்போது ஓர் சிறிய சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே" என்று கொசு வருந்தியது.

# வாழை மரம்



இலை தருவேன் இலை
தருவேன்
உட்கார்ந்து
ருசித்து சாப்பிட
தண்டெல்லாம் தான் தருவேன்
சமையல் செய்து மருந்தாய்
சாப்பிட
கனி தருவேன் கனி தருவேன்
இனிப்பாகச் சுவைத்துச்
சாப்பிட

நார் தருவேன் நார் தருவேன்
பூ கோர்த்திட, புடவையும்
நெய்திட
என்னை முழுமையாக
நான் தருவேன் மனிதன்
உனக்குத்தான்
என்னை நீரூற்றி வளர்த்துப்
பார்
எத்துனை நன்மை என்று
தெரிந்திட

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

# மாற்றியோசி



முதலையும் குரங்கும்
ஓர் அழகிய கிராமத்தில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த, ஆற்றங்கரையைச் சுற்றி பல நாவல் மரங்கள் இருந்தன. மரங்களில் குரங்குகள் பல தன் குட்டிகளுடன் வாழ்ந்து வந்தன. ஆற்றில் முதலைகள் வாழ்ந்து வந்தன .ஆற்றங்கரையைச் சுற்றி இருக்கும் நாவல் மரங்களில் பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. இந்த ஆற்றங்கரையைச் சுற்றி இருந்த நாவல் மரங்களில் நாவல் பழங்கள் காய்த்து உதிர்ந்தன. இதை உண்டு முதலைகள் வாழ்ந்து வந்தன.

முதலைகளுக்குப் பசிக்கும் பொழுது குரங்குகளிடம் கேட்கும்.
குரங்கே!குரங்கே! கொஞ்சம் நாவல் பழங்களைப் பறித்து போட்டேன்.

குரங்குகளும் மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கும். முதலைகளுக்கும் தேவையான பழங்கள் கிடைக்கும் . அப்படியே, முதலைகளும் குரங்குகளும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

அந்த ஆற்றில் இருந்த இளைய முதலை ,வயதான முதலையிடம் கேட்டது, எத்தனை நாட்கள் தான் நாம் இப்படி நாவல் பழங்களை உண்டு வாழ்வது .
நாவல் பழங்களை உண்ணும் குரங்குகளை உண்டால் என்ன ? என்று கேட்டது .
இதனைக் கேட்ட வயதான முதலை, நமக்கு உதவியவர்களையே உண்ண நினைப்பது எவ்வளவு பெரிய தவறு .
நமக்கு, உதவியவர்களுக்கு ஒரு போதும் நாம் தீங்கு நினைக்க கூடாது என்று அறிவுரை கூறியது.
இதனைக் கேட்ட இளைய முதலைக்கு கோபம் வந்து நீருக்குள் சென்று விட்டது.

ஒரு நாள் ,திடீரென்று குரங்கு குட்டி ஒன்று, மரத்திலிருந்து ஆற்றில் விழுந்தது. வேகமாக வேகமாக வந்த முதலை, தன் தலையால் அந்த குட்டியைக் காப்பாற்றி ஆற்றங்கரையில் இருந்த தாய் குரங்கிடம் விட்டது.

சிறிது நேரத்தில் பதறிப் போன தாய் குரங்கு, தன் குட்டியைக் கண்டதும் குட்டியை அணைத்துக் கொண்டு முதலைக்கு நன்றி கூறியது.
அப்போதுதான் இளைய முதலை தன் தவறை உணர்ந்தது . உதவுவதில் உள்ள மகிழ்ச்சியும் அறிந்து கொண்டது .
அறநெறி : 1.பெரியோரின் அறிவுரை நன்மை பயக்கும் . 2.நமக்கு உதவியவர்களுக்கு ஒருபோதும் துரோகம் நினைக்கக் கூடாது .

# யானை.!




ஓடிவந்து பாருங்கோ
யானை வருகுது!
ஒய்யாரமாய் வீதியிலே
யானை வருகுது.!
கூடிநின்று பாருங்கோ
யானை வருகுது!
ஆடிஅசைந்து குளித்துவிட்டு
யானை வருகுது.!

யானைமேலே முத்து அமர்ந்து
சுத்திப் பாக்குறான்!
யானைக்கொரு வாழைப்பழம்
பூமா கொடுக்கிறாள்.!
ஆசிவாங்க ரெண்டுரூபா
கிட்டு கொடுக்கிறான்!
ஆனையம்மா ஆனையென்று
பாட்டுப் படிக்குறான்!

பாரம் சுமக்க வித்தைக்காட்ட
யானையைப் பிடிச்சு
சங்கிலியால் காலில்கட்டி
பாடுபடுத்துவார்!
கோவில் வாசல் வீதியிலே பிச்சை
எடுக்க வைக்கிறார்
குட்டியானை தாய் யானை
பிரித்து வைக்கிறார்!

காட்டில் யானை வாழும் இடத்தில்
வீடுகட்டுவார்!
நாட்டுக்குள்ளே யானைவந்தா
வெடி வெடித்து ஓட்டுவார்!
யானையதனின் மனக்குறையை
யார்தான் அறிவார்?
யானைகளை வாழவிட்டால்
மனிதர் வாழுவார்!

# பொது அறிவுப் பூங்கா




(1). கணிதத்தில் பூஜ்ஜியத்தை அறிமுகப் படுத்தியவர் ஆர்யப்பட்டர்.

(2).செல் போனின் தந்தை என்று அழைக்கப் படுபவர் மார்ட்டின் கூப்பர்.

(3). உலக வர்த்தக மையத்தின் தலைமையகம் சுவிற்சலாந்தின் 'ஜெனிவா' நகரில் உள்ளது.

(3).இந்தியாவில், முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 1881ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் கவனர்ஜெனரலாக இருந்த ரிப்பன் பிரபுவால் தொடங்கப்பட்ட பட்டது.

(4).15.8.1914 ல் சூயஸ் கால்வாய் கப்பல் போக்கு வரத்துக்காக திறக்கப்பட்ட பட்டது.

(5)சூயஸ் கால்வாய் 102 கி. மீ.நீளம் உள்ளது.

(6). இங்கிலாந்தின் "ஹரிபாட்டர்" நாவலாசிரியர் J. K.ரௌலிங்.

(6). இமய மலையின் அதி உயரமான "மவுண்ட் எவரெஸ்ட்" சிகரத்தை "டேன்சிங் ஹிலரி" என்பார்,1953ஆம் ஆண்டு ஏறி சாதனை புரிந்தார்.

(7). காகிதம் என்பது உருது சொல்.தாள் என்பது தான் சரியான தமிழ்ச் சொல்.

# புதிய பாப்பா பாட்டு

பாடி வரவேணும் பாப்பா!
பாசம் மிகுந்தவளே பாப்பா!
தேடி வந்த தெய்வம் பாப்பா!
தேசத்தின் எதிர்காலம் பாப்பா!

வீதியிலே விளையாடும்
பாப்பா! வேடிக்கை
உலகம் இது பாப்பா! கீழே
விழுந்தாலும் பாப்பா!
கிளர்ந்தெழ மறவாதேப்
பாப்பா!
உண்மை உனக்குத்துணைப்
பாப்பா.. உன்படிப்பு அறிவின்
ஒளி பாப்பா! பெண்மை
உயர்ந்ததடிப் பாப்பா! நீ
பேசுகின்ற தெய்வமடிப்
பாப்பா.!

பாலியல் சீண்டல்களைக்
கண்டால்.. நீ பயம்
கொள்ளலாகாது
பாப்பா! தோலை
உரித்துவிடப் பாப்பா..
நீ துப்பாக்கி ஏந்திடடிப்
பாப்பா.!
காலையெழுந்தவுடன் சிலம்பம்!
பின்பு கனிவு கொடுக்கும்
கலை பரதம்! மாலைமுழுதும்
ஈட்டி எறிவாய்.. நீ மாவீரம்
கொண்டவள்தான் பாப்பா!
வீதியில் தலை நிமிர்ந்து
நடப்பாய்! வீணர்களின்
பார்வைகளை தூசாக
மதிப்பாய்! ஆணுக்கு நிகராக
இருப்பாய்.! நீ ஆதிசக்தி
வடிவமடிப் பாப்பா!

வே.கல்யாண்குமார்.




# ஆந்தை

ஆந்தை ஆந்தை
ஆந்தை
அளவில் பெரிய
ஆந்தை
ஏந்தும் எலியை
உண்ண
இரவில் பார்க்கும்
ஆந்தை!

இறக்கை பெரிய
ஆந்தை
இரவில் வேட்டை
ஆடும்
பறக்கும் வேக மாக
பார்வைக் கூர்மை
உண்டு!

சாய்ந்து சாய்ந்து
பார்க்கும்
சத்தம் இன்றித்
தாக்கும்
ஆந்தை ஆந்தை
ஆந்தை
அலறல் சத்தம்
போடும்!




முனைவர்
**இராம.வேதநாயகம்.**

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## கார்த்திகை மாதம் பிரதோஷம் பைரவர்க்கு அபிஷேக பூஜை வழிபாடு



**கிருஷ்ணகிரி, டிச.03:** அருள்மிகு கால பைரவ நாதர் அருள் பாலிக்கும் காட்சி கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் இருந்து சென்னை செல்லும் வழியில் கந்திகுப்பத்தில் ஸ்ரீகால பைரவ நாதர் கோவில் அமைந்துள்ளது. நேற்று கார்த்திகை மாதம் பிரதோஷம் பைரவர்க்கு அபிஷேக பூஜை வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.பைரவர் ஆலயத்தில் அன்னதானங்கள் காலை முதல் இரவு வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அருள்மிகு கால பைரவ நாதர் அருள்மிகு திரிபுர பைரவி இருவரும் மக்கள் அனைவருக்கும் அருள் பாலித்தார்.

தகவல்:சிவசக்தி ஊத்தங்கரை

## மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி



**விக்கிரவாண்டி,டிச.03:** விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி ஊராட்சியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி மற்றும் அரசு பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு பனிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தேர்வு எழுத சுலபமாக உள்ள வழிகாட்டி வினா-விடை தொகுப்பு "தேர்வை வெல்வோம்" எனும் கையேடினை சரி அன்னியர் சிவா எம்எல்ஏ வழங்கினார்.உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் சங்கீதாஅரசி, ஒன்றிய கழக செயலாளர் ரவிதுரை, வேம்பி ரவி, RP.முருகன், நகர கழக செயலாளர் நைனா முகமது, ஒன்றிய அவைத் தலைவர் இருந்தனர்.

## அலங்காரத்தில் அருள் பாலிக்கும் சர்வலிங்கேஸ்வரபெருமான்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் சர்வலிங்கேஸ்வரபெருமான்

# புதுபாடி கிராமம் பிராதோஷம்





புதுபாடி கிராமம் பிராதோஷத்தில் அலங்கரிக்கப்பட்ட சுவாமிகள்.

## மாணவர்களுக்கான விலையில்லா மிதிவண்டி



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி சுப்பையா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்ற மாணவர்களுக்கான விலையில்லா மிதிவண்டிகளை கலெக்டர் இளம் பகவத் முன்னிலையில் அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்.

## மழைநீர் தேங்கிய பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஆய்வு



சென்னை ரங்கராஜ் புரம் பகுதியில் மழைநீர் தேங்கிய பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஆய்வு செய்தார்.

## வெள்ள தடுப்பு பணிகளை அமைச்சர் நாசர், கலெக்டர் பிரதாப் ஆய்வு



திருநின்றவூர் ஓஷா ஏரி பகுதியில் வெள்ள தடுப்பு பணிகளை அமைச்சர் நாசர், கலெக்டர் பிரதாப் ஆய்வு செய்தனர்.

## எழுதுகோல் விருது



தினத்தந்தி நாளிதழ் நிர்வாக ஆசிரியர் சுகுமாருக்குகலைஞர் எழுதுகோல் விருதை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

## கி.வீரமணி 93 வது பிறந்த நாள் விழா



தி.க.தலைவர் கி.வீரமணி 93 வது பிறந்த நாள் விழாவில் துணை முதல்வர் உதயநிதி வாழ்த்து கூறினார்.

## கள்ளப்பிரான் கோயிலில் கைசிக புராணம் வாசிக்கப்பட்டது



நவதிருப்பதிகளில் முதல் திருப்பதியான ஸ்ரீவைகுண்டம் கள்ளப்பிரான் கோயிலில் கைசிக புராணம் வாசிக்கப்பட்டது.

## திண்டிவனம் நகர மன்ற அவசர கூட்டம்



திண்டிவனம் நகர மன்ற அவசர கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் நேற்று டிசம்பர் 2 திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் நகராட்சி ஆணையர் பானுமதி நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## பல்லாவரத்தில் கலைஞர் நூலகத்தை அமைச்சர் அன்பரசன் திறந்து வைத்தார்



பல்லாவரத்தில் கலைஞர் நூலகத்தை அமைச்சர் அன்பரசன் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இ.கருணாநிதி எம்எல்ஏ உடன் உள்ளார்.

## திருமண விழாவில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன்



திருநெல்வேலி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சங்கர பாண்டியன் மகன் திருமண விழாவில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வாழ்த்தினார்.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்



ஈரோடு நசியனூரில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகத்தை கலெக்டர் கந்தசாமி வழங்கினார்.

## லட்சுமிநாராயணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்



பழனி லட்சுமிநாராயணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## இலக்கிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகள்



விழுப்புரம் வடக்கு மாவட்டம்-மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்மொழி இலக்கிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகளை நேற்று டிசம்பர் 2 மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் எல்பி நெடுஞ்செழியன் பாராட்டினார்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம்

**செய்யாறு டிச. 3:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம் நடைபெற்றது.

ஆலய குரு சங்கர் குருஜி யாக வேள்வி பூஜை நடத்தினார் பின்னர் மூலவரான ஸ்ரீகாமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

சிறப்பு அலங்காரத்தில் அம்பாள் அருள் பாலித்தார். அதனைத் தொடர்ந்து மகா ஆரத்தி நிகழ்வில் திரளான



பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## பாராட்டு சான்றிதழ்



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட உதவி தேர்தல் அலுவலர், சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு கலெக்டர் அழகு மீனா பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

### ரவுசு மணி

வெற்றி என்பது நீங்கள் விரும்புவதை பெறுவது.......

மகிழ்ச்சி என்பது நீங்கள் பெறுவதை விரும்புவது.....



V. முத்து ராமகிருஷ்ணன்

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதிய உணவு



திருவொற்றியூர் ராஜாஜி நகரில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னாள் எம்எல்ஏ குப்பன் மதிய உணவு வழங்கினார்.

## அமைச்சர் கீதா ஜீவன் ஆய்வு



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி பாத்திமா நகர் பகுதியில் மழைநீர் தேங்கிய இடங்களில் அமைச்சர் கீதா ஜீவன்நேரில் சென்று ஆய்வு செய்த போது...!

## வேலைவாய்ப்பு கார்னர்

### கேந்திரிய வித்யாலயா, நவோதயா பள்ளிகளில் 14,967 பணியிடங்கள்: விண்ணப்பிக்க நாளை கடைசி...



மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் நாடு முழுவதும் செயல்பட்டு வரும் கேந்திரிய வித்யாலயா மற்றும் நவோதயா வித்யாலயா பள்ளிகளில் இந்த ஆண்டுக்கான பெருமளவிலான காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE), கேந்திரிய வித்யாலயா சங்கதன் (KVS), நவோதயா வித்யாலயா சமிதி (NVS) ஆகியவை இணைந்து வெளியிட்டுள்ள அறிவிப்பில், மொத்தம் 14,967 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் டிசம்பர் 4 வரை ஆன்லைனில் மட்டுமே ஏற்கப்படுகின்றன. இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இன்னும் 2 நாட்கள் மட்டுமே உள்ளது. இந்த அறிவிப்பில் உள்ளபடி, கேந்திரிய வித்யாலயாவில் 9,126 காலியிடங்களும், நவோதயா பள்ளிகளில் 5,841 காலியிடங்களும் உள்ளன. இதில் 13,008 பணியிடங்கள் PRT, TGT, PGT, முதல்வர், துணை முதல்வர், நூலகர் உள்ளிட்ட ஆசிரியர் பிரிவைச் சேர்ந்தவை.

அடுத்ததாக 1,959 பணியிடங்கள் நிர்வாக அலுவலர், உதவி ஆணையர், நிதி அலுவலர், உதவி பிரிவு அலுவலர், பொறியாளர், மொழிபெயர்ப்பாளர், ஸ்டெனோ உள்ளிட்ட ஆசிரியர் அல்லாத பிரிவுகளாகும்.

10ஆம் வகுப்பு முதல் டிகிரி, அதற்கு மேல் இருக்கும்படி தகுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் CBSE, KVS, NVS ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ இணையதளங்களான cbse.gov.in, kvsangathan.nic.in, navodaya.gov.in ஆகியவற்றில் சென்று ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். மேலும், விண்ணப்பிப்பதற்கு முன் கல்வி தகுதி, வயது வரம்பு, ஒதுக்கீடு ஆகியவற்றையும் கவனிப்பது அவசியம்.

## சுற்றுலா: மைசூரில் சுற்றி பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள் (2)




### ஸ்ரீசாமராஜேந்திரா விலங்கியல் பூங்கா

மைசூர் மிருகக்காட்சிசாலை என்றும் அழைக்கப்படும் ஸ்ரீ சாமராஜேந்திர விலங்கியல் பூங்கா 1892 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மைசூரில் பார்க்க வேண்டிய சிறந்த இடங்களில் இந்த மிருகக்காட்சிசாலை ஒன்றாகும், குறிப்பாக உங்களுக்கு குழந்தைகள் இருந்தால். இது இப்போது 78 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. நம் நாட்டைச் சேர்ந்த உயிரினங்களைத் தவிர, இந்த மிருகக்காட்சிசாலையில் மற்ற மிருகக்காட்சிசாலைகளிலிருந்து வாங்கப்பட்ட வெளிநாட்டு விலங்குகளும் உள்ளன. நீங்கள் நீண்ட வார இறுதிக்காக மைசூரில் இருந்தால், சந்தேகத்திற்கு இடமின்றி மூன்று நாட்களில் பார்வையிட வேண்டிய இடங்களில் மிருகக்காட்சிசாலை ஒன்றாகும். மேலும், நீங்கள் குழந்தைகளுடன் பயணம் செய்கிறீர்கள் என்றால், இது கட்டாயம் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

### நாட்டுப்புற அருங்காட்சியகம்

மைசூரில் இருக்கும்போது இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டால் நல்லது. இது 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது, இப்போது சுமார் 6500 நாட்டுப்புறக் கலைகள், பொம்மைகள், தென்னிந்திய பொம்மைகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் உள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் பல்வேறு வகையான நடனம், நாடகம் மற்றும் இசை கூறுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகத்தில் உள்ள கண்காட்சிகள் பிரம்மாண்டமான பொம்மைகள், நாட்டுப்புறவியல், இலக்கியம், கலை மற்றும் நாட்டுப்புற வாழ்க்கை உள்ளிட்ட பல துறைகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பொம்மைப் பகுதியில், பல்வேறு அளவுகளில் உள்ள பொம்மைகள் டேல் பூட்டா, கைபூட்டா, மாரி, சோமா மற்றும் காடி மாரி நடனங்களில் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மீனவர்கள், குயவர்கள், மாலுமிகள், கொல்லர்கள், பொற்கொல்லர்கள், விவசாயிகள், தோல் பதனிடுபவர்கள் மற்றும் பலர் பயன்படுத்தும் பல்வேறு கருவிகள் ஒரே நேரத்தில் நாட்டுப்புற வாழ்க்கை பகுதியில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இது மைசூர் பல்கலைக்கழக மைதானத்தின் அழகான பசுமையில் அமைந்துள்ளது. முன்னாள் அரண்மனை அற்புதமான கட்டிடக்கலை சிறப்பையும், கடந்த காலத்தின் கலைத் திறனின் உச்சத்தையும் காட்டுகிறது.

காட்சிப்படுத்தப்பட்டுள்ள தனித்துவமான நாட்டுப்புற கலை மற்றும் கைவினைப்பொருட்களைத் தவறவிடாதீர்கள். அரண்மனை பல்கலைக்கழக வளாகமாக மாறிய இந்த இடம் பிரமிக்க வைக்கிறது, மேலும் மைசூருக்கு உங்கள் விடுமுறையின் போது கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

### கரஞ்சி ஏரி

கரஞ்சி ஏரி இந்தியாவின் கர்நாடகாவின் மைசூரில் உள்ள ஒரு அழகான ஏரியாகும். சாமுண்டி மலைகளின் அடிவாரத்தில் அமைதியையும் அழகையும் தேடும் உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு பிரபலமான இடமாகும். கரஞ்சி ஏரி வளமான சூழலையும் அமைதியான நீரையும் கொண்டுள்ளது. இந்தப் பகுதியின் ஏராளமான பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கவும் வெளிப்படுத்தவும் உருவாக்கப்பட்ட கரஞ்சி ஏரி இயற்கை பூங்கா, ஏரியின் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாகும். கரஞ்சி ஏரி பறவை ஆர்வலர்களின் சொர்க்கமாகும், இது ஆண்டுதோறும் பல்வேறு வகையான பறவை இனங்களை ஈர்க்கிறது. கர்நாடகாவின் மிகப்பெரிய ஏரி ஒரு அழகான மற்றும் அமைதியான காட்சியாகும். இது மைசூரில் உள்ள மிக அழகான இடங்களில் ஒன்றாகும்.

### ஜகமோகன் அரண்மனை

மைசூரில் இன்று பார்வையிடப்படும் இடங்களில் ஒன்றான ஜெகன்மோகன் அரண்மனை, ஆரம்பத்தில் அரச குடும்ப அரண்மனையாக வடிவமைக்கப்பட்டது, ஆனால் பின்னர் ஒரு கலைக்கூடமாக மாற்றப்பட்டது. பல முக்கியமான தென்னிந்திய கலைப்பொருட்கள் மற்றும் கலைப்படைப்புகள் இந்த காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ராஜா ரவி வர்மாவின் எண்ணெய் ஓவியங்கள் மற்றும் SGHELDNKR இன் "லேடி வித் தி லாம்ப்" போன்ற இந்திய கலைஞர்களின் புகழ்பெற்ற படைப்புகளும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. கலைக்கூடத்தில் பழங்காலப் பொருட்கள் மற்றும் சில அற்புதமான தலைசிறந்த படைப்புகளும் உள்ளன. அற்புதமான ஜெகன்மோகன் அரண்மனை ஒரு அரச இல்லமாக கட்டப்பட்டது,

## மயிலாடுதுறையில் கனமழை காரணமாக வாழை, சம்பா பயிர்கள் பாதிப்பு

**மயிலாடுதுறை, டிச.3:**

மயிலாடுதுறை:டிட்வா புயல் காரணமாக மயிலாடுதுறை மாவட்டத்தில் பலத்த காற்றுடன் பெய்த மழையில் பல்வேறு இடங்களில் வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்துள்ளதுடன், நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாயிகள் பரவலாக பல்வேறு இடங்களில் வாழை சாகுபடி செய்துள்ளனர். இதில், தரங்கம்பாடி வட்டம் ஆறுபாதி கிராமத்தில் 3 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்களில், நவ.29-ம் தேதி வீசிய பலத்த காற்றில் 450 மரங்கள் முறிந்து சேதமடைந்தன. மேலும், அல்லிவிளாகம், செம்பதனிருப்பு, கீழையூர், வானாதிராஜபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் பல ஏக்கர் வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்துள்ளதாக வேதனை தெரிவித்த விவசாயிகள், உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இந்நிலையில், இந்த மழையால் ஆறுபாதி ஊராட்சியில் 500 ஏக்கர் சம்பா, தாளடி நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: வடகிழக்கு பருவமழை தொடங்கி அக்டோபர் மாதம் பெய்த மழையில் நாற்றுகள் அழுகி வீணாகிவிட்டன. மீண்டும் 2-வது முறையாக நடவு செய்த நிலையில், தற்போது டிட்வா புயல் காரணமாக பெய்த மழையில் இப்பகுதியில் 500 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி வேர்கள் அழுகி வருகின்றன. மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## கூட்ட நெரிசல் விசாரணை: கரூருக்கு உச்ச நீதிமன்ற ஓய்வு நீதிபதி அஜய் ரஸ்தோகி, ஏடிஜிபிக்கள் வருகை

**கரூர், டிச.3:**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை சிபிஐ விசாரித்து வரும் நிலையில், கரூர் சுற்றுலா மாளிகைக்கு உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி மற்றும் ஏடிஜிபிக்கள் சோனல் மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் வந்தடைந்தனர்.

கரூர் மாவட்டத்தில் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் பிரச்சாரத்தின் போது கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 நபர்கள் இறந்தது தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறையினரின் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த விசாரணையை மேற்பார்வை செய்திட உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழுவினர் நீதிபதி அஜய் ரஸ்தோகி, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் 02.12.2025 அன்று கரூர் மாவட்டத்துக்கு வருகை தருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இதர பொது மக்கள்/ அமைப்புகள் ஆகியோர் மனுக்கள் எதும் அளிக்க விரும்பினால் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் மேற்படி குழுவினரிடம் நேரடியாக 02.12.2025 அன்று காலை 10:30 மணி முதல் மனுக்கள் அளிக்கலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் தெரிவித்திரு ந்தார்.

இந்நிலையில், கரூர் சுற்றுலா மாளிகைக்கு உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி, ஏடிஜிபிக்கள் சோனல் மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் வந்தடைந்தனர். இவர்களை மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

இதனிடையே, கூட்ட நெரிசலில் உயிரிழந்த பழநியம்மாள், கோகிலாவின் பெற்றோர் பெருமாள், செல்வராணி ஆகியோர் மனு அளிக்க கரூர் சுற்றுலா மாளிகைக்கு வந்தனர்.

அதேபோல், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை (தனியரசு) மாவட்டச் செயலாளர் அருள் குமார் கரூர் சுற்றுலா மாளிகைக்கு வருகை தந்து நடந்த துயர சம்பவத்துக்கு விஜய்தான் காரணம் எனப் புகார் அளித்தனர்.

## தொழில்துறை எரிசக்தி திறனில் தமிழ்நாடு முதலிடம்

**சென்னை, டிச.3:**

தொழில்துறை எரிசக்தி திறனில் இந்தியா வின் முதல் மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளதாக மாநில எரிசக்தி திறன் குறியீடு அமைப்பு தெரிவித்து உள்ளது. மாநில ஆற்றல் திறன் குறியீடு 2024-இல் குழு-1 பிரிவில் 55.3 சதவீத மதிப்பெண்களுடன் தமிழ்நாடு முத லிடம் பிடித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டை நம்பர் 1 மாநில மாக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதன் பயனாக இந்த சாதனை கிடைத்துள்ளது. ஆந்திரம் 27.5 சதவீதம், ஒடிசா 23.1 சதவீதம், சத்தீஸ்கர் 28.8 சதவீதம் வளர்ச்சி பெற்று அடுத்த இடங்களில் உள்ளன. கட்டுமானத் துறையில் ஆற்றல் திறன் முயற்சிகளை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மேலும், அதிக எண்ணிக்கையிலான சான்ற ளிக்கப்பட்ட பசுமை கட்டடங்களைக் கொண்ட முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் உள்ளது. PEACE திட்டத்தின் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு 2023-24-இல் 2.6 கோடி ரூபாய் முதலீடு செய்யப் பட்டுள்ளது. எரிசக்தி பாதுகாப்பு விருதுகளின் எண்ணிக்கையில் மராட்டியம், தமிழ்நாடு, ஒடிசா ஆகியவை முன்னணி யில் உள்ளன.

## தூத்துக்குடியில் மின்சார பேருந்து உற்பத்தி: வின்ஃபாஸ்ட் திட்டம்




**சென்னை, டிச.3:**

மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான வின்ஃபாஸ்ட், மின்சார பேருந்து உற்பத்தியில் களம் இறங்குகிறது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் தூத்துக்குடி ஆலையில் மின்சார பேருந்துகளை தயா ரிக்க திட்டமிட்டுள்ளது. ரூ.16,000 கோடி மதிப்பில் தூத்துக்குடியில் அமைக்கப்பட்ட வின்ஃபாஸ்ட் ஆலையை முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் கடந்த ஆகஸ்ட் மாதம் திறந்து வைத்தார். இது வரை மின்சார கார்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்த இந்த ஆலையில், இனி மின்சார பேருந்துகளும் தயாரிக்கப்படும். 6 முதல் 12 மீட்டர் நீளமுள்ள மின்சார பேருந்துகளை அறிமுகம் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 281 KWH பேட்டரி திறனுடன் ஒரே சார்ஜில் 260 கி.மீ. பய ணிக்கும் திறன் கொண்ட இந்த பேருந்துகள், தற்போது வியட்நாம் மற்றும் ஐரோப்பாவில் விற்பனையில் உள்ளன.

## கிண்டி ரேஸ் கிளப் நிலத்தில் மழைநீர் சேகரிப்பு குளங்கள், பசுமைவெளி பூங்கா அமைக்க ஐகோர்ட் அனுமதி

**சென்னை, டிச.3:**



சென்னை, கிண்டியில் உள்ள ரேஸ் கிளப் நிலத்தில், மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கவும் அனுமதி அளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை கிண்டியில் ரேஸ் கிளப்புக்கு வழங்கப்பட்ட நிலத்துக்கான குத்தகையை ரத்து செய்த தமிழக அரசு, மீட்கப்பட்ட இடத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பசுமைவெளி பூங்கா மற்றும் மாநகராட்சி சார்பில் மழை நீரை சேமிக்க நான்கு குளங்கள் என மழைநீர் சேகரிப்பு திட்டமும் அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த திட்டங்களை அமல்படுத்துவதை எதிர்த்தும், குத்தகையை ரத்து செய்து, நிலத்தை அரசு சுவாதீனம் எடுத்ததை எதிர்த்தும் ரேஸ் கிளப் நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த தனி நீதிபதி, இந்த விவகாரத்தில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் எஸ். எம் சுப்பிரமணியம் மற்றும் முகமது ஷபிக் அமர்வு, சென்னை வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக, மக்களின் நலன் கருதி, கிண்டி ரேஸ் கிளப் இடத்தில் நான்கு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறி, கிண்டி ரேஸ் கிளப்புக்கு சொந்தமான இடத்தில் மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கவும் அனுமதி அளித்து உத்தரவிட்டது. கடந்த 2015-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களையும், உடைமை சேதங்களையும் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், கடந்த காலங்களில் மழை வெள்ளத்தால் சென்னையில் ஏற்பட்ட பாதிப்புகளை பார்க்கும் போது இது போன்ற திட்டங்கள் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அரசின் இந்த நடவடிக்கை மூலம் சுற்றுச்சூழல் சம நிலை ஏற்படுவதோடு, காற்று மாசுவை குறைக்க இயலும் எனவும் காற்று மாசு என்பது வெறும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினை மட்டுல்ல எனவும் பொதுமக்களின் உடல் நலன் சார்ந்த பிரச்சினை எனவும் உத்தரவில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் நிலம் என்பது மிகவும் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அரசு நிலத்தை குறிப்பிட்ட தனிநபர்கள், தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்த அனுமதிப்பது மக்களின் நம்பிக்கையை சீர்குலைப்பது போலாகும் எனவும் கூறிய நீதிபதிகள், தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளனர்.


# சென்னை அருகே நீடிக்கும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்! கல்பாக்கம் அருகே கரையைக் கடக்கும்!

**சென்னை, டிச.3:**

சென்னை கடற்கரைக்கு அருகில் நிலை கொண்டிருந்த டிட்வா புயல், தற்போது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவிழுந்துள்ளது. இதனால் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இது அடுத்த 18 மணி நேரம் சென்னை கடற்கரைக்கு அருகில் நிலை கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமைப்பு மாலை முதல் இரவு வரை மேலும் வலுவிழந்து, சென்னைக்கு தெற்கே கல்பாக்கம் பகுதிக்கு அருகே கரையைக் கடக்கும்.



இந்த அமைப்பு சென்னையின் அட்சரேகைக்கு மேலே நகரவில்லை, இது சென்னையின் அட்சரேகைக்குக் கீழே இருக்கும் வரை, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் நேற்று (டிச. 2) முழுவதும் ஒன்றன் பின் ஒன்றாக மேகங்களைப் பெற்று, நீர் அலைகள்போல உடைந்து போகும்.

மிதமான மழை:

இந்த அமைப்பு தென்தமிழகத்தை கடந்து டெல்டா கடற்கரை வரை செல்கிறது. மதுரை, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்கள் வரை செல்கிறது.

புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும்.

காற்றழுத்த தாழ்வு பகுதி கரையைக் கடந்ததும் ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் மழை பெய்யும்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### புத்தருக்கு விண்வெளியில் ஒரு விகாரம்!

விண்வெளியை மனிதன் ராக்கெட் மூலம் அளக்க ஆரம்பித்ததன் விளைவாக புதுப்புது விசித்திரங்கள் உருவாக ஆரம்பித்தன.

பல்வேறு பொருள்கள் விண்ணில் அனுப்பப்பட ஆரம்பித்தன. இவை பற்றிய பல செய்திகள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானில் பல புத்தமத குருமார்கள் ஒன்று கூடினர்.

விண்வெளியில் ஒரு புத்த விஹாரத்தை ஏற்படுத்துவது என்பது தான் அவர்கள் எடுத்த முடிவு.

கைரோஸ் என்ற ராக்கெட்டை அவர்கள் விண்ணில் ஏவினர். பூமிக்கு மேலே விண்வெளியில் 110 கிலோமீட்டர் தூரத்தில் டாய்நிசி நையோராய் (பிரபஞ்சத்தில் புத்தர் என்று அர்த்தம்) நிர்மாணிக்கப்பட முயற்சி எடுக்கப்பட்டது. புத்த மண்டலம் விண்ணில் ஏவப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இது வெற்றி பெறவில்லை.

இந்த புத்தருக்கான கோவில், அமேசானில் வீட்டு டெலிவரிக்கு உபயோகப்படும் சிறிய பெட்டி அளவே தான் இருந்தது. அந்தப் பெட்டி தங்க முலாம் பூசப்பட்ட தகடினால் மூடப்பட்டிருந்தது.

ஜப்பானியர்களில் ஏராளமானோர் ஜப்பானுக்கு வெளியே இப்போது வசிக்கின்றனர். அவர்கள் இறந்து வானில் போகும் போது அவர்கள் புத்தரைப் பார்க்கும் படி இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

பல்வேறு நாடுகளில் வசிக்கும் மனிதர்கள் எதையேனும் விண்வெளியில் அனுப்ப வேண்டும், அப்படி அனுப்புவதில் முதலாவதாகத் தாங்கள் திகழ வேண்டும் என்று நினைக்கின்றனர்.

மனிதர்கள், செல்லப் பிராணிகள் ஆகியோரின் அஸ்திகள், ஏன் டைனோசரின் அஸ்திகூட அனுப்பப்பட்டு விட்டது. சின்னச் சின்ன துண்டுகள் தாம் இவை.

இண்டிகா நூடில் ஃபாபியானோ என்ற ஒரு நாயின் அஸ்தி ஜனவரி 2024ல் விண்ணுக்கு அனுப்பப்பட முயற்சி எடுக்கப்பட்டு தோல்வி அடைந்தது.

பீயின் ஏஐ என்ற ஒரு நிறுவனம் எமி ஜிடோ என்ற ஒரு புத்த குருவின் டிஜிட்டல் போட்டோவை ஒரு டிஸ்க்கில் வைத்து டிசம்பர் மாதம் (2025ல்) அனுப்பத் தீர்மானித்துள்ளது.

பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் ரஷியருக்கு உரிய பகுதியில் பல மத சம்பந்தமான படிமவியல் பொருள்கள் உள்ளன.

சரி, யாருமே படிக்க முடியாத இடத்தில் இப்படி மத சம்பந்தமான ஆவணங்கள் ஏன் அனுப்பப்படுகின்றன?

இந்தச் செய்திகள் தொலைதூரத்தில் உள்ள இன்னொரு பிறவியிலாவது படிக்கப்படும் என்ற ஒரு நம்பிக்கை தான்!

# முதலமைச்சரின் ‘தாயுமானவர்’ திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் 1.11 லட்சம் பேர் பயன்

**சேலம், டிச.3:**

முதலமைச்சரின் ‘தாயுமானவர்’ திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் தற்போது 1,11,312 பயனாளிகள் நன்மை பெறுகின்றனர் என்று கலெக்டர் இரா.பிரிந்தாதேவி “நிறைந்தது மனம்” நிகழ்வில் தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 1,06,421 மூத்த குடிமக்கள் குடும்ப அட்டைதாரர்கள், 3,844 மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்கள் உள்ளிட்ட மொத்தம் 1,10,265 குடும்ப அட்டைகளிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மாதாந்திர ரேஷன் பொருட்கள் வீடு தேடி வழங்கப்படுவதால் மொத்த பயனடைபவர்கள் எண்ணிக்கை 1,11,312 ஆக உள்ளது. 2025 ஆகஸ்ட் 12 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டம், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வீட்டிலேயே ரேஷன் பொருட்கள் வழங்கும் நோக்கத்துடன் முதலமைச்சர் அறிமுகப்படுத்தினார். இதன் பின்னர் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், கருப்பூர் பகுதியிலுள்ள பலரின் இல்லங்களுக்கு சென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்கி திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

ஆகஸ்ட்-செப்டம்பர் 2025 மாதங்களில் மட்டும் 92,998 பேருக்கு வீடு தேடி ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டன. அக்டோபர் முதல் குடும்ப அட்டையில் 6570 வயது உடைய 17,267 பேர் புதிய பயனாளிகளாக சேர்க்கப்பட்டதால் மொத்த எண்ணிக்கை 1.11 லட்சமாக உயர்ந்துள்ளது. விநியோகத்தை எளிதாக்க மாவட்டம் முழுவதும் 1,207 குழுக்கள் அமைக்கப்பட்டு, 1,447 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் 70 குடும்ப அட்டைகளுக்கு 1 வாகனம், மலைப்பகுதியில் 50 குடும்ப அட்டைகளுக்கு 1 வாகனம், கிராமப்பகுதியில் 60 குடும்ப அட்டைகளுக்கு 1 வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. டிசம்பர் 2 மற்றும் 3, 2025 ஆகிய தேதிகளில் ரேஷன் பொருட்கள் வீடு தேடி வழங்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார்.

# ரத்தம் கொடுப்பவர்களை எளிதில் தொடர்பு கொள்ள “ரத்ததானம்” செயலி

**கோவை, டிச.3:**

இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நினைவாக அவரது பேரன்கள் ஷேக் சலீம் மற்றும் ஷேக் தாவூத் நடத்தி வரும் ‘ஏ.பி.ஜே அப்துல் கலாம் இன்டர்நேஷனல் பவுண்டேஷன்’ சார்பில் புதிய ரத்ததான செயலி ஒன்றை கோவையில் அறிமுகம் செய்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட நீதிபதி முகமது ஜியாபூதீன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ‘நண்பன் ப்ரோ’ என பெயரிடப்பட்ட ரத்ததான செயலியை அறிமுகப்படுத்தி வைத்தார்.




இந்த செயலி மூலம் ரத்தம் தானம் செய்ய விரும்புபவர்கள், ரத்தம் வைத்திருக்கும் நபர்கள், ரத்த வங்கிகள் மற்றும் மருத்துவமனைகளை ஒரே தளத்தில் இணைத்து, அவசரமாக ரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக தகவல் அளித்து ரத்தம் எளிதாகக் கிடைக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய செயலி தயாரிப்பாளர் பார்வதி குருசாமி, “டாக்டர் கலாம் ‘எளிமை, சேவை, மனிதநேயம்’ என்ற கொள்கையை முன்னிறுத்தியே இந்த செயலியை உருவாக்கியுள்ளோம். ரத்தப் பற்றாக்குறையால் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாவதைத் தடுக்கவும், பொது மக்களுக்கு எந்த நேரத்திலும் எளிய முறையில் ரத்தம் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் இந்த செயலி பெரிதும் உதவும். ஏற்கெனவே இதில் பல கோடி மக்கள் பதிவு செய்துள்ளனர். இனி யாரும் ரத்தம் தேடி அலைய வேண்டிய அவசியம் இருக்காது” என்று தெரிவித்தார். அதைத் தொடர்ந்து “கோவையின் பெருமை” என்ற தலைப்பில் மருத்துவம், கல்வி, பொது சேவை, பொறியியல் உள்ளிட்ட 10 துறைகளில் சிறந்து விளங்கும் 10 வல்லுநர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயேந்திர ராவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# விஜய் சாலைவலத்தை அனுமதிக்க கூடாது!

## புதுவை சட்டப்பேரவைத் தலைவர் வேண்டுகோள்

**புதுச்சேரி, டிச.3:**

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யின் சாலைவலத்துக்கு புதுச்சேரி காவல்துறையினர் அனுமதி மறுத்திருப்பது சரியான முடிவுதான் என்று சட்டப்பேரவைத் தலைவர் செல்வம் தெரிவித்துள்ளார்.

கரூரில் பிரசாரத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் பலியான பிறகு, முதல்முறையாக புதுச்சேரியில் வருகின்ற டிசம்பர் 5 ஆம் தேதி விஜய் சாலைவலம் மேற்கொள்ள தவெக சார்பில் அனுமதி கோரப்பட்டது.

ஆனால், விஜய்யின் சாலைவலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து, புதுவை ஐஜி ஏகே சிங்களாவை நேரில் சந்தித்து தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் கடிதம் வழங்கினார்.



இதனைத் தொடர்ந்து, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை நேரில் சந்தித்து, விஜய் சாலைவலத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று ஆனந்த் கோரிக்கை வைக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், செய்தியாளர்களை சந்தித்த புதுவை பேரவைத் தலைவர் செல்வம் தெரிவித்ததாவது:

”கரூரில் மிகப் பெரிய சம்பவம் நடந்துள்ளது. விஜய்யின் சாலைவலத்துக்கு அனுமதி மறுத்திருப்பது சரியான முடிவுதான். தமிழ்நாட்டைப் போன்று புதுச்சேரியில் பெரிய சாலை அமைப்பு கிடையாது. மிகக் குறுகிய சாலைகளே புதுவையில் இருக்கின்றது.

தவெகவினர் அனுமதி கேட்டிருப்பது மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கும் பகுதி. சாலைவலத்தை தவிர்த்துவிட்டு பொதுக்கூட்டம் நடத்திக் கொள்ளலாம். சாலைவலத்தை தவிர்க்க வேண்டும் என்று தவெகவினருக்கு வேண்டுகோள் வைக்கிறேன். இதுதொடர்பாக முதல்வரிடமும் வேண்டுகோள் வைத்துள்ளேன்.” எனத் தெரிவித்தார்.

### சாலைவலத்துக்கு அனுமதி கோரும் வழித்தடம்

காலாப்பட்டில் தொடங்கி அஜந்தா சிக்னல், உப்பளம் வாட்டர் டேங்க், மரப்பாலம், அரியாங்குப்பம், தவளக்குப்பம், கிருமாம்பாக்கம், கன்னியக்கோவில் வழியாக விஜய் சாலைவலம் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது.

உப்பளம், சோனாம்பாளையம் வாட்டர் டேங்க் அருகில் விஜய் உரையாற்றவுள்ளார் என்றும், காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை அனுமதி அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

# க்ரைம் கார்னர்

## கொடுங்கையூரில் சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரை விற்பனை: மருந்துக்கடை அதிபர் கைது

**சென்னை, டிச.3:**

கொடுங்கையூர் பகுதியில் சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகளை பீகாரில் இருந்து வாங்கி வந்து விற்பனை செய்த வழக்கில் 8 நபர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், தனிப்படை போலீசார் பீகார் சென்று மருந்து கடை உரிமையாளரை கைது செய்தனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் உத்தரவின்பேரில் சென்னை பெருநகரில் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு 12 காவல் மாவட்டங்களில் காவல் துணை ஆணையாளர்கள் மேற்பார்வையில், உதவி ஆணையர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கொண்ட தனிப்படையினர் தொடர்ந்து கண்காணித்து, போதைப் பொருட்களை வைத்திருப்பவர்கள், கடத்தி வருபவர்கள், பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களை கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், கடந்த 19.11.2025 அன்று இரவு, கொடுங்கையூர், ஆர்.ஆர். நகர் பகுதியில் கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த சில நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் உடல்வலி நிவாரண மாத்திரைகள் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் கொடுங்கையூர் காவல் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகளை விற்பனைக்காக வைத்திருந்த 8 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து மொத்தம் 1,800 எண்ணிக்கைகள் கொண்ட உடல்வலி நிவாரண மாத்திரைகள், 1 ஐபோன் உட்பட 3 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் பீகார் மாநிலத்தில் உள்ள மெடிக்கல் ஷாப்பில் உடல்வலி நிவாரண மாத்திரைகளை மொத்தமாக வாங்கி வந்து விற்பனை செய்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து மாத்திரைகளை விற்பனை செய்த மருந்து கடை உரிமையாளர் பெரோஸ் ரிஷா (46) என்பவரை கைது செய்து, அங்குள்ள சரக நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, உரிய சட்ட நடவடிக்கைகளுடன் சென்னைக்கு அழைத்து வந்தனர்.

## வேலூர் அருகே மின்வேலியில் சிக்கி 3 பேர் பலி - விவசாயி கைது

**ஒடுகத்தூர், டிச.3:**

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அருகே உள்ள ராமநாயினி குப்பத்தை சேர்ந்தவர் ஜானகிராமன் (வயது55), விவசாயி. இவரது மனைவி மல்லிகா(50). இவரது மகன்கள் விகாஷ் (25), லோகேஷ் (23), ஜீவா (22).

லோகேஷ் பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்து இருந்தார். விகாஷ், ஜீவா ஆகியோர் சொந்த ஊரிலேயே ஜானகிராமனுக்கு உதவியாக நர்சரி கார்டன் வைத்து விற்பனை செய்து வந்தனர். இந்த நிலையில் நேற்றிரவு ஜானகிராமன் மற்றும் அவரது மகன்கள் விவசாய நிலத்திற்கு சென்றனர். அப்போது வனவிலங்குகளுக்கு அமைக்கப்பட்டு இருந்த மின்வேலியில் சிக்கி ஜானகிராமன் அலறி துடித்தார். இதனை பார்த்த 3 மகன்களும் தந்தையை காப்பாற்ற முயற்சி செய்தனர். அப்போது 3 மகன்களும் மின் வேலியில் சிக்கி கொண்டனர். சிறிது நேரத்தில் ஜானகிராமன், விகாஷ், ஜீவா ஆகிய 3 பேர் மீதும் மின்சாரம் பாய்ந்து உடல் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். லோகேஷ் படுகாயமடைந்தார்.

இதுகுறித்து வேப்பங்குப்பம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்த பக்கத்து நிலத்தை சேர்ந்த சங்கர் (52), விவசாயி என்பவரை தேடி வந்தனர். இந்த நிலையில் இன்று காலை குப்பம்பட்டு கிராமத்தில் இருந்த அவரை போலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மயிலாப்பூரில் அடுத்தடுத்து நடந்த கொலைகள்..

**சென்னை, டிச.3:**

சென்னை மயிலாப்பூர் பகுதியில் உள்ள மாதவப் பெருமாள் கோவில் வாசலில் நேற்று மாலை இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த இளைஞரை வழிமறித்த மர்ம கும்பல் கத்தியால் ஓட ஓட வெட்டியது. இதில் படுகாயம் அடைந்த இளைஞர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை பட்டினப்பாக்கம் ஸ்ரீனிவாசன்புரம் பகுதியை சேர்ந்தவர் 20 வயதுடைய அஸ்வத் எனப்படும் சூசை. இவர் மீது அடிதடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதாக தகவல்கள் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று மாலை மயிலாப்பூர் பகுதிக்குட்பட்ட மாதவப் பெருமாள் கோயில் அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த அஸ்வத்தை முன்கூட்டியே திட்டம் தீட்டி பின் தொடர்ந்து வந்த கும்பல், கத்தியை கொண்டு ஓட ஓட துரத்தி வெட்டியுள்ளனர்.

தலையில் ஆழமான காயத்துடன் ரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்த அஸ்வத்தையை பார்த்த அப்பகுதி பொதுமக்கள், உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மயிலாப்பூர் போலீசார் ரத்த வெள்ளத்தில் மிதந்த அஸ்வத்தையை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சையில் இருந்த அஸ்வத் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனை தொடர்ந்து கொலை முயற்சி வழக்காக இருந்ததை கொலை வழக்காக மாற்றிய போலீசார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சஞ்சார் சாத்தி செயலி வேண்டாம் என்றால் டெலீட் செய்து கொள்ளலாம்: மத்திய அரசு




**புதுடெல்லி, டிச.3:**

சஞ்சார் சாத்தி செயலி வேண்டாம் என்றால் பயனர்கள் அதனை டெலீட் செய்து கொள்ளலாம் என்று மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

சைபர் பாதுகாப்பு காரணங்களுக்காக மத்திய அரசு பிரத்தேயகமாக உருவாக்கியுள்ள சஞ்சார் சாத்தி செயலியை புதிய செல்போன்களில் கட்டாயம் நிறுவ வேண்டும் என்று ஸ்மார்ட்போன் நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. சஞ்சார் சாத்தி செயலியை புதிய போன்களில் நிறுவிய பிறகே விற்பனைக்கு அனுப்ப வேண்டும் என்றும், ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் இதனை 90 நாட்களுக்குள் உறுதி செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசின் இந்த உத்தரவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இது மக்களை உளவு பார்க்கும் முயற்சி என அவை விமர்சித்துள்ளன. சஞ்சார் சாத்தி பிரச்சினை குறித்து விவாதிக்க பிற அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி மாநிலங்களவை காங்கிரஸ் உறுப்பினர் ரேணுகா சவுத்ரி, மாநிலங்களவையில் ஒத்திவைப்பு தீர்மானத்தை கொண்டு வந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, "சஞ்சார் சாத்தி செயலியை ஒருவர் தனது ஸ்மார்ட்போனில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். புதிதாக வர உள்ள ஸ்மார்ட்போன்களில் அந்த செயலி இருக்கும். வேண்டும் என்போர் அதனை அப்படியே வைத்துக்கொள்ளலாம். வேண்டாம் என நினைப்பவர்கள் அதனை டெலீட் செய்யலாம். இது பயனர்களின் முடிவுக்கு உட்பட்டது.

இந்தசெயலியைஅனைவருக்கும் அறிமுகப்படுத்துவது அரசின் கடமை. அதை தங்கள் ஸ்மார்ட்போனில் வைத்திருப்பதாக இல்லையா என்பது பயனர்களின் முடிவைப் பொறுத்தது. விற்கப்படும் போன்கள் முறைப்படியானதா என்பதை சரிபார்க்கவும், போன் தொலைந்து போனால் அதனை கண்காணிக்கவும் இந்த செயலியை அரசாங்கம் ஒரு வழிமுறையாக முன்மொழிந்துள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த பாஜக எம்பி சஷாங்க் மணி, "நான் ஐஐடியில் படித்தவன். எனவே, எத்தகைய சைபர் தாக்குதல்கள் நடக்கின்றன என்பதை நான் புரிந்து கொள்கிறேன். இந்த செயலி (சஞ்சார் சாத்தி) மக்களின் பாதுகாப்பு உணர்வை அதிகரிக்கும். நமது மொபைல் போனில் உள்ள தரவுகள் இதனால் கசியாது. அதோடு, டிஜிட்டல் முறையில் குடிமக்களின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்படும். இதை நான் வரவேற்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

இந்த புதிய செயலி குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்பி சசி தரூர், "அரசாங்கம் முன்வைக்கும் வாதத்தை இன்னும் விரிவாக ஆராய வேண்டும். உத்தரவுகளைப் பிறப்பிக்கும் முன்பாக அரசாங்கம் பொதுமக்களுக்கு எல்லாவற்றையும் விளக்க வேண்டும். இந்த முடிவின் பின்னணியில் உள்ள கருத்தை அரசாங்கம் விரிவாக தெரிவிக்கும் வகையில் விவாதம் நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## இரு அவைகளும் ஒத்தி வைப்பு

**புதுடெல்லி, டிச.3:**

நாடாளுமன்ற மக்களவை காலை 11 மணிக்குக் கூடியதும், மக்களவையின் மையப் பகுதிக்கு வந்த எதிர்க்கட்சி எம்பிக்கள், எஸ்ஐஆர் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளி காரணமாக அவையை பகல் 12 மணி வரை அவைத் தலைவர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடிய போதும் அமளி நீடித்ததால் தற்போது மதியம் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை காலை 11 மணிக்கு சி.பி. ராதாகிருஷ்ணன் தலைமையில் கூடியது. அப்போது, விதி எண் 267ன் கீழ் 21 நோட்டீஸ்கள் பெறப்பட்டுள்ளதாகவும் எனினும், அவை நிராகரிக்கப்பட்டதாகவும் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து எதிர்க்கட்சி எம்பிக்கள் எஸ்ஐஆர் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதனால், மாநிலங்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

## எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் ஆர்ப்பாட்டம்




**புதுடெல்லி, டிச.3:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குளிர்கால கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான நேற்று நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக நாடாளுமன்றத்தின் மகர் துவார் பகுதியில் இண்டியா கூட்டணி எம்பிக்கள், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு (எஸ்ஐஆர்) எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர். பிஹாரைத் தொடர்ந்து 12 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் எஸ்ஐஆர் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வாக்குத் திருட்டில் ஈடுபடக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இதை வலியுறுத்தும் வகையில் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இண்டியா கூட்டணி எம்பிக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "ஆந்திரா, தமிழ்நாடு அல்ல... சீனா, ஜப்பான்தான் எங்களுக்கு போட்டி" - ரேவந்த் ரெட்டி

**ஹைதராபாத், டிச.3:**

சீனா, ஜப்பான்தான் எங்களது போட்டியாளர்கள், ஆந்திரா அல்ல என்று தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

'2047-க்குள் தெலங்கானாவை வளர்ச்சி பெற்ற மாநிலமாக எழுப்புவோம்' என்ற பெயரில் தொலைநோக்குத் திட்டத்தை முதல்வர் ரேவந்த் ரெட்டி நேற்று ஹைதராபாத்தில் வெளியிட்டார்.

VISION 2047பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: 2047-க்குள் தெலங்கானாவை மிகவும் வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாற்றுவதே எங்களது இலக்கு. அதற்கான முதல்படிதான் இந்த 2047 விஷன் திட்டம். சீனா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் வளர்ச்சி பெற்று இருப்பதைப் போலவே தெலங்கானாவை மாற்ற இந்த பரந்த திட்டத்தை உருவாக்கியுள்ளோம். தென் கொரியா, சிங்கப்பூர், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள்தான் எங்களது போட்டியாளர்கள்.

ஆந்திரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை நாங்கள் போட்டியாளர்களாக கருதவில்லை. ஆசிய பொருளாதார வல்லரசு நாடுகளுக்கு எதிராக தெலங்கானா அரசு தனது அளவுகோலை நிர்ணயித்து வருகிறது என்றார்.

# சித்தராமையா, சிவகுமார் மீண்டும் சந்திப்பு: தீராமல் தொடரும் கர்நாடக அரசியல் குழப்பம்!



**பெங்களூரு, டிச.3:**

கர்நாடகாவில் சித்தராமையா முதல்வராக பதவியேற்று இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், துணை முதல்வர் டி.கே. சிவகுமாருக்கு முதல்வர் பதவி வழங்க வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் போர்க்கொடி உயர்த்தினர்.

இதனால், காங்கிரஸ் மேலிடத்துக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கட்சியின் மூத்த தலைவர்களான சோனியா காந்தி, ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், மேலிட பொறுப்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா ஆகியோரிடம் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து கடந்த நவ.30 அன்று முதல்வர் சித்தாரமையாவின் வீட்டுக்கு வருகை தந்த துணை முதல்வர் டி.கே.சிவகுமார் அங்கு காலை உணவு சாப்பிட்டார். பின்னர் இருவரும் தனியாக 15 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினர். அதன் பிறகு 'தங்களுக்குள் எந்தவித கருத்து வேறுபாடுகளும் இல்லை' என இருவரும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இன்று (டிச.2) மீண்டும் சித்தராமையா, சிவகுமார் இருவரும் சேர்ந்து காலை உணவு சாப்பிட்டுள்ளனர். இந்த முறை சிவகுமாரின் அழைப்பை ஏற்று அவரது வீட்டுக்கு வருகை தந்துள்ளார் சித்தராமையா. அங்கு அவருக்கு காலை உணவு பரிமாறப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது டி.கே. சிவகுமாரின் சகோதரரும் முன்னாள் எம்.பி.யுமான டி.கே. சுரேஷும் உடன் இருந்தார். தொடர்ந்து இரண்டாவது முறையாக இருவரும் சந்தித்துக் கொண்ட நிகழ்வு, கர்நாடக காங்கிரஸில் நிலவும் உட்கட்சி பூசலைக் குறைப்பதற்கான முயற்சியாக எதிர்கட்சிகளால் விமர்சிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள கர்நாடக உள்துறை அமைச்சர் ஜி.பரமேஸ்வர், "இரு தலைவர்களும் மீண்டும் சேர்ந்து காலை உணவு அருந்துவது வரவேற்கத்தக்கது. கடந்த ஒரு மாதமாக நடந்து வரும் குழப்பங்களுக்கு ஒரு அமைதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எங்களின் விருப்பம்." என்று கூறியுள்ளார்.

கட்சியில் நிலவும் இந்தக் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விரைவில் டெல்லியில் முக்கியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். "தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்க டெல்லியில் முக்கியத் தலைவர்களை அழைத்துப் பேசி இறுதி முடிவு எடுக்கப்படும்" என்று கார்கே தெரிவித்துள்ளார்.

# பிஹார் சட்டப்பேரவை சபாநாயகராக பாஜக மூத்த தலைவர் பிரேம் குமார் ஒருமனதாக தேர்வு



**பாட்னா, டிச.3:**

பிஹார் சட்டப்பேரவை சபாநாயகராக பாஜக மூத்த தலைவர் பிரேம் குமார் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பிஹார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் 202 தொகுதிகளை ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கைப்பற்றியது. இதில், பாஜக 89, ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களைக் கைப்பற்றின. தேர்தல் வெற்றியை அடுத்து, கடந்த நவ. 20ம் தேதி நிதிஷ் குமார் முதல்வராக பதவியேற்றார். அவருடன் 2 துணை முதல்வர்கள் உட்பட 26 அமைச்சர்கள் பதவியேற்றனர்.

பாஜகவில் இருந்து 14 பேர், ஐக்கிய ஜனதா தளத்தில் இருந்து 8 பேர், ராஷ்டிரிய லோக் சக்தி (ராம்விலாஸ்) கட்சியில் இருந்து 2 பேர், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா, ராஷ்டிரிய லோக் மோர்ச்சாவில் இருந்து தலா ஒருவர் அமைச்சர்களாகினர்.

இதையடுத்து, பிஹார் சட்டப்பேரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை முதன்முறையாகக் கூடியது. தற்காலிக சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட நரேந்திர நாராயண் யாதவ் முன்பாக, தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் முறைப்படி சட்டப்பேரவை உறுப்பினர்களாக பொறுப்பேற்றனர்.

இந்நிலையில், பிஹார் சட்டப்பேரவையின் சபாநாயகர் தேர்தல் இன்று நடைபெற்றது. சபாநாயகர் பதவிக்கு பிரேம் குமார் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளராக உள்ளார் என தற்காலிக சபாநாயகர் சட்டப்பேரவையில் அறிவித்தார். பின்னர், குரல் வாக்கெடுப்பின் மூலம் பிரேம் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.தற்காலிக சபாநாயகர் நரேந்திர நாராயண் யாதவ் இதை அவையில் அறிவித்தார்.

கயா டவுன் தொகுதியில் 8-வது முறையாக வெற்றி பெற்ற பிரேம் குமாரை, முதல்வர் நிதிஷ் குமாரும், எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவும் இணைந்து சபாநாயகர் இருக்கைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தனர்.

## விளையாட்டு செய்திகள்

## சென்னை ஸ்குவாஷ் போட்டி: ஜோஷ்னா சின்னப்பா வெற்றி



**சென்னை, டிச.3:**

ஹெச்சிஎல் ஸ்குவாஷ் இந்தியா டூர் 4 போட்டி சென்னையில் உள்ள இந்திய ஸ்குவாஷ் அகாடமியில் நேற்று தொடங்கியது. ரூ.13.40 லட்சம் பரிசுத் தொகை கொண்ட இந்தத் தொடர் வரும் 5ம் தேதி வரை நடைபெறுகிறது.

தொடக்க நாளில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய நட்சத்திரமான ஜோஷ்னா சின்னப்பா 11-3, 11-7, 11-6 என்ற செட் கணக்கில் சகநாட்டைச் சேர்ந்த அனிகா துபேவை தோற்கடித்தார். ஜோஷ்னா தனது அடுத்த ஆட்டத்தில் நியூஸிலாந்தின் எல்லா ஜேன் லாஷுடன் மோதுகிறார்.

தேசிய சாம்பியன்களான வேலவன் செந்தில் குமார், அனஹத் சிங் ஆகியோருக்கு முதல் சுற்றில் 'பை' வழங்கப் பட்டது. இதனால் அவர்கள் நேரடியாக 2-வது சுற்றில் மோத உள்ளனர்.

## யு 23 கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி சாம்பியன்




**மும்பை, டிச.3:**

ஆடவருக்கான யு-23 மாநில 'ஏ' ஒன்டே டிராபி தொடரின் இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு - உத்தர பிரதேசம் அணிகள் மோதின. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த தமிழக அணி 49.3 ஓவர்களில் 297 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது.

எஸ்.ஆர்.ஆதிஷ் 38 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் 53 ரன்கள் விளாசினார். முகமது அலி 57, மானவ் பராக் 57, பூபதி வைஷ்ஷ குமார் 37, ஆர்.கே.ஜெயந்த் 32 ரன்கள் சேர்த்தனர். உத்தர பிரதேச அணி தரப்பில் பிரசாந்த் வீர் 3 விக்கெட்களை கைப்பற்றினார். 298 ரன்கள் இலக்குடன் பேட் செய்த உத்தரபிரதேசம் அணி 47.5 ஓவர்களில் 241 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக பிரசாந்த் வீர் 65 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் 87 ரன்கள் விளாசினார். சமீர் ரிஸ்வி 41 ரன்கள் சேர்த்தார். தமிழக அணி சார்பில் முகமது அலி 46 ரன்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார். 56 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தமிழக அணி முதன்முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

## மகளிர் ஹாக்கி அணியின் பயிற்சியாளர் ராஜினாமா

**புதுடெல்லி, டிச.3:**

இந்திய மகளிர் ஹாக்கி அணியின் தலைமை பயிற்சியாளராக ஹரேந்திரா சிங் செயல்பட்டு வந்தார். இந்நிலையில் அவர், திடீரென தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதுதொடர்பாக அவர், ஹாக்கி இந்தியாவுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. சொந்த காரணங்களுக்காக ஹரேந்திரா சிங் விலகி உள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்க ஆடவர் ஹாக்கி அணிக்கு பயிற்சியாளராக செயல்பட்ட ஹரேந்திரா சிங்கை கடந்த 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்திய மகளிர் ஹாக்கி அணியின் தலைமை பயிற்சியாளராக ஹாக்கி இந்தியா நியமித்தது. அவரது பயிற்சியின் கீழ் இந்திய மகளிர் ஹாக்கி கடந்த ஓராண்டு காலமாக சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தவில்லை.

சர்வதேச ஹாக்கி சம்மேளனம் சார்பில் நடத்தப்பட்டு வரும் புரோ ஹாக்கி லீக்கில் இந்திய மகளிர் அணி 16 ஆட்டங்களில் விளையாடி இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றது. மேலும் அடுத்த சீசனுக்கு தகுதி பெறவும் தவறியது. இதன் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியால் ஹரேந்திரா சிங் விலகியதாகவும் கூறப்படுகிறது. புதிய பயிற்சியாளராக நெதர்லாந்தின் ஸ்ஜோர்ட் மரிஜ்னே நியமிக்கப்படக்கூடும் என தெரிகிறது.

அவரது பயிற்சியின் கீழ் இந்திய மகளிர் அணி 2021ம் ஆண்டு நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்கில் 4-வது இடம் பிடித்து இருந்தது. அவர், 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய மகளிர் ஹாக்கி அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

## பிரான்ஸ் ஜனாதிபதியுடன் ஜெலன்ஸ்கி சந்திப்பு

**மாஸ்கோ, டிச.3:**

உக்ரைன்-ரஷ்யா போர் நிறுத்த முன்மொ ழிவு உருவாக்கப்பட்டுள்ள நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பிரான்ஸ் ஜனாதி பதி மக்ரோனை சந்தித்துள்ளார். போரை தொட ர்ந்து நடத்த ஐரோ ப்பிய நாடுகள் திட்டமிடுகின்றன என்று ஹங்கேரி ஜனாதிபதி ஓப் ரான் எச்சரிக்கை விடுத்த சில நாட்களில் இந்த சந்திப்பு நடந்துள்ளது. இந்த சந்திப்பும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைத் திரட்டும் நோக்கிலானது என கூறப்படுகிறது.

## உலகச் சந்தையில் நைஜர் யுரேனியம்

**நைஜர், டிச.3:**

நைஜர் நாட்டின் ராணுவ அரசு 2025 ஜூன் மாதம் அந்நாட்டின் யுரேனியச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கியது. தற்போது சர்வதேசச் சந்தையில் யுரேனியத்தை விற்பனைக்கு வைப்பதாக அறிவித்துள்ளது.

சந்தை விதிகளின்படி தங்கள் இயற்கை வளங்களை முழுமையான சுதந்திரத்துடன், யார் வேண்டுமானாலும் வாங்கலாம் என்ற நிபந்தனையின் கீழ் விற்பதற்கு நைஜருக்குச் சட்டப்பூர்வ உரிமை உள்ளது என்று அந்நாட்டு அரசை நிர்வகிக்கும் ராணுவத் தளபதி ஜெனரல் அப்துர்ரஹ்மான் தியானி தெரிவித்துள்ளார்.

## பிரிட்டிஷ் ராணுவ போர்க்குற்றம் : மூத்த அதிகாரி வாக்குமூலம்

**ஆப்கன், டிச.3:**

ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் சிறப்புப் படை போர்க் குற்றங்களைச் செய்தது. இது பற்றி உயர் அதிகாரிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அந்நாட்டு ராணுவத்தின் முன்னாள் ராணுவ அதிகாரி பொது விசாரணைக் குழுவிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போரின்போது, அமெரிக்க ராணுவத்துடன் செயல்பட்ட பிரிட்டிஷ் ராணுவ வீரர்கள் சந்தேகம் என்ற பெயரில் 54 ஆப்கானிஸ்தர்களை சுட்டுக்கொலை செய்தது குறிப்பிடத்தக்கது.

## வெனிசுலா வான்வெளி மூடப்பட்டதாக அறிவித்த டிரம்ப்

**வாஷிங்டன், டிச.3:**

வெனிசுலா கடலோரப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க கப்பற்படை போர் விமானங்கள் தொடர் தாக்குதல்களையும் அத்து மீறல்களையும் செய்து வருகின்றன.

இந்நிலையில் அந்நாட்டு வான் வெளியை பயன்படுத்தும் விமானங்கள் அந்த வான்வெளி மூடப்பட்டுள்ள தாக கருதிக்கொள்ளவும் என டிரம்ப் அறிவித்துள்ளார். இது வெனிசுலா மீது அமெரிக்கா வான்வெளித்தாக்குதலை நடத்தக்கூடும் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது. இந்த அச்சுறுத்தல் பகைமை நிறைந்த காலனித்துவ நடவடிக்கை என வெனிசுலா கடுமையாகக் கண்டித்துள்ளது.

## பெண் பத்திரிகையாளருக்கு இஸ்ரேலில் பாலியல் வன்கொடுமை

**காசா, டிச.3:**

காசா நகரில் உள்ள அல்-ஷி∴பா மருத்துவமனை பகுதியில் பணியாற்றிய பாலஸ்தீன பெண் பத்திரிகையாளரை 2024 ஆம் ஆண்டு இஸ்ரேல் ராணுவம் கடத்திச்சென்றது.

அவரை 20 மாதங்கள் சிறையில் அடைத்து பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட உடல் ரீதியிலான சித்ரவதை செய்து கொடுமை செய்துள்ளது இஸ்ரேல் ராணுவம். பத்திரிகையாளர் உட்பட ஏழு பேர் கண்கள், கைகள் கட்டப்பட்டு தனிமையான பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு கும்பல் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் டிட்வா புயலுக்கு உயிரிழந்தோர் 334 ஆக அதிகரிப்பு; 400 பேரை காணவில்லை!

**கொழும்பு, டிச.3:**




டிட்வா புயல் பாதிப்பு காரணமாக இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கை கடல் பகுதியில் கடந்த மாதம் 26ம் தேதி உருவான டிட்வா புயல் இலங்கையை தாக்கிய பின் வங்கங் கடல் பகுதியில் கடந்த 29-ம் தேதி நுழைந்தது. இந்த புயல் காரணமாக இலங்கையில் கன மழை பெய்து வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. லட்சக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன.

இதையடுத்து இலங்கையில் அவசர நிலை அறிவிக்கப்பட்டு மீட்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பாதிக் கப்பட்ட 59 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் 1,500 முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா சார்பில் நிவாரண பொருட்கள் கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப்படை ஜம்போ விமானங்களில் அனுப்பி வைக்கப்பட்டன. நெருக்கடி நிலையை சமாளிக்க சர்வதேச அமைப்புகளின் உதவியை இலங்கை நாடியது.

இதையடுத்து மேலும் 10 டன் நிவாரண பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார். இலங்கையில் மழை பாதிப்பு குறைந்தாலும், தாழ்வான பகுதிகள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இங்கு வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 400 பேரை புயலுக்குப்பின் காணவில்லை. இவர்களை தேடும் பணி நடைபெறுகிறது.

வெள்ள பாதிப்பு காரணமாக பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இங்கு நாள் ஒன்றுக்கு 1,500 யூனிட் ரத்தம் தேவைப்படுகிறது. அதனால் மக்கள் அதிகளவில் ரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு மெல்ல மீண்டு வந்து கொண்டிருந்த இலங்கையில், இந்த டிட்வாபுயல் மிகப்பெரிய சேதத்தை விளைவித்திருக்கிறது.

## இந்தோனேசியாவில் புயல், வெள்ள பாதிப்புக்கு 604 பேர் பலி; 500 பேர் மாயம்

**ஜகார்த்தா, டிச.3:**



ஆசியாவின் ஒரு பகுதியாக உள்ள இந்தோனேசியாவில் கடந்த வாரம் ஏற்பட்ட பெருவெள்ளம் தொடர்ச்சியாக, 3 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா மற்றும் அசே ஆகிய 3 மாகாணங்களில் 14 லட்சம் பேர் பாதிப்பை எதிர்கொண்டு உள்ளனர்.

அரிய நிகழ்வாக மலாக்கா ஜலசந்தியில் ஏற்பட்ட சென்யார் என்ற சூறாவளி புயலால் கனமழை பெய்தும், நிலச்சரிவு ஏற்பட்டும் மக்கள் பலர் பலியாகி உள்ளனர். இதுவரை 500 பேர் உயிரிழந்து உள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர்.

ஆயிரக்கணக்கானோருக்கு, தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். அசே மாகாணத்தின் பிடீ ஜெயா பகுதியை சேர்ந்த அரினி அமலியா என்பவர் கூறும்போது, வெள்ள நீர் சுனாமி போன்று காணப்பட்டது. என்னுடைய பாட்டி, அவருடைய வாழ்நாளிலேயே மிக மோசம் வாய்ந்த சூழல் இது என கூறினார். அந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என்று அரினி கூறினார்.

வெள்ளத்தில் பாலங்கள் அடித்து செல்லப்பட்டும், சாலைகள் சேறும் சகதியும் சூழ்ந்தும் காணப்படுகின்றன. பலர் 3 நாட்களாக சாப்பிட உணவு கிடைக்காமல் பரிதவித்து வருகின்றனர். தூய குடிநீர், இணையதள வசதி, மின் இணைப்பு வசதியின்றி பலர் அவதியடைந்து வருகின்றனர். தொடர்ந்து, மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## இஸ்ரேலில் ஊழல் வழக்கில் மன்னிப்பு கோரிய பிரதமர்

**ஜெருசலேம், டிச.3:**

இஸ்ரேல் வரலாற்றில் பதவியில் இருக்கும்போது ஊழல் வழக்கு விசாரணையை எதிர்கொள்ளும் முதல் பிரதமர் பெஞ்சமின் ஆகும்.

இஸ்ரேலில்பிரதமர்பெஞ்சமின் நேட்டன்யாகு தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே கடந்த 2019-ம் ஆண்டு அவர் மீது ஊழல், பணமோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதுதொடர்பான வழக்கு விசாரணை கோர்ட்டில் நடந்து வருகிறது. ஆனால் இவர் மீதான இந்த குற்றச்சாட்டுகளுக்கு டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்தார். மேலும் அவருக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இந்தநிலையில் பொதுமன்னிப்பு வழங்கி ஊழல் வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு 111 பக்கம் கொண்ட கோரிக்கை மனுவை அதிபர் இசாக் எர்சோக்கிடம் அவர் அளித்துள்ளார். இதுதொடர்பான ஆவணங்களையும் அதிபர் மாளிகையின் சட்ட அலுவலகத்தில் அவர் சமர்ப்பித்தார். வழக்கு நிலுவையில் இருக்கும்போதே அதிபரிடம் மன்னிப்பு கோரிய சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இவரது இந்த செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியினர் டெல் அவிவ் நகரில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## பெரு நாட்டில் நிலச்சரிவு: இரண்டு படகுகள் மூழ்கியதில் 12 பேர் உயிரிழப்பு



**லிமா, டிச.3:**

தென் அமெரிக்க நாடான பெரு நாட்டில் நிலச்சரிவு காரணமாக இரண்டு படகுகள் மூழ்கின. இதில் 3 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர், பலர் மாயமாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அந்த நாட்டில் பாயும் அமேசான் ஆற்று படுகையின் படகு துறையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் இதில் நீரில் மூழ்கின. இந்த சம்பவம் அங்குள்ள உகாயாலி பகுதியில் நடைபெற்றுள்ளது. இதை அந்நாட்டு காவல் துறை உறுதி செய்துள்ளதாக அமெரிக்காவில் செயல்படும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மூழ்கிய படகுகளில் எத்தனை பேர் இருந்தனர் என்பது குறித்த உறுதியான தகவல் இன்னும் வெளியாகவில்லை. இருப்பினும் அதில் ஒரு படகில் சுமார் 50 பேர் இருந்ததாக களத்தில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. இதுவரை உயிரிழந்தவர்களில் 9 பேரின் உடல் மீட்கப்பட்டுள்ளன.

முதற்கட்ட தகவல்களின் அடிப்படையில் 25 பேர் காயமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. ஆற்றில் பாயும் நீரின் வேகம் மற்றும் நீர் சுழற்சி காரணமாக மீட்பு பணி மிகவும் சவாலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலம் என்பதாலும், சம்பவ இடத்தில் பனி மூட்டம் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்..

## சிங்கப்பூரில் நடப்பாண்டில் 17 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்: 2003-க்குப் பின் அதிகம்!



**சிங்கப்பூர், டிச.3:**

சிங்கப்பூரில் கடந்த ஒரு வாரத்தில் மூன்று பேர் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர். இதன் மூலம் சிங்கப்பூரில் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 17ஆக உயர்ந்துள்ளது. இது 2003-ம் ஆண்டுக்குப் பிறகு அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

கடந்த வாரம் போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட சிங்கப்பூரைச் சேர்ந்த முகமது ரிஸ்வான் பின் அக்பர் ஹூசைன், பெயர் வெளியிடப்படாத மற்றொரு சிங்கப்பூர் நபர், மலேசியாவைச் சேர்ந்த சாமிநாதன் செல்வராஜூ ஆகிய மூன்று பேர் தூக்கிலிடப்பட்டனர். நாளை (புதன்கிழமை) நடைபெறும் விசாரணைக்கு முன்னதாக இந்த தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் மிகவும் கடுமையான போதைப்பொருள் தடுப்புச் சட்டங்களைக் கொண்டுள்ளது. 15 கிராம் ஹெராயின் அல்லது 500 கிராம் கஞ்சா போன்ற குறிப்பிடத்தக்க அளவு போதைப்பொருட்களைக் கடத்துபவர்களுக்கு அங்கு கட்டாய மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

தூக்கிலிடப்பட்ட சாமினாதன் கடந்த 2022 ஆம் ஆண்டு சிங்கப்பூர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். ஆனால் அதை நீதிபதிகள் நிராகரித்து விட்டனர். இந்த மரண தண்டனை பெரும்பாலும் கீழ்மட்ட கடத்தல்காரர்களை மட்டுமே தண்டிப்பதாகவும், முக்கிய குற்றவாளிகளை தப்பிக்க விடுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

# பேரிடரில் தவிக்கும் மக்களுக்கு காலாவதியான பொருட்களை அனுப்பிய பாகிஸ்தான்... கொந்தளித்த இலங்கை

**கொழும்பு, டிச.3:**




பாகிஸ்தானிடம் தூதரக அளவிலும், வேறு வழிகளிலும் தன்னுடைய அதிருப்தியை இலங்கை தெரியப்படுத்தி உள்ளது.

இலங்கையில் கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகிறது. அதனுடன் சமீபத்தில் வங்க கடலில் உருவான டிட்வா புயலும் சேர்ந்து கொண்டது. இதனால், கனமழையுடன் நிலச்சரிவும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த கனமழை எதிரொலியாக வீடுகள், குடியிருப்புகள் மற்றும் கட்டிடங்கள் என பல்வேறு பகுதிகளிலும் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இலங்கையில் கனமழையில் சிக்கி இதுவரை 330-க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். 400 பேரை காணவில்லை. பலர் காயமடைந்து உள்ளனர் என இலங்கை பேரிடர் மேலாண்மையம் தெரிவிக்கின்றது.

புயல் பாதிப்பு மற்றும் மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு உள்ள இலங்கைவாசிகளுக்கு உதவிடும் வகையில், இந்தியா சார்பில் ஆபரேசன் சாகர்பந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. புயல் பாதிப்பு செய்தியை தொடர்ந்து, 2 இந்திய கடற்படையின் கப்பல்களில் 9.5 டன்கள் நிவாரண பொருட்கள் உடனடியாக கொண்டு சேர்க்கப்பட்டன. இதுதவிர, இந்திய விமான படையின் 3 விமானங்கள் 31.5 டன்கள் அளவிலான நிவாரண பொருட்களையும், இதன்பின்னர் சுகன்யா கப்பலில் 12 டன்கள் நிவாரண பொருட்கள் என மொத்தம் 53 டன்கள் நிவாரண பொருட்கள் இலங்கையை சென்றடைந்துள்ளன.

இதேபோன்று சீனா, பாகிஸ்தானும் உதவி வருகிறது. இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் நிவாரண பொருட்களை விமானத்தில் அனுப்பி வைத்தது. மருந்து பொருட்கள், உணவு பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை அனுப்பியது.

அதனை வாங்கி பார்த்த இலங்கை அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். அதில், 2024-ம் ஆண்டு காலாவதியான தேதியை கொண்ட பல பொட்டலங்களும் இருந்துள்ளன.

அவசரகால தேவைக்காக அனுப்பிய பல பொருட்கள் பயன்படுத்த முடியாதவையாகவும், காலாவதியாகவும் இருந்துள்ளன.

இதனை, இலங்கையின் பேரிடர் நிர்வாகம் மற்றும் வெளிவிவகார துறையினர் தீவிர கவனத்தில் கொண்டனர். பாகிஸ்தானிடம் தூதரக அளவிலும், வேறு வழிகளிலும் தன்னுடைய அதிருப்தியை இலங்கை தெரியப்படுத்தி உள்ளது.